www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெ

# தமிழோசை
THAMIZHOSAI

இவ்விதழிலே:.......
எங்கள் பரம்பரை
யாழ்ப்பாணத்தான்..
நினைவுகளும் நிகழ்வுகளும்...
சொற்ச தூரங்கம்
எம்.ஜி.ஆர்.........

ஓசை :1
ஒலி :3
ஆங்கீரஸ ஸூ ஆடி மீ 16 உ (31.7 - 13.8.1992) 253 Western Avenue London W3 0PP Tel: 44-(0)81-993 7652 Fax: 44-(0)81-993 8611

# தமிழ்க் கட்சிகளிடையே மீண்டும் பிளவு
## அரசு- புலிகள் பேச்சுக்கு ரெலோ அழைப்பு

(நமது கொழும்பு நிருபர்)

**'ரெலோ' இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் இலங்கை அரசையும், விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட விடுத்த எதிர்பாராத கோரிக்கையையடுத்து, அண்மையில் அமைக்கப்பட்ட ஏழு கட்சிகளின் கூட்டில் பிளவு ஏற்பட்டுள்ளது. அத்துடன், இக்கட்சிகளுடன் வடக்கு - கிழக்கு இணைப்புபற்றி இரகசிய பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்த முஸ்லிம் கட்சியின் உறவிலும் பிரிவு ஏற்பட்டுள்ளது.**

'ரெலோ' இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் திரு என்.சிறிகாந்தா ஜூலை 27ந் தேதி வெளியான 'த ஐலண்ட்' பத்திரிகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டதன் மூலம் சர்ச்சையைக் கிளப்பினார். அரசியல், இராணுவ ரீதிகளில் இப்பொழுது கருத்திற் கொள்ள வேண்டிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் விதத்தில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று அவர் அந்த அறிக்கையில் தெரிவித்திருந்தார். அத்துடன், அந்தப் பேச்சுவார்த்தை தற்போதுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு அமைப்பு முறைக்கு புறம்பானதாக மேற்கொள்ளப்படலாமென்றும் அவர் கூறியிருந்தார்.

அவரது அறிக்கை வெளியான முதல் தினம்தான், கடந்தவார இறுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலில் சில புலி இயக்கத்தினரையும் கொண்டு வந்ததாக கூட்டணியின் யாழ் மாவட்ட எம்.பி. குற்றஞ்சாட்டியிருந்தார். வேறு சிலர் இவர்கள் பிரேமதாசா அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தைக்காக கொண்டுவரப் பட்டதாக கூறினர். இதை ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு பிரட்மன் வீரக்கோன் மறுத்திருந்தார்.

பாராளுமன்றத்தில் இரு எம்.பிக்களைக் கொண்ட 'ரெலோ', மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ், ஈபிஆர்எல்எவ், ஈரோஸ், புளொட், ஈஎன்டிஎல்எவ் ஆகியவற்றுடன் இணைந்து இந்த ஏழு கட்சிக்கூட்டை அமைத்திருந்தது. இக்கூட்டுக்கு திரு தொண்டமானும் ஆதரவு நல்குகிறார்.

இராணுவம் தற்போது உச்சநிலையில் இருப்பதாகவும் எனவே அரசு ஒரு பலமான நிலையிலிருந்து இப்போது புலிகளுடன் பேசமுடியுமென்றும் திரு சிறிகாந்தா கூறியுள்ளார். அவரது ஆலோசனைகள் 'மக்களின் நலன் கருதியே' என்று குறிப்பிட்ட அவர், இதனால் புலிகளின் பிரதிநிதித்துவத்தை தமது இயக்கம் ஏற்றுக்கொள்கிறதென்பதல்ல என்றும் தொடர்ந்தும் அவர்களுடன் இராணுவ அரசியல் வழிகளில் மோதுவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ் குடா நாட்டை மீள கைப்பற்ற இராணுவம் முயன்றால் அப்போது இருதரப்பிலும் பாரிய இழப்புகள் ஏற்படும். இதைத் தவிர்ப்பதற்காக மறைமுகமாக இப்படியொரு பேச்சுவார்த்தைக்கு வழிசமைக்கும் ஒரு ஒரு போர் நிறுத்தத்துக்கு தாம் ஆலோசனை தெரிவிப்பதாக அவர் கருத்துத் தெரிவித்தார். 'புலிகள் இனிமேலும் தம்மால் தாக்குப்பிடிக்க முடியாது' என்று கருதி பேச்சுவார்த்தைக்கு முன் வந்தால் நாம் அதைத் தடுக்கப் போவதில்லை' என்று ஈபிடிபி அரசியல் செயலாளர் திரு என்.ரமேஷ் இதுபற்றி தெரிவித்தார்.

அரசுக்கும் புலிகளுக்குமிடையே செஞ்சிலுவைச் சங்கத்தினதும் வேறும்சில வெளிநாட்டு சக்திகளினதும் ஒத்துழைப்புடன் இரகசிய பேச்சுக்கள் நடப்பதாக கருதப்பட்ட இவ்வேளையில் அரசுக்கு ஆதரவான 'ரெலோ'வின் இச்செயல் அரசியல், ராஜதந்திர வட்டாரங்களில் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அரசாங்கத்தின் கருத்தைத்தான் 'ரெலோ' எதிரொலிப்பதாக பல ராஜதந்திரிகள் நம்புகின்றனர். 'பொது அபிப்பிராயத்தை அறிவதற்கான அரசின் ஓர் ஒத்திக்கையே இது' என்று சொன்ன மேல்நாட்டு ராஜதந்திரி ஒருவர் அண்மைக் காலங்களில் ஜனாதிபதி பிரேமதாசாவும், பிரதமர் விஜேதுங்காவும் இவ்வாண்டு முடிவுக்குள் போர் முடிவடைந்துவிடும் என்று நம்பிக்கை தெரிவத்துவந்ததை சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, முஸ்லிம்களுடனுமான போர்நிறுத் தத்துக்கு புளொட் புலிகளைக் கோரவில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் திரு அஷ்ரப் புளொட்மீது குற்றம் சுமத்தி புலிகளுடன் போராடுவதற்காக இலங்கை இராணுவத்தில் ஜிகாத் (புனித யுத்தம்) படை என்ற ஒரு தனி படைபிரிவை நிறுவ வேண்டும் என்றும் கேட்டார். இதன் மூலம் இன, மத துவேஷங்களை அவர் தூண்டுவதாக புளொட் தலைவர் திரு தர்மலிங்கம் சித்தார்த்தன் பதில் தெரிவித்தார். இணைக்கப் பட்ட வட- கிழக்கில் முஸ்லிம்களுக்கு ஒரு தனிப்பிரிவுபற்றி 7 கட்சிக் கூட்டுடன் இரகசியமாகப் பேசிவந்த முஸ்லிம் காங்கிரஸ், புளொட் டுடனான இந்த 'மோதலால்' திடீரென்று அந்தப் பேச்சுக்களைத் துண்டித்துக் கொண்டிருக்கிறது.



**திருமுருகன் பவனி தேரோட்டம்!-லண்டன் அருள்பெருகும் முகமலரின் எழில்தோட்டம்**

ஜூலை 26ந் தேதி நடைபெற்ற லண்டன் ஸ்ரீமுருகன் கோவில் தேர் உற்சவத்தில் ஒரு காட்சி

# கிழக்கிலங்கையில் புலிகள் தாக்குதல்
# 35 படையினர் பலி

-கொழும்பு நிருபர்-

கிழக்கு மகாணத்தில் பாதுகாப்பு படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இருவேறு தாக்குதல்களில் 21 இராணுவ வீரர்களும் 14 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் கொல்லப்பட்டனர். இந்த மோதல்களில் புலிகள் தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் குறித்து எதுவும் தெரியவில்லை என்று கூட்டுப்படை தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தி லுள்ள சாம்பல்தீவு, அத்திமோட்டை பகுதிகளிலுள்ள பொலிஸ் காவல் அரண்கள் மீது கடந்த புதன்கிழமை அதிகாலை 1.00 மணியளவில் சுமார் 100 புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர். இங்க மோதலில் 4 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் ஒரு இரானுவ வீரரும் கொல்லப் பட்டனர். புலிகள் தரப்பில் ஏற்பட்ட இழுப்புகள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதே வேளை பொலநறுவை மட்டக்களப்பு வீதியில் நாவலடி மீயன் குளம் அருகே புதன் காலை 8.30 மணிக்கு புலிகள் இராணுவ பொலிஸ் ரோந்து சேவை மீது தாக்குதல் மேற்கொண்டனர். தன்னியக்கத் துப்பாக்கிகள்,சிறு ஆயுதங்கள் ரொக்கட்டால் ஏவப்படும் கிரனைட்டுகள் ஆகியவற்றால் தாக்கியதில் 20 இராணுவ வீரர்களும் 10 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் கொல்லப்பட்டனர். இந்த மோதலில் புலிகள் தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் உடனடியதகத் தெரியவில்லை எனவும் கூட்டுப்படைத் தலைமையக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதே வேளை செவ்வாய்க் கிழமையன்று வடக்கில் இயக்கச்சி கிராமப்பகுதியில் இராணுவ வாகனமொன்று எல்.ரி.ரி.ஈ.யினரின் கண்ணி வெடிக்கு இலக்கானது. இதில் நான்கு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதுடன் 4 பேர் காயமடைந்திருப்பதாகவும் இராணுவ வட்டாரம் தெரிவித்தது. எல்.ரி.ரி.ஈ.யினர் மேற்கொண்டுள்ள இத்திடீர் தாக்குதல்களின் போது இராணுவம் மேற்கொண்ட எதிர் நடவடிக்கையில் எல்.ரி.ரி.ஈ.யினர் தரப்பில் எத்தனை பேர் கொல்லப் பட்டனர் என்ற விபரம் உடனடியாக தெரியவில்லை என்றும் அந்த பேச்சாளர் குறிப்பிட்டார்.

# ஒரு போத்தல் மண்ணெய் ரூபா 120

யாழ்ப்பாணக்கில் ஒரு போத்தல் மண்ணெண்ணெய் 120 ரூபாவுக்குத் தற்பொழுது விற்கப்படுகிறது. ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் 80 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. சவர்க்காரக் கட்டி ஒன்று 15 ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

யாழ் குடாநாட்டில் மண்ணெண்ணெய் தேங்காய் எண்ணெய் சவர்காரம் ஆகியவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாகவே இவற்றின் விலைகள் விஷம் போல ஏறுகின்றன.

கொம்படி, ஊரியான் பாதைகள் மூடப்பட்டதன் விளைவாகப் போக்குவரத்து தடைப்பட்டதன் விளைவாகவே இவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

லண்டனிலிருந்துவெளியாகும்அனைத்துலகதமிழர்பத்திரிகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையில் அமெரிக்க வானொலி

(கொழும்பு நிருபர்)

சர்ச்சைக்குரியதான வொய்ஸ் ஒவ் அமெரிக்காவின் புதியஅஞ்சல் நிலையத்துக்கான நிருமாண வேலைகள் 1993 மார்ச் மாதத்தில் ஆரம்பமாகவிருக்கின்றன. கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் தகவல் அதிகாரி திரு மூறெர் இதனைத் தெரிவித்தார். தடங்கலெதுவுமில்லாவிட்டால் 1995 முற்பகுதியில் நிலையம் செயற்பட ஆரம்பிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை வானொலியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி மத்திய, தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்காக இலங்கையை ஓர் அஞ்சல் நிலையமாக 50களிலிருந்தே அமெரிக்கா பயன்படுத்தி வந்தது. இதனை நவீன மயப்படுத்துவதற்கான ஓர் உடன்படிக்கையை ஜெ.ஆர்.ஜயவர்த்தன அரசு காலத்தில் 1985இல் அது புதுப்பித்தது. இலங்கை அரசாங்கம் இதன் நடவடிக்கைகளுக்காக சிலாபம்- நாத்தாண்டியா கரையோரப் பகுதியில் 413 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு வழங்கியது. தென்னிந்தியாவின் கன்னியாகுமரியிலிருந்து இது சில நூறு மைல்கள் தொலைவில் உள்ளது.

இந்த உடன்படிக்கை புதுடில்லியிலிருந்து எதிர்ப்பை கியப்பியது. இந்தியாவின் இராணுவ தொலைத்தொடர்புகளையும் சோவியத்தின் நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும் டியாகோ காஷியா தளத்தை வலுப்படுத்துவதற்குமான நடவடிக்கை என்று இந்தியா கூறியது.

இந்தியா சோவியத் பக்கம் சார்ந்து இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழருக்கு முழு அளவிலான ஆதரவையும் அளித்துக் கொண்டிருக்கையில் இந்நிலையம் இரு அயல் நாடுகளிடையே வெளிநாட்டுக் கொள்கையில் மோதலை ஏற்படுத்தியது. 1987இல் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது ஜயவர்த்தனா இதில் தாமதத்தை ஏற்படுத்தினார்.

இப்பொழுது டில்லிக்கும் வாஷிங்டனுக்குமிடையேயான அரசியல் பாதுகாப்பு ஒத்துழைப்பில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

புதிய நிலையத்துக்கான செலவு 60 மில்லியன் அமெரிக்க டாலராகும்.



இலங்கையில் 1983 ஜுலை இனப்படுகொலையின் 9வது ஆண்டு நிறைவையொட்டி லண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஹைட்பார்க்கில் ஆரம்பமாகி லண்டனின் பிரதான வீதி ஒன்றின் வழியே வருவதைக் காணலாம்.

# மைனர் பெண்ணை மணந்த ஷேக் விமான நிலையத்தில் கைது

பம்பாய்

பதினைந்து வயது மைனர் பெண்ணை திருமணம் செய்து கொண்டு வெளிநாடு செல்ல இருந்த 57 வயது அரபிய நாட்டுக்காரர் பம்பாய் விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

அரபு நாட்டு ஷேக்குகளுக்கு இங்கு மைனர் முஸ்லிம் பெண்களை திருமணம் செய்து வைப்பது தொடர் கதையாகவே நடந்து வருகிறது. அமீனா என்ற 11 வயது பெண்ணை 60 வயது கிழவருக்கு திருமணம் செய்து வைத்ததில் இருந்து இம்மாதிரியான சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வருகின்றன. விமான நிலையங்களில் உள்ள பாஸ்போட் அதிகாரிகள் இவ்விஷயத்தில் கவனமாக இருந்து இது போன்ற நபர்களை பிடித்து வருகின்றனர்.

பதினைந்து வயது முஸ்லிம் மைனர் பெண்ணை திருமணம் செய்து கொண்டு வெளிநாடு செல்ல பம்பாய் சாகர் விமான நிலையத்திற்கு வந்த சையத் அகமது சைதுல்லா என்ற அரபு நாட்டுக்காரரை போலீசார் கைது செய்தனர்.

இவரை விசாரணை செய்ததில் பல உண்மைகள் வெளிவந்தன. துபாயில் வாட்ச்மேனாக சையத் அகமத் வேலை செய்து வருகிறார். இவர் வைத்திருந்த நிக்கா நாமா (திருமண பத்திரம்) ஐதரபாத் காஜி கொடுத்தது. இதில் பெண்ணின் வயது 23 என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

விமான நிலைய போலீசாருக்கு பெண் வயது மீது சந்தேகம் வந்தது. உடனே நாக்படாவில் உள்ள போலீஸ் மருத்துவமனைக்கு சோதனைக்காக இந்தப் பெண்ணை அனுப்பி வைத்தனர். சோதனையில் இந்தப் பெண்ணுக்கு 15 அல்லது 16 வயது இருக்கும் என்று குறிப்பிட்டனர்.

திருமணம் நடத்தி வைத்த காஜி, மற்றும் பெண்ணின் பெற்றோரை பம்பாய்க்கு கொண்டுவர போலீஸ் படை ஒன்று ஐதரபாத் விரைந்துள்ளது.

பெண்ணின் பெற்றோருக்கு நாலாயிரம் ரூபாய் கொடுத்ததாக சையத் முகமது போலீசிடம் தெரிவித்துள்ளார். குழந்தை திருமண சட்டத்தில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். குழந்தைகள் கோர்ட்டில் மைனர் பெண் ஒப்படைக்கப்பட்டுள்ளாள்.

# மீண்டும் காற்றினிலே வரும் கீதம்



தெற்கு இலண்டனிலிருந்து ஒலிபரப்பாகிவரும் ஈஸ்டர்ன் F.M வானொலியின் "காற்றினிலே வரும் கீதம்" தமிழ் நிகழ்ச்சி மீண்டும் ஒலிக்க ஆரம்பித்துள்ளது. குமாரி வித்யா குகானந்தன் நிகழ்ச்சியின் அறிவிப்பாளராக பணியாற்றுகிறார்.

அடையாறு லக்ஷ்மன், அடையாறு ராமராவ் சகோதரர்களிடம் பரதம் பயின்ற குமாரி வித்யா மூன்று வருடங்களுக்கு முன் அரங்கேற்றியவர். இங்கிலாந்தின் பல நகரங்களிலும் நடன நிகழ்ச்சிகளை அளித்திருக்கிறார்.

இனிய குரல்வளம் கொண்ட வித்யா, ஒலிபரப்புக்கலையிலும் திறமை மிக்கவர்.வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் 2 மணிமுதல் 3 மணிவரை F.M 100.4 மீட்டர் அலைவரிசையில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை திரு விமல் சொக்கநாதன் தயாரித்து வழங்குகிறார்.

## அகதிகளாக வரும் இந்துக்கள்

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் ஆயிரக்கணக்கான இந்துக்களும், சீக்கியர்களும் ஆப்கனிஸ்தானிலிருந்து அகதிகளாக இந்தியாவுக்கு திரும்பி வந்துள்ளனர்.


ஆப்கன் தலைநகர் காபூலில் ஏராளமான இந்து குடும்பங்களும் உள்ளன. முஜாகிதீன் ஆட்சி ஆப்கானிஸ்தானில் அமைந்திருந்து இந்துக்களும், சீக்கியர்களும் குறி வைத்து தாக்கப்பட்டு வருகின்றனர். இவர்களின் கடைகள் சூறையாடப்பட்டன. பல இந்துக்கள் கொல்லப்பட்டனர். கடந்த மாதம் காபூலில் ஒரு இந்து குடும்பத்தை சேர்ந்த ஐந்து பேரை ஆப்கன் தீவிரவாதிகள் நடுத்தெருவில் மின்சாரம் பாய்ச்சி கொன்றனர்.

ஆப்கனிஸ்தானில் இந்துக்களும், சீக்கியர்களும் வாழவே முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சொத்துக்கள், வீடுகளை விட்டுவிட்டு ஆப்கனிலிருந்து அகதிகளாக வந்து கொண்டிருக்கின்றனர். பாகிஸ்தான் வழியாக வரும் இவர்கள் அடாரி வழியாக ரயில் மூலமும், வாகா வழியாக தரை மார்க்கத்திலும் இந்தியாவுக்குள் வருகின்றனர்.

கடந்த மாதத்தில் மட்டும் 1800க்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக வந்துள்ளனர். இன்னும் சில நாட்களில் இது 30 ஆயிரத்தை எட்டும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானில் இப்போது ஏராளமான இந்திய அகதிகள் காத்துக் கொண்டுள்ளனர். ஆப்கனிலும் பாகிஸ்தானிலும் உள்ள இந்திய தூதரகங்களுடன் தொடர்பு கொண்டு அகதிகளை பத்திரமாக கொண்டு வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஒன்பதாவது ஆண்டு நினைவஞ்சலி



### சிலம்பு பொன்னையா

உரிமையாளர்: New Vijitha Stores, Colombo

பிறப்பு 1937.06.06 — இறப்பு 1983.07.26


எங்களை விட்டு பிரிந்து ஒன்பது ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு நம்மை விட்டு எந்நாளும்பிரியாது அன்புத் தெய்வமே! மாய்ந்த உங்கள் நினைவால் மனம் நொந்து வாழ்கிறோம். மீளாத் துயில் கொண்ட பாசத்திருவிளக்கே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் பாதத்தில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைச் செலுத்தி அஞ்சலி செய்கிறோம்.

**உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.**

58 புதுச் செட்டித் தெரு,
கொழும்பு- 13

கன்பொல்லை வீதி,
கரவெட்டி மேற்கு

## நன்றி நவிலல்



### திரு ஞா. இராசகுமார்

25.06.92 இல் காலமான எங்கள் அன்புத்தெய்வம் திரு ஞானராசா இராசகுமார் அவர்களின் ஈமக்கிரியைகளிலும் 25.07.92இல் நடைபெற்ற அவரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் நேரில் கலந்தும், தொலைத் தொடர்பு, அநுதாபச் செய்திகள் மூலமும், எமது ஆறாத்துயரில் பங்குகொண்டு தேற்றுதல் அளித்தவர்களுக்கும் இவ்வேளையில் எல்லாவிதமான உதவிகளைப் புரிந்தவர்களுக்கும் எம் எல்லோரதும் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்தி அடைவதாக!

திருமதி சரோஜினிதேவி இராசகுமார்
லாவண்யா,சயந்தன் (பிள்ளைகள்)
பாஸ்கரகுமார், கேதீஸ்வரகுமார் (சகோதரர்கள்)
திருமதி சண்முகரத்தினம், திருமதி யோகநாதன்,
திருமதி பாலகிருஷ்ணன் (சகோதரிகள்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏழைத் தமிழ்

ஆர்.நடராஜன்

மேல் நாடுகளில் உள்ள அளவுக்கு நிர்வாக இயல்பற்றிய நூல்கள் இன்னமும் இந்திய மொழிகளில் எழுதப்படவில்லை. இந்தியாவிலேயே ஆங்கிலத்தில் வெளிவரும் நூல்கள், கட்டுரைகள் என்று பார்த்தால் தமிழ் மிகவும் பின்தங்கி இருக்கிறது. பாமரர்களுக்கும் புரியக்கூடிய எளிய நிர்வாக இயல் நூல்கள், தரமான பாடப்புத்தங்கள் தமிழில் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவுகூட இல்லை. தமிழர்கள் தம் சிந்தனையை அந்தத் துறையில் இன்னமும் தீவிரமாகச் செலுத்தவில்லை என்பதே இதற்குக் காரணம்.

நிர்வாக இயலின் ஒவ்வொரு பிரிவின் நுணுக்கங்கள் பற்றியும் வெளிநாடுகளில் ஏராளமான புத்தகங்கள் வருடாவருடம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்கா இந்த வகையில் முதலிடம் பெறுகிறது. நிர்வாகிகள், நிர்வாகத் துறையில் ஓரளவு அறிமுகம் பெற்றவர்கள், பொதுவாக அதில் அக்கறை காட்டுபவர்கள் என்று பல தரப்பினரையும் கவரும் நூல்கள் நம் நாட்டிலும் ஆங்கிலத்தில் அவ்வப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. தமிழில் தான் இல்லை.

நம் நாட்டின் ஆங்கில ஏடுகள், வணிக இதழ்களில் நிர்வாகத் துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வருகிறார்கள். அவர்கள் இந்தியர்களே; குறிப்பாகச் சொல்வதானால் பெரும்பாலும் வட இந்தியர்களே. அத்தி பூத்தாற் போல சில தமிழர்களும் எழுதுகிறார்கள்; ஆனால் அவர்கள் வடஇந்திய நகரங்களில் வாழ்ந்து வருபவர்கள்.

ஏன் அப்படி?

வடக்கே சில நல்ல நிர்வாகவியல் உயர்கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. அங்கே மேல் நாட்டுப் பாடத் திட்டத்திற்குப் பெருமளவு ஈடுகொடுக்கும் நிர்வாக இயல் கல்வி கற்றுத் தரப்படுகிறது. அடிக்கடி பல கருத்தரங்குகள் கூட்டப்படுகின்றன. அவற்றில் பங்குபெறும் பலர் மேலை நாட்டுக் கல்விக் கூடங்களில் கற்றவர்கள்; சிலர் உள்நாட்டில் நிர்வாக இயல் கல்வி பெற்றவர்களாயினும் மேல் நாட்டு நிர்வாக அணுகுமுறைகள் பற்றித் தெரிந்து வைத்திருப்பவர்கள். நிர்வாகியாகப் பணியாற்றும் போதும் நிர்வாக இயலைக் கற்றுத்தரும் போதும் மேல்நாட்டு அணுகுமுறைகளுடன் சொந்த நாட்டுச் சாத்திரங்கள், இலக்கியங்கள் இவற்றுடன் ஒப்பிட்டுப்பார்க்கிறார்கள். அதைத் திறம்பட எடுத்துச் சொல்கிறார்கள்.

உலகிலேயே அதி அற்புதமான மூளை தமிழனுக்கே வாய்த்திருக்கிறது என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் தமிழன் உணர்ந்து கொள்ள வேண்டிய கசப்பான உண்மை இது. 'ஆயகலைகள் அறுபத்து நான்கு' என்று அழகாகப் பகுத்து, தொகுத்து, பட்டியலிடத் தெரிந்த தமிழன் அவற்றில் ஒன்றாகிய நிர்வாகக் கலையை ஏன் புறக்கணித்தான்? இதற்கு பதில் சொல்ல வேண்டுமென்றால் தமிழன் வேறு எந்தத் முறைகளில் அண்மைக் காலத்தில் தனது கவனத்தைச் செலுத்தி இருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டாக வேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றிச் சொல்வதென்றால் தமிழன் தன் முழு முதல் கவனத்தைத் திரைப்படங்களைப் பார்ப்பதிலும் நடிகர், நடிகையரைத் தொழுவதிலும், வெள்ளித் திரையின் மாயங்களில் மயங்கியும் அதன் வழி செல்லும் அரசியலில் மனம் ஒன்றியும், திரைப்படப்புகழ் சிலருக்கு அரசியலில் புகழ்பெற சுருதி சேர்த்த காலத்தில் அதற்குத் தாளம் போட்டும் காலத்தைக் கழித்து வருகிறான். எனவே விபரமறிந்த தமிழனும் பாமரத் தமிழனுக்கு வணிகவியல், பொருளாதாரம், நிர்வாகக்கலை போன்றவற்றின் போக்குகள் பற்றி எடுத்துச் சொல்லிப் பயனில்லை என்று சோர்ந்து போகிறான். அவனது நாவும், பேனாவும் தன்னொத்த விபரமறிந்தவர்களுக்கு ஆங்கிலத்தில் பேசுவதிலும் எழுதுவதிலும் பயன்படுகிறது, தமிழுக்கு அல்ல.

ஆங்கிலத்தில் வரும் அளவுக்கு தமிழில் எத்தனை வணிக இதழ்கள் இப்போது வெளிவருகின்றன என்று பார்த்தால் நம் மொழியின் ஏழ்மை நமக்குப் புலப்படும். தமிழ் இந்தத் துறையில் வெகு தொலைவு பின்தங்கி இருக்கிறது.

கலையும் பண்பாடும் மட்டுமே ஒரு மொழியின் வளர்ச்சிக்கு முழுமுதல் காரணமாகி விடுவதில்லை. அறிவியல், தொழிலியல், பொறியியல் துறை நூல்களும் ஒரு மொழி முழுமையாக வளம்பெற, வலுப்பெற உதவுகின்றன.

நிர்வாக இயல்பற்றி எழுதும் தமிழனும் படிக்கும் தமிழனும் நிர்வாகியாகத்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நிர்வாக இயலின் பல தன்மைகள், போக்குகள் எல்லோருக்குமே தெரிந்திருப்பது நல்லது. நிர்வாகிகளே தமது தகவல் அறிவில் மெத்தனமாக இருந்து விடமுடியாது. அவர்கள் தம் அறிவை, ஆற்றலை வளர்த்துக் கொள்ள மேலும் மேலும் படிக்கிறார்கள். அனுபவங்களை அசை போடுகிறார்கள்.

எனினும் பல திறமையான நிர்வாகிகள் தாம் உண்டு தம் பணி உண்டு என்ற அளவில் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். ஒரு சிலர் மட்டுமே அவ்வப்போது கருத்தரங்குகளில் கலந்து கொள்கிறார்கள். இந்த வகையிலும் அசல் தமிழர்களின் எண்ணிக்கை குறைவே. ஆக ஒரு மாயச் சூழலில் தமிழ் உலகம் சிக்கித் தவிக்கிறது. 'கொள்வார் இல்லை' என்கிறார்கள் கொடுப்பார். கொடுப்பார் இல்லையாதலில் கொள்வார் இல்லை என்கிறார்கள் பலர். இதில் முன் பகுதியே உண்மை என்பது குறிப்பிடத் தக்கது. இதற்கு அடிப்படைக் காரணம் உலகளாவிய செய்திகளைத் தெரிந்துகொண்டு முன்னேற வேண்டிய தமிழன் உள்ளூர் பிரபலங்களுக்குக் கொடி தூக்கி, வாழ்க, ஒழிக சொல்வதிலேயே பொழுதையும் புத்தியையும் கழிக்கிறான் என்பதே.

நிர்வாக இயல் ஈடுபாடுகளுக்கு ஒருவர் நிர்வாகியாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. வியாபாரியாகவும், தொழிலாளியாகவும் இருந்தாலும் நிர்வாக இயல் பற்றிய தகவல்கள் அவரை நல்ல தொழிலாளியாகவும், நல்ல வியாபாரியாகவும் உயர்த்தும். நிறுவனங்களின் நிர்வாகிகள் தமக்கென்று சங்கங்களை அமைத்துக் கொண்டு தகவல்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள். தொழிலாளர்களுக்கு என்று அரசாங்கம் ஒரு கல்வி வாரியத்தை உருவாக்கி இருக்கிறது. அதன் பாடத்திட்டத்திலும் நிர்வாக இயலின் சில அம்சங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் தொழிலாளர் கல்வி என்பது நம் நாட்டில் இன்னும் ஒரு சடங்காகவே தொடர்கிறது. முறையான தொரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டால் இந்தக்கல்வி வாரியம் திட்டமிடப்பட்ட இலக்குகளை எட்டவில்லை என்பது தெரியவரும்.

நிர்வாக இயலில் நம்மில் பலருக்கு ஈடுபாடும் தேர்ச்சியும் ஏற்படாமல் போனதற்கு மாநிலத்தின் தொழில் துறைத்தேக்கமும் ஒரு முக்கிய காரணம். உயர்நிலை நிர்வாகிகள் இந்தத் துறை பற்றி அதிகம் எழுதுவதில்லை என்பது இரண்டாவது காரணம். எப்பொழுதாவது அவர்கள் எழுதுவதிலும் கூட அவர்களது மேதாவித்தனம் வெளிப்படுகிற அளவுக்கு பாமரர்களுக்குத் தகவல் அறிவு கிடைப்பதில்லை. மூன்றாவது காரணம் முழுமையான இலவசத்திட்டங்கள் கொண்ட நமது சத்திரச் சாப்பாட்டுப் பொருளாதாரம். இது உழைக்கும் வழிகளில், உழைப்பின் அளவில், விளைவுகளில்போதிய அக்கறை காட்டுவதாக இல்லை.

உண்மையான நிர்வாகம் என்பது உழைப்பு, உழைக்கும் உலகத்தின் நடைமுறைகள், செயல்பாடுகள், சிக்கல்கள் இவற்றை எதிர்கொள்வது, வெல்வது பற்றியதே. ஆனால் இன்றைய நிலையில் நிர்வாகம் என்பது அரசாங்கத்தையும் ஆட்சியாளர்களையும் அநுசரித்துப் போவது என்று மட்டுமே புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. ஆள்பவருடன் ஒத்துப் போவது நிர்வாகத் திறமை என்பது ஓரளவுக்கு உண்மை. ஆனால் ஒத்துப் போவது வேறு, அடிமைப்பட்டுப் போவது வேறு. மற்ற நாடுகளில் முதல் வழி பின்பற்றப்படுகிறது என்றால் நம் நாட்டில் இரண்டாவது வழியே ஒரே வழியாக இருக்கிறது. தொழில்துறை, நிறுவன நிர்வாகம், கல்வி அமைப்புகள் யாவுமே ஆட்சியாளர்களை மையமாக வைத்தே இயங்குகிறது. தமிழ் நாட்டில், தமிழ்மொழியில் நிர்வாகக் கலை பற்றிய ஆர்வமும் ஞானமும் எழாமல் போவதற்கு இதுவும் ஒரு காரணம்.

வெற்றிகரமாக எதையாவது செய்து முடிக்க வேண்டுமென்றால் அதை அறிவியல் பூர்வமாக நிர்வாகவியல் வழிமுறைகளைக் கையாண்டு சாதிக்க வேண்டிய அவசியமில்லை. நாற்காலி நாயக நாயகியரைத் துதித்துக் கொண்டாடினால் போதுமானது என்ற உத்தி ஒரு நியதியாகவே நிலைத்து விட்டது. இந்தச் சூழலில் நிர்வாக இயலுடன் சேர்ந்து மொழி வளர்ச்சியுமே 'போற்றி, போற்றி' யுடன் நின்று விடுமோ என்று அஞ்சத் தோன்றுகிறது. நிர்வாக இயல் இலக்கணமும் "கீழ்மட்டத்தில் துட்டுவெட்டு; மேல் மட்டத்தில் கட்அவுட்டு" என்று நிலைத்து விடுமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. எங்கே சென்று 'எம்.பி.ஏ" படித்தாலும் இந்த இலக்கணப்படி நடந்து கொள்ளாவிட்டால் நிர்வாக இயல் படிப்பினால் பயன் ஏதும் இல்லை என்ற கருத்தும் இதே போக்கில் சமுதாயம் தொடர்ந்தால் வேரூன்றி விடும்.

சமுதாயமும் மொழியும் ஒன்றை ஒன்று சார்ந்தே வளர வேண்டியவை. இரண்டுமே புதியதுறைகளில் நுழைய வேண்டும்; அதுவே வளர்ச்சிக்கு வழி. இரண்டையுமே இப்போது மாநில அரசியல் திசை திருப்பி இருப்பதால் நிர்வாக இயல் போன்ற துறைகளில் ஆக்கபூர்வமான புதிய நூல்கள் எழுதப்பட இசைவான வாய்ப்புகள் இல்லை. எழுதப்படும் சிலவும் நாற்காலி நாயகமே சாலச் சிறந்தது என்று நிறுவ முற்படலாம். அதனால் நம் மொழிக்கோ, சமுதாயத்திற்கோ யாதொரு பயனுமில்லை. இருப்பினும் மனம் தளராமல் நடப்புகளை இணைத்து நிர்வாக இயல் நூல்களை எழுத முற்படுபவர்கள் தமிழ்ச் சமுதாயத்துடன் சேர்த்து மொழியையும் ஏழ்மையிலிருந்து மீட்கமுடியும்.

## மகாத்மா காந்தி விருது

(நமது நிருபர்)

பாரதிய வித்திய பவன் லண்டன் நிலையத்தின் 20ஆவது ஆண்டு நிறையிட்டு இந்தியாவின் தலை சிறந்த கலைஞர்கள் இருவருக்கு விருந்தளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தி விருது என்று இது அழைக்கப்படும். இவ்வாண்டுக்கான இவ்விருதுகள் சித்தார் மேதை பண்டிற் ரவி சங்கருக்கும் சருட் மேதை டாக்டர் அலி அக்பர் கானுக்கும் வழங்கப்படவுள்ளன.

காந்தி ஜயந்தி வைபவத்தின்போது இவ்விருதுகள் இவர்களுக்கு வழங்கப்படும்.

# சென்னைக் கடிதம்

நமது நிருபர்

தாய் நாட்டுத் தகவல்களுக்காக ஏங்கிப் போயிருக்கிறோம்; எங்களுக்கு ஏதாவது சொல்லுங்கள் என்று நீங்கள் கேட்டால் "இருக்கும் இடமே சுகம்" என்று நான் சொல்ல வேண்டியிருக்கும். காரணம் உங்களுக்குத் தகவல் பசி; எங்களுக்குத் தகவல்களை ஜீரணிக்க முடியவில்லை. எங்கள் ஆட்சியாளர்களில் சிலருக்குக் கிறுக்கு பிடித்து விட்டால் எங்களால் அவர்களை விரட்ட முடியவில்லை. வேறு எங்காவது போகலாம் என்றால் போக்கிடம் இல்லை. ஆக, உங்களுக்கு இங்கிருந்து சுகமான தகவல்கள் இல்லை; சோகமான தகவல்கள் நிறைய உண்டு. இந்த சென்னைக் கடிதம் பகுதியில் அவ்வப்போது இப்படிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்து கொள்வேன். உங்களுக்கு அதில் சுகம் கிடைக்கிறதோ இல்லையோ, எங்களுக்கு சோகம் குறையும் அல்லவா?

நீங்கள் அயல் நாட்டு இந்தியர்கள்; நாங்கள் சொந்த நாட்டு அடிமைகள். மக்களாட்சி, மன்னராட்சி நடக்கும் மாநிலங்கள் என்றால் அது பற்றி எல்லாம் சொல்ல முடியும். இங்கே தெய்வீக ஆட்சி நடைபெறுகிறது. எங்கள் தெய்வம் பற்றி முழுமையாகச் சொல்ல வேண்டுமென்றால் இந்தப் பத்திரிகை தன் ஆயுள் காலம் முழுவதும் அதையேதான் எழுதிக் கொண்டிருக்க வேண்டும். மாமதுரை



நகரில் சாட்சாத் மீனாக்ஷி அம்மனையே சவாலுக்கு அழைத்த எங்கள் புரட்சி தெய்வம் நடத்திய அடிமைகள் திருவிழா பற்றி முன்னைய இதழில் படித்திருப்பீர்கள்.

அதைப்பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாம்; எழுதலாம். ஆனாலும் நாம் யார் இதுபற்றியெல்லாம் சொல்வதற்கு, எழுதுவதற்கு? அநேகமாக எல்லாப் பத்திரிகைகளும் இந்தப் பைத்தியக்காரர்கள் திருவிழா பற்றிப் பக்கம் பக்கமாக எழுதின. அதனால் என்ன பயன்? அம்மையாரின் அடிமைப் பெருந் திருக்கூட்டம் பத்திரிகைகளைப் படித்தால் அறிவு வளர்ந்து விடுமோ, அறிவு வளர்ந்து விட்டால் அடிமைத்தனம் போய்விடுமோ என்று பயப்படுகிறது. அம்மையாருக்கு எதிரான கூட்டம் இதைப்பற்றிப் படித்து என்ன பயன்? இவை எல்லாம் "சுத்த மோசம்" என்று சொல்லப் போவதில்லை. பதிலுக்கு அதே மாதிரி ஒரு அலம்பல் செய்யத்திட்டமிடலாம்– தலைவர்கள் அங்கே அதைத் தடுத்தாலொழிய இதே மாதிரி இன்னொரு கேலிக் கூத்து அரங்கேறுவதைத் தடுக்க முடியாது.

"எனக்குத் திரளும் கூட்டத்தைப் பார்த்தாயா, ஏ, டில்லிக்கிழவா?" என்பது தான் மாநாட்டுச் செய்தி என்பது அடியார் திருக்கூட்டத்தின் பொதுக்கருத்து. எல்லாப் பத்திரிகைகளும் மதுரை மாநாட்டை விமரிசித்து எழுத ஊட்டியில் 'வேலையோடு உல்லாசத்தையும் அனுபவிக்கத் தங்கியிருந்த தமிழ் மக்களின் தனிப்பெருந் தெய்வம் ஒரு ஆங்கில நாளிதழ் நிருபரை அழைத்து பேட்டி கொடுத்து நல்ல செயல் களுக்கு அரசாங்கம் விளம்பரம் கொடுப்பது நியாயமே' என்று திருவாய் மலர்ந்தருளி இருக்கிறது. நல்ல செயல்கள் சொந்தச் செயல்கள், கட்சிச் செயல்களாக இருந்தாலும் அவை தெய்வீகத் திருவிளையாடல்கள் அல்லவா? தெய்வத்திற்கு மக்களைப் போல அரசாங்கமும் கடன்பட்டிருக்கிறது. இருக்காதா பின்னே?

## சொந்த நாட்டு அடிமைகள்

வாங்கும் சம்பளம் மாதம் ஒரு ரூபாய். ஆனால் சொந்தச் செலவில் தொகுதி மக்களுக்கு சேலைகள், வேட்டிகள், தையல் இயந்திரங்கள்; பள்ளி விழாவில் கலந்து கொண்டால் பள்ளிக்கு நன்கொடையாக ஒரு 'பஸ்'. எதிர்க்கட்சித் தலைவர் மகனுக்கு அன்பளிப்பு ஐந்து லட்ச ரூபாய்; பகைவனுக்கு அருளும் 'பாங்கு' இது! ஒரு ரூபாய் சம்பளத்தைக் கோடிகளாக மாற்றும் 'பாங்கு'ம் (BANK) -இதுவே! அவன் கிடக்கிறான் ஆர்ஷத் மேத்தா; பிழைக்கத் தெரியாதவன்! விவரம் தெரியாத சிலர் இதையெல்லாம் "லஞ்சம்" என்று சொல்லிக் கொச்சைப்படுத்துகிறார்கள். மக்கள் மக்களுக்குக் கொடுப்பது கைமாற்று; மக்கள் அதிகாரிகளுக்குக் கொடுப்பது லஞ்சம்; அதிகாரிகள் அமைச்ருக்குக் கொடுத்துப் பெறுவது அன்பளிப்பு; ஆனால் பக்தர்கள் தெய்வத்திற்கு, தெய்வாதி தெய்வத்திற்கு, தெய்வத்தையே வாழ வைக்கும் புரட்சித்தலைவிக்குக் கொடுப்பது "காணிக்கை"! ஐயா, காணிக்கை! புரிந்து கொள்ளுங்கள். 'கப்பம்' என்று சில அறிவிலிகள் சொல்கிறார்கள். மன்னருக்கு மன்னர் கட்டுவதே கப்பம். ஆனால் அம்மையார் 'ராணி' ஸ்தானத்திலிருந்து தெய்வமாக 'புரொமோஷன்' ஆகி சில மாதங்களாகி விட்டன. எனவே நீங்களும் வரலாறு தெரியாத வாசகர்கள் பட்டியலில் சேர்ந்து விடாதீர்கள். தெரிந்து கொள்ள வழி என்ன என்று கேட்பது நியாயமே.

கடல் கடந்து வாழும் உங்களுக்கு சென்னைக்கடிதம் வாயிலாக வரலாற்றை, மன்னிக்கவும், தேவ ரகஸ்யங்களை, தெய்வீகத் திருவிளையாடல்களை ஒவ்வொன்றாகப் புரிய வைப்பேன். கவலைப் படாதீர்கள்.

பொதுவாக இறைவனைக் கேசாதிபாதம், பாதாதிகேசம் என்று வர்ணிப்பது மரபு. நானும் அந்த மரபுப்படியே தானைத் தலைவியை, தர்மத்தின் தள நாயகியை பாதார விந்தங்களில் விழுந்து வணங்கும் பக்த சிரோண்மணிகளைப் பற்றி அடுத்த இதழில் சொல்வேன். பொது இடங்களில் தாள் தொட்டு வணங்கும் இந்தப்புதிய கலாச் சாரத்தைக் "காலாச்சாரம்" என்றும் சொல்லலாம். காத்திருங்கள் சொல்கிறேன்;



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திக் கதம்பம்

அவதூறு அவல்:

மத்திய வர்த்தகத்துறை இணை அமைச்சர் திரு.ப.சிதம்பரம் மத்திய அமைச்சரவையிலிருந்து நாடாளு மன்றம் கூடிய மறுநாளே பதவி விலகினார்.

பங்குச் சந்தை ஊழலின் எதிரொலி இது என்று கூறப்படுகிறது. சென்ற வாரம் பிரதமர் நரசிம்மராவ் பங்குச்சந்தை ஊழலில் தமது அமைச்சர்கள் எவரேனும் தொடர்பு கொண்டிருந்தது தெரியவந்தால் அவர்கள் தம் அமைச்சரவையில் இருக்க மாட்டார்கள் என்றார். அதையடுத்து ப.சிதம்பரத்தின் ராஜிநாமா வந்தாலும், அவருக்கும் ஹர்ஷத் மேத்தா ஊழலுக்கும் நேரடியான தொடர்பு இல்லை எனலாம்.

சிதம்பரத்தின் மனைவி வழக்கறிஞர் நளினி சிதம்பரம் ஒரு நிறுவனத்தில் ரூ. 2.50 லட்சம் முதலீடு செய்தி ருந்தார். அந்த நிறுவனம் பங்குச் சந்தை ஊழலில் சிக்கியிருக்கிறது; அவ்வளவுதான். எந்தவித நேரடித் தொடர்பும் அவருக்கு இல்லை. எனினும் சிதம்பரத்தைப் பிடிக்காத, தமிழ்நாட்டு, டெல்லி அரசியல் வாதிகள், அதிகாரிகளுக்கு இது ஒரு அவதூறு அவல்.

அசலும் நிழலும்

தடா சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் தி.மு.க. அமைச்சர் சுப்பு லட்சுமி, அவரது கணவர் ஜகதீசன் இருவரையும் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி மதுரைச் சிறையில் சந்தித்துப் பேசினார்.

தடா கைதிகளை உறவினர்கள், நண்பர்கள் சந்திக்க அரசு தடை செய்திருந்தது. நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து, அரசு ஆணையை விலக்க வைத்து கருணாநிதி இவர்களைச் சந்தித் திருக்கிறார்.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவும் அடைக்கலமும் கொடுத்தார் என்பதே சுப்புலட்சுமி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு. இதே குற்றத்திற்காக தமிழக முன்னாள் உள்துறைச் செயலர் ஆர்.நாகராஜன் தடா வழியில் சிறையில் அடைக்கப்பட்டார். அப் போது சில காவல் துறை அதி காரிகளே ஆளும் கட்சியின் தூதர்களாகச் சென்று சந்தித்தனர் என்று சொல்லப்படுகிறது. இப் பொழுது நாகராஜன் ஜாமீனில் இருக்கிறார். ஒரு காலத்தில் 'நிழல் முதல்வர்' என்று சொல்லப் பட்ட அவரது அசல் முதல்வர் கருணாநிதி அவரைச் சிறையில் சந்திக்கவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

## ந.சாவித்திரி

புதிராக ஒரு புத்தகம்

எம்ஜியார்- அவர் யார்? என்று கேட்கும் அளவுக்கு அவரது முன்னாள் திரையுலக, நனவுலக நனி, நாயகி, மூவுலகும் போற்றும் முதல்வர் பெருந்தகை ஜெயலலிதா, எம்ஜியார் நினைவுகளுக்கு இரும்புத்திரை போட்டு வரும் இந்த நாளில் `MGR: THE MAN AND THE MYTH' என்ற நூலை பெங்களூரில் உள்ள PANTHER பதிப்பகம் ரூ.195 விலையில் வெளியிட்டுள்ளது. இதற்குப் பல சிறப்புகள்.

-எழுதியவர் எம்ஜியாரின் நிழலாக, ஆலோசகராகச் செயல்பட்ட போலீஸ் உயர் அதிகாரி கே.மோகனதாஸ்.

-இன்னும் கோவையாக நிகழ்ச்சிகளைத் தொடுத்திருக்கலாம்; சிலவற்றிற்குத் தேதிகளைக் குறித் திருக்கலாம் என்று புத்தகம் என்ற முறையில் சில குறைகள் உள்ளன. ஆயினும் பல பத்திரி கைகள் இந்தப் புத்தகத்திலிருந்து சில பகு திகளை மொழி பெயர்த்து வெளி யிடப்பட்டுள்ளன. எதிர்க் கட்சிப் பத்திரிகைகள் தமக்குத் தோதான பகுதிகளைத் தேர்ந் தெடுத்துள்ளன.

-வெளியீட்டு விழாவில் படித் தவர்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டார்கள். எம்ஜியாருக்கு அல்ல; மோகனதாசுக்கு இந்தக் கூட்டம் என்று சொல்லப்பட்டது. இந்த ஆங்கிலப் புத்தகத்தைத் தமிழில் அதே பதிப்பாளருக்காக மொழிபெயர்த்துத் தருபவர் சென்னை அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் ஆர்.நடரா ஜன். எம்ஜியார் ஆட்சிக்காலத்தில் இவர் 'இந்து' பத்திரிகை நிருபராகப் பணி யாற்றியவர்.

## காங்கிரஸ் அதிமுக உறவில் விரிசல்

சென்னை

காங்கிரஸ் கட்சிக்கும் அதன் தோழமைக் கட்சியான அ.தி.மு.க. வுக்கும் உள்ள உறவில் மீண்டும் விரிசல் ஏற்பட்டுள்ளது. 1991ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் அ.தி.மு.க வெற்றிக்கு ராஜீவ் அனுதாப அலை காரணமல்ல என்று ஜெயலலிதா குறிப்பிட்டார். மதுரையில் நடந்த அ.தி.மு.க மாநாட்டில் இவ்வாறு அவர் பேசியது காங்கிரஸ் கட்சி யினரைக் கோபம் கொள்ளச் செய் திருக்கிறது.

ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிய மூப்பனார் "பெருந்தலைவர்கள் செய்த தியாகம் வெகுவிரைவில் மறக்கப்பட்டு வருகிறது. காங் கிரஸ்காரர்கள் மானத்தையும் சுய மரியாதையையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்" என்று குறிப் பிட்டார். இது ஜெயலலிதாவை மறைமுகமாக குறிப்பிடுவது ஆகும்.



யூலை 19ந் தேதி வெம்பிளி உயர் பாடசாலையில் நடைபெற்ற மேற்கு லண்டன் தமிழ்ப்பாடசாலை (வெம்பிளி)யின் வருடாந்த பேச்சு தின வைபவத்தில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகளின் காட்சிகள்.
1.சிலம்புச் செல்வி நாடகத்தில் ஒரு நடன நிகழ்ச்சி. 2.தன்கையே தனக்குதவி- நகைச்சுவை நாடகம். 3.இராமாயணம் நாடகம்.


SPICEWAY OF WIMBLEDON

எமது விஸ்தரிக்கப்பட்ட விற்பனை நிலையத் திறப்பு விழாவையொட்டி

விசேஷ சலுகை விலை

இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட கட்ட சம்பல், அம்புல் தியல், யாழ்ப்பாணத்து கறி மிளகாய்த்தூள், ஹரிச்சந்திர நூடுல்ஸ், மரக்கறி வகைகள், உறை பதனிடப்பட்ட கடல் உணவுப் பொருட்கள்

இலங்கையின் வாரப்பத்திரிகைகளை ஞாயிறு மாலையிலேயே பெற்றுக் கொள்ளலாம்

இந்திய வாரப் பத்திரிகைகள் சஞ்சிகைகள்

தமிழ் - சிங்கள வீடியோ, ஓடியோ கசெற்கள் மற்றும் CD போன்றவற்றுக்கு நாடுங்கள்

21 - 23 KINGSTON ROAD, LONDON SW19

TEL: (081) 540 5526

விற்பனை நேரம்: ஏழு நாட்களும் காலை 9.30 - மாலை 9.00




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# எம்.ஜி.ஆர்: மனிதனும் மர்மமும்

கே.மோகனதாஸ்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

அதிர்ச்சியடைந்த எம்.ஜி.ஆர். தாம் தஞ்சாவூரை இந்திரா காங்கிக்கு விட்டுக்கொடுப்பதை நிறுத்துவதாக ஏற்றுக்கொண்டார். பிரதமமந்திரி தாராளமாக, "நீர் இந்திரா காந்தியை தவிர்ந்த காங்கிரசுக்கு ஆதரவு தருவதை நான் ஆட்சேபிக்கவில்லை" என்று சொல்லி அனுப்பினார். இந்திரா காந்தி இந்தத் துரோகச் செயலைக் கடைசி வரையும் மறக்கவில்லை.





அழைத்திருந்தார். சரியான நேரத்துக்குப் போய்ச்சேரவில்லையென்றதும், பல தடவை டெலிபோனில் ஞாபகப்படுத்தப்பட்டார். 'முக்கியமான அலுவலாக இருப்பதாகவும் முப்பது அல்லது நாற்பது நிமிஷம் தாமதமாகும் என்றும் தெரிவிக்கச் சொல்லி, அப்புறம்தான் போனார். இது எம்.ஜி.ஆர் பாணி.

## சிறீலங்கா வன்முறைக் குழுக்கள்

பொலீஸ் தலைவர் என்ற முறையில் தமிழ்நாட்டிலிருந்த எல்லா சிறீலங்கா வன்முறைக் குழுக்கள் பற்றியும், அவர்களுக்கு மத்திய புலனாய்வுத் துறையினர் மூலம் அளிக்கப்பட்டு வந்த ராணுவப் பயிற்சிகள் பற்றியும் நான் அவ்வப்போது எம்.ஜி.ஆருக்குத் தகவல்கள் கொடுத்துக்கொண்டு வந்தேன். ஒரு முறை அந்தக் குழுக்களின் தலைவர்களை, முக்கியமாக எல்.டி.டி.ஈயின் தலைவர்களை, நேரில் சந்திக்க விரும்புவதாக என்னிடம் சொன்னார். மத்திய புலனாய்வுப் பிரிவினருக்கு தெரியாமல் தமிழ்நாட்டுப் போலிசார் இந்தக் குழுக்களின் தலைவர்களுடன் நெருங்கிப் பழகியிருந்தார்கள். எனவே அவர்களை அழைத்து எம்.ஜி.ஆரைச் சந்திக்க வைப்பதில் எவ்வித சங்கடமுமிருக்கவில்லை. அவர் வீட்டிலே அழைத்து அறிமுகப்படுத்தும்போது ஆயுதம் வைத்திருக்கவில்லை என்று சோதித்துத்தான் உள்ளே விட்டோம். பேச்சுவார்த்தை சகஜமாகத்தான் இருந்தது. இலங்கை ராணுவமும் பொலீசும் தமக்கு இழைக்கும் அட்டூழியங்களைப்பற்றி அவர்கள் விவரித்தனர். அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். மிகவும்

பரஸ்பர உறவு ஏற்பட்டதைக் காண முடிந்தது. அத்துடன் எல்.டி.டி.ஈ.க்கும் மற்றைய குழுக்களுக்குமிடையில் இருந்த வித்தியாசத்தையும் அவர் உணர்ந்து கொண்டார் என்று தெரிந்தது. இதன் பேறாகவே பின்னால் பல சமயங்களில் எம்.ஜி.ஆர், தமது சொந்த நிதியிலிருந்தோ அல்லது அரசு நிதியிலிருந்தோ எல்.டி.டி.ஈக்கு பண உதவிகள் செய்து வந்ததை யாவரும் அறிவர்.

எல்.டி.டி.ஈக்கு மாத்திரம் இப்படித் தனிப்படுத்தி உதவியளித்தது மத்திய உளவுப்பிரிவினருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஒரு முறை "ரோ" பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் என்னிடம், "எம்.ஜி.ஆர். ஏன் இப்படி எல்.டி.டி.ஈ.யிடம் தனிச்சலுகை காட்டுகிறார்" என்று கேட்டபோது அது பெரிய இடத்து விஷயம் என்று மழுப்பி விட்டேன்.



அமைச்சரவையில் இரண்டாவது ஸ்தானத்திலுள்ள நாவலர் நெடுஞ்செழியனே பொறுப்பாயிருக்க வேண்டும் என்றுநான் யோசனை சொன்னேன். கட்சியைப் பொறுத்த வரையில், தனியாக ஒரு கமிட்டி அமைக்கவேண்டும் என்று சொன்னபோது, அதில் ஜெயலலிதா இருப்பதை எவரும்

செயல் அது என்று கண்டுபிடித்திருந்தோம். எமது சிரத்தையை எம்.ஜி.ஆர். பாராட்டினார். ஆனால், என்ன நினைத்தார்களோ தெரியாது மத்திய அரசு சார்பில் டில்லியிலிருந்து எனக்கு அவசரமாக ஒரு அழைப்பு வந்தது. விமான நிலையக் குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றிப் பேசவேண்டுமென்று அழைத்திருந்தார்கள். மறுநாளே நான் மத்திய அரசின் அரசியல் சட்ட ஆலோசகர் முன் ஆஜரானேன். அதிகமாக அவர் ஒன்றும் நீட்டி வளைக்காமல், நேரடியாகவே தமது கருத்தில், குறித்த சம்பவத்தில் 'மோசாத்' என்ற இஸ்ரேயில் நாட்டு உளவுப் படையின் கை இருக்கலாமோ என்று திசை திருப்ப முயன்றார். அத்துடன், அந்த குண்டு வெடிப்பு சம்பவத்தை முறைப்படி விசாரணை செய்து தகவல் வெளியிட்டால் சிறீ லங்கா அரசு அதைத் தமக்குச் சாதகமாக

# வீரப்பன் வீட்டுக்குச் சென்று ஆசிபெற்றார் ஜெயலலிதா!

தமிழ் நாட்டுப் பொலீஸ் படையின் தலைவனாக நான் இருந்தபோதிலும் எம்.ஜி.ஆர் என்னைத் தன் கையாளாகவும், சில சமயங்களில் "அடியாள்" மாதிரியும் வைத்துக்கொண்டார். ஒரு நாள் அவர் தலைமைச் செயலகத்தில் தன்னை உடனே வந்து பார்க்கச் சொன்னார். ஏதோ முக்கிய அலுவல் என்று நினைத்து நானும் விரைந்து போய்ப் பார்த்தபோது

## அவரது ஆட்சியில் முக்கியமாக கவனிக்கப்பட்டது ஈழத்தமிழர் பிரச்னையே

அவர் அமைச்சர் மூன்று பேருடன் திரைப்படம் சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவர் திடீரென்று எழுந்து "சரி, போகலாம் வா" என்று சொல்லி வெளியே வந்து காரில் ஏறி வரும் வழியில் நானே கேட்டேன், "திடீரென்று அழைத்தீர்களே, என்ன முக்கியமான காரியம்?" என்று. அந்த மனுஷன் பதிலுக்குப் பலமாகச் சிரித்துவிட்டுச் சொன்னார்: "அது வெறும் நாடகம். அந்த அமைச்சர்கள் மூன்றுபேரில் ஒருவர் ஊழலில் மாட்டிக் கொண்டிருக்கிறார் என்ற சந்தேகம் இருக்கிறது. உன்னை நான் அழைத்தவுடன் நிலைமை மோசமாகப் போகிறது என்று நம்பியிருப்பார். இனிமேல் ஜாக்கிரதையாக நடப்பார்" என்று விளக்கம் தந்தார். நான் எனது காரியாலயத்தில் இறங்கி உள்ளே போனதும், அந்த மூன்று அமைச்சர்களும் என்னைத்தேடி போன் பண்ணினார்கள் என்ற செய்தி காத்திருந்தது. சற்று நேரத்தில் அவர்களே போனில் அழைத்து, அளவற்ற ஆவலுடன் முதலமைச்சர் என்ன முக்கியமான செய்தியைச் சொன்னார் என்று கேட்டார்கள். அது புதுடில்லி சம்பந்தமான விஷயம் என்று மழுப்பிவிட்டேன்.

ராஜாங்க சம்பிரதாயங்களையும் மரியாதைகளையும் கடைப்பிடிப்பதில் வெகுதூரம். தமிழ்நாட்டு கவர்னராக நியமிக்கப்பட்டவர் புதிதாகப் பதவியேற்றபோது உத்தியோகபூர்வமான விருந்துக்கு அழைத்திருந்தார். அன்று விருந்தாளிகளைக் காக்க வைத்து விட்டு எம்.ஜி.ஆர். அரை மணி நேரம் தாமதமாக வந்தார். மற்றொரு சமயம் பாரத ராஷ்டிரபதி சென்னைக்கு வந்தபோது கவர்னர் மாளிகையில் விருந்துக்கு



ஜாக்கிரதையாகவே, அவர்களுக்கு இந்தியாவில் இருக்கும் பயிற்சி முகாம்களைப்பற்றி ஒரு வார்த்தை பேசவில்லை. இந்தச் சந்திப்பின்போது எம்.ஜி.ஆருக்கும் எல்.டி.டி.ஈ. தலைவர் பிரபாகரனுக்குமிடையில் உடனடியாகப்

## எம்.ஜி.ஆர் நோய்வாய்ப் பட்டபோது

எம்.ஜி.ஆர். திடீரென்று ஒருநாள் இரவு நோய்வாய்ப்பட்டு அப்போலோ ஆஸ்பத்திரியில், அவரது இஷ்டத்துக்கு மாறாகவே அனுமதிக்கப்பட்டபோது, ஆஸ்பத்திரியில் தாம் இருக்கும்வரையும் டாக்டர்கள், நர்சுகள், மனைவி ஜானகி ஆகியவர்களைத் தவிர வேறு எவரையும் தம்மைப் பார்க்க அனுமதிக்கக்கூடாது என்று என்னிடம் கண்டிப்பாகச் சொல்லியிருந்தார். ஆனால் அந்தச் சமயத்தில் மிகவும் துயருற்ற ஜெயலலிதா அடிக்கடி போன் செய்து எம்.ஜி.ஆர் நிலமைபற்றி என்னிடம் விசாரித்துக் கொண்டிருந்தார். எனக்குத் தெரிந்த தகவல்களை நானும் சொல்லி வந்தேன். ஆனால் ஜெயலலிதா திருப்திப்படவில்லை. ஆஸ்பத்திரி கட்டுப்பாடுகளைக் சரமாரியாகக் குறைகூறத் தொடங்கினார். அவையெல்லாம் டாக்டரின் ஆலோசனைப்படிதான் என்று சொன்னதை அவர் நம்புவதாக இல்லை.

எம்.ஜி.ஆர். மாற்றுச்சிறுநீரகச் சிகிச்சை பெறுவதற்கு அமெரிக்கா செல்ல ஏற்பாடாகும்போது, அவருடைய இடத்தில் செயலாற்ற

விரும்பவில்லை. முக்கியமாக ஆர்.எம்.வீரப்பன் கடுமையாக எதிர்த்தார். பின்னர் எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் புருக்லின் மருத்துவமனையில் இருக்கும்போது நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் ஜெயலலிதா பிரச்சாரம் செய்ய அழைக்கப்படவேண்டும் என்று நான் தெரிவித்த கருத்தையும் ஏற்கவில்லை. பின்னர் ஒருவாறு உடன்பட்ட போது ராஜதந்திரம் தெரிந்த ஜெயலலிதா பிரசாரத்தைக் தொடங்க முன்பு நேரே வீரப்பன் வீட்டுக்குச் சென்று அவரிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார். வீரப்பனுக்கு அது கொஞ்சம் சங்கடமாகத்தான் இருந்திருக்கும். ஆயினும் அவர் அதைக் காட்டிக் கொள்ளாமல் நல்ல முறையில் அனுப்பி வைத்தார்.

வெற்றி தேடிக்கொடுத்த ஜெயலலிதா அதற்குப் பிரதியுபகாரமாக அமைச்சர் பதவியொன்றை எதிர்பார்த்திருந்தார். ஆனால் அப்படியொரு பதவியும் கிடைக்காமல் போனது மாத்திரமல்ல, எம்.ஜி.ஆர். அவரை மேலும் ஒதுக்கியே வைத்தார். அதற்கு அவருடைய மனத்தில் என்ன இருந்தது என்பது எனக்கு தெரியவில்லை. ஒருவேளை, மிகவும் நெருக்கடியான சூழ்நிலையிலும் ஜெயலலிதாவின் விஸ்வாசமும் பாசமும் மாறாமல் இருக்குமா என்பதைச் சோதிப்பதற்காகவே அவர் அப்படிப் பாராமுகமாயிருந்தார் என்று நினைக்கிறேன்.



## ஈழத் தமிழர் பிரச்சினை

எம்.ஜி.ஆரின் புதிய ஆட்சியில் முக்கிய பிரச்சினையாகக் கவனிக்கப்பட்டது ஈழத்தமிழர் பிரச்சனைதான். தன் சொந்த முறையில் அவர் வெவ்வேறு குழுக்களுடன், முக்கியமாக எல்.டி.டி.ஈயுடன் நேரடித் தொடர்பு வைத்திருந்தார். மத்திய அரசு நிறுவனங்கள் வைத்திருந்த நெருக்கத்தைவிடத் தனது செல்வாக்கு அதிகம் என்பதைப் புதுடில்லி வட்டாரத்தில் தெரிய வைப்பதுதான் அவரது நோக்கமாயிருந்தது. தேவையானபோது அத்தொடர்பைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் எண்ணினார். இது மிகவும் ஆபத்தான விளையாட்டு என்பதை நான் எடுத்துக் காட்டியபோது எம்.ஜி.ஆர். "ஆபத்து என்று பயந்தால் வாழ்க்கையில் என்ன பயன்?" என்று கேட்டார்.

நான் எச்சரித்தது சரியாய்ப் போயிற்று. முதல் அபாயஅறிவிப்புப்போல 1985 ஆகஸ்ட் 2ம் தேதி இரவு சென்னை விமான நிலையத்தில் குண்டு வெடித்து 30 பேர் இறந்தார்கள். இடைவிடாது துப்பறிந்து எனது ஆட்சியிலுள்ள பொலீஸ் படையை ஏவிவிட்டு விசாரணை செய்ததில், டீ.ஈ.ஏ. (தமிழ் ஈழம் ஆர்மி) என்ற இயக்கத்தைச் சேர்ந்த வன்முறையாளர்

எடுத்துக்கொண்டு, இந்தியாவில் ராணுவப்பயிற்சி நிலையங்கள் நடத்தப்படுவதை (நாம் இல்லையென்று மறுத்ததை) ஊர்ஜிதப்படுத்திக் குற்றம் சாட்ட ஏதுவாகும் அல்லவா?" என்று சொன்னதுடன், "சிறீ லங்கா குழுவினரைப் பாதுகாப்பது நமது கடமையல்லவா" என்றார்.

இந்த நிலைமையில் "புதுடில்லி அரசியல் கொள்கைமீது எவ்வித கருத்தும் சொல்ல எனக்கு உரிமையில்லை" என்றும், விமான நிலையச் சம்பவத்தை நான் அது ஒரு குற்ற நடவடிக்கை என்ற வகையில் விசாரணை செய்தேன் என்றும் சொன்னேன். அத்துடன், வன்முறையாளர்கள் ஆயுதச் சட்டம் முதலிய பல சட்டங்களுக்கு விரோதமாக நடந்து வருகிறார்கள் என்றும், விமான நிலையக் குண்டு வெடிப்பைச் சாதாரணமாகப் பாவித்தால், நாட்டுக்குள்ளே நுழைந்த வன்முறைக் கூட்டம் மேலும் பல வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட நேரும் என்றும் சொன்னேன். அதுவுமல்லாமல், குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டியது பொதுமக்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமையுமாகும் என்றும் சொன்னேன். இதற்கு மேல் அந்த அதிகாரி சொன்னது வியப்பாயிருந்தது. "இந்தியாவின் மிகப் பெரிய ஜனத்தொகையை வைத்துப் பார்க்கும்போது, குண்டு வெடிப்பில் இறந்தவர்கள் தொகை பெரிய விஷயமல்ல. இதில் முக்கியமாகக் கவனிக்கக்கடவேண்டியது இந்தியாவின் அரசியல் கொள்கைதான்" என்றார். இதற்குமேல் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை என்று கண்டு நான், "உங்கள் கருத்துக்களை நான் தமிழ்நாட்டு முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் தெரிவிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு எழுந்து வெளியே வந்துவிட்டேன். சென்னை திரும்பியதும் நேரே எம்.ஜி.ஆர். வீட்டிற்கே

(16ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் ராசிபலன் எப்படி?

சோமசன்மா

## மேடம்

வீட்டுக்காரியங்களை நடத்துவதில் அபிப்பிராயபேதம் இருக்கத்தான் செய்யும். இருந்தாலும் ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுக்கலாம். எதிர்பாராத இடத்திலிருந்து வரும் சலுகையைக்கண்டு மயங்கிவிட வேண்டாம். புதிய உறவுக்கு அது வழி திறக்க வாய்ப்புண்டு. வெகு தூரத்திலில்லை. பணவரவுக்குச் சிறிது காத்திருப்பதில் என்ன சங்கடம்? அவசரம் வேண்டாம்.

அதிஷ்ட எண் 6

## இடபம்

எந்தக் காரியத்திலும் முடிவெ டுப்பதில் சில வேளைகளில் இப்படித்தான் தள்ளிப்போட வேண்டி வரும். காலம் வரவேண் டுமே. பணமும் வரவேண்டுமே. ஒன்று வந்தால் மற்றது தானே வந்தடையும். உறவினர் வரவும் சேர்ந்து கொள்ளும். அத்துடன் உடல் நிலையைப்பற்றிய கவலை ஏன் வரவேண்டும்? உடன் பிறப்பின் உதவிதான் இருக்கிறதே.

அதிஷ்ட எண் 4

## மிதுனம்

சகோதரர்கள் சகாயம் இருக்கும்போது கவலையில்லை. அதிலும் இடையிலே அயலார் புகுவதும் தவிர்க்க முடியாதுதான். வியாபாரம் நன்றாக நடந்தால் தரகர்கள் நுழைவது கவனிக்கப்பட வேண்டும். புதிய உத்தியோகம் சில சங்கடங்களைத் தரும் என்பதால் கவலைப்படவேண்டியதில்லை. புதிய சொத்து அடைவதற்கும் வழியுண்டல்லவா? பொறுத்திருந்து பார்ப்போம்.

அதிஷ்ட எண் 7

## கர்க்கடகம்

வெளிநாட்டு நண்பர் வருகை மகிழ்ச்சிதான். லாபமும் எதிர் பார்க்கலாம். குழந்தைகள் உடல் நிலையை இந்தச் சமயத்தில் கவனிக் கவேண்டியதும் அவசியம். கிருகப் பிரவேசத்தை இரண்டொரு மாதம் தள்ளிப்போடுவதில் என்ன சங்கடம்? சட்டைப் பையில் கவனமா யிருக்கவும். பிரயாணத் திட்டம் போட்டிருந்தால் திட்டத்தை பல தட்வை மாற்றவேண்டி வரும். நிறைவேறாமல் போனாலும் போகலாம். எல்லாம் நன்மைக்கே.

அதிஷ்ட எண் 3

## சிங்கம்

கல்வியிலும் உத்தியோகத்திலும் முன்னேற்றம் தாமதமாகலாம். பெரிய இடத்துக் கடைக்கண் பார்வை கிடைக்கவேண்டாமா? அந்தப் பெரியவர் எதிர்பாராத விதமாக வந்து சேருவார். புதிய மணப்பெண் வருகைக்கும் இடமுண்டு என்று தெரிகிறது. உடல் நிலையைக் கவனிக்கவேண்டிய அவசியமும் உண்டு. மனைவியின் உறவினர் பார்த்துக்கொள்வார். சுற்றம் பெரிதாயிருப்பதால் லாபந் தான். அயலிலுள்ளவர்கள் உதவி எதிர்பாராத லாபத்தைக் தரலாம்.

அதிஷ்ட எண் 5

## கன்னி

தாயார் உடல் நிலை யைப்பற்றிய கவலை இருக்கத்தான் செய்யும். பிரயாணம் தாமதமாகும். புதிய நண்பர் ஒருவர் நல்ல செய்தி கொண்டு வரப்போகிறார் என்று கிரகங்கள் சொல்லுகின்றன. யாரை நம்புவது? சங்கடமான மனநிலை அவ்வப்போது ஏற்படுவதைத் தடுக்க முடியுமா? தைரியமாக இருக்கப் பழகிக் கொள்வது எல்லாருக்கும் அவசியம்தான். அடுத்த வாரத்தை எதிர்பார்ப்பது நல்லது.

அதிஷ்ட எண் 1

## துலாம்

எதிர்பாராத பொருளையும் புகழையும் பெற்றவுடன் நண்பர்களை மறந்துவிட வேண்டாம். பெரியவர்கள் கடாட்சம் நிறைய இருக்கிறது. எதிர்பாராத நண்பர் ஒருவர் வருவது மகிழ்ச்சிதான். புதிதாகப் பெரிய திட்டம் ஒன்று வகுப்பதற்கு சந்தர்ப்பமும் சூழ் நிலையும் அமைந்திருக்கிறது. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வது பலனளிக்கும். தாமதமில்லாமல் செயல்படுவதுதான் நல்லது. எதிரிகளைப் பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமில்லை.

அதிஷ்ட எண் 9

## விருச்சிகம்

வரவும் செலவும் சமமாயிருப்பது அதிசயம்தான். கொடுத்து வைத்த வர்கள். ஆனா உடல் நிலையில் அப்படியில்லாவிட்டால் என்ன செய்வது? அது நம்ம கையில் இல்லைத்தான். சாதாரண வாய்வு என்று தள்ளி விடவும் முடியாது. ஒன்றும் நிரந்தரமானதல்ல என்ப தால் சமாதானப்படுத்திக் கொள் ளலாம். மனைவி பக்கத்தில் உதவி வரும். அபூர்வமென்று சொன்னா லும் சொல்லலாம். தள்ளி விட வேண்டாம்.

அதிஷ்ட எண் 2

## தனு

கையில் தேடி வைத்ததைக் கரைப்பதற்கு சில நண்பர்கள் சூழ்ந்துகொண்டால் என்ன செய்வது? காலம் அப்படியிருக்கிறது. எதற்கும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். சில சமயங்களில் நம்மையறியாமல் மதி கலங்குவதுமுண்டு. பலர் தெய்வத்தை வேண்டுவார்கள். தெய் வமும் எப்போதும் வழிகாட்டாது. சந்தர்ப்பத்தைப் பொறுத்தது. பழைய சிநேகிதர் மூலமாகவும் ஏதாவது புதிய வழி பிறக்கலா மல்லவா? கோயில் சந்நி தியிலும் சந்திக்கலாம்.

அதிஷ்ட எண் 7

## மகரம்

வீட்டுப் பிரச்சனை பற்றி எல்லாரும்தான் யோசிக்கிறோம். நாட்டு நிலை அப்படியென்று சமாதானம் சொல்லலாம். ஆனால் எதிர்பாராமல் ஏற்படும் உத்தியோக மாற்றத்துக்கு என்ன செய்வது? அடுத்த மாதம் கிரம மாற்றத்தில் கிருகத்தின் மாற்றமும் காணப் படலாம் என்று சிறிது நிம்மதி யடையலாம். நண்பர்கள் உதவி யுண்டு. வெளிநாட்டிலிருந்து அதி சயச் செய்தியொன்றை எதிர்பார்க் கலாம். நல்ல செய்தி.

அதிஷ்ட எண் 4

## கும்பம்

நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் என்று சொல்வார்கள். தெய்வம் நினைக் கிறது உங்கள் எண்ணத்தைவிட நல்லதாயிருந்தால் என்ன செய்வீகள்? வேண்டாம் என்று தள்ளிவிடலாமா? வந்தபின் பாருங்கள். வைத்தியச் செலவு இல்லாமல் போவது நல்லதுதானே. நண்பர்கள் உதவிதான் முக்கியம்.

அதிஷ்ட எண் 3

## மீனம்

விரோதிகள் இல்லாத மக்களைக் காண முடியுமா? குழப்பம் செய்ய நம்மையறியாமல் சிலர் முயல்வார்கள். அப்படி ஏதும் நடக்குமென்று அஞ்சவேண்டிய தில்லை. புதிய நண்பர்கள் உதவி வந்துகொண்டிருக்கிறது. சுவாமி தர்சனமும் நம்மையறியாமல் கிடைக்கப் போகிறது. செலவு அதிகம்தான், பரவாயில்லை. விரைவில் காலம் மாறப்போகிறது. அயல்நாட்டிலிருந்து வரும் செய்தியை கண்டு திகைக்க வேண்டாம். அதுவும் நன்மைக்கே.


அதிஷ்ட எண் 6

# சொற் சதுரங்கம்

ஆகஸ்ட் 10ம் திகதிக்கு முன் கிடைக்கும் விடைகளில் முதலாவதாக எடுக்கப்படும் சரியான விடைக்கு பரிசு 20 பவுண் (£ 20)

உங்கள் முகவரியுடன் விகைளை அனுப்ப வேண்டிய முகவரி

சொற்சதுரங்கம்
THAMIZHOSAI
253, WESTERN AVENUE
LONDON W3 0PP



### இடமிருந்து வலம்

1. பண்டிகை காலத்து பல்சுவை பதார்த்தம்.
3. இதை வைத்துக்கொண்டு திருக்குறளும் படிக்கலாம் என்றார் கண்ணதாசன்.
6. சேராத பொருட்கள் சேரும்போது.
7. இலங்கையில் நாணயம்!
8,3 இடமிருந்து வலம் ஏற்றி வைப்பது
11,23 இடமிருந்து வலமிருந்து பெறும் இது ஈடு இணையற்றது.
13. குழந்தைக்கும் கொட்டும் பூச்சிக்கும் பொதுவானது.
15,3 இடமிருந்து வலத்தில் விழும் பூச்சி.
16. கட்டிலை விட மிருதுவானது.
19. இன்று அரசியலை ஆதிக்கம் செய்வதில் ஒன்று.
21. இது பெண்களின் கூந்தலை அலங்கரித்தால் நகை எதற்கு?
22. ஆழியாக வருவது.
23. முன்னறி தெய்வங்களில் முதன்மையானது.
22. ஆழியாக வருவது.
23. முன்னறி தெய்வங்களில் முதன்மையானது.
24. பட்டினம் தலை கீழானது.
25. தெய்வங்களிடம் தவம் கிடந்து பெறுவது.

### மேலிருந்து கீழ்

1. சிவிகையாக வருவது.
2. இலங்கையில் பாதணி.
3. நாட்டு நாடு பயணம் போனால் கட்டுவது.
4. கண் தலைகீழானது.
5. விரலில் கூரானால் கீறலாம்.
6. எண்களினால்தான் இது முடியும்.
9. பிழைகள் திருத்த அமைவது.
10. குதிரைக்கும் உண்டு- விளங்காவிட்டால்.
12. குறுகிய வாயினுள் பதார்த்தம் புகுத்த உதவுவது.
14. காற்றும் நீரும் இதில் இரண்டு.
15. விஜயனின் வித்தை.
17. நோன்பிருப்பது.
18. நாடகத்தில் பாத்திரம் தலைகீழானது.
19. படிக்காவிட்டால் வீசலாம்.
20. எட்டுவதில் உயரம்.

தொகுத்தவர்:- ஜனா

# வித்திய பவனுக்கு கௌரவம்

(பாரிஸ்)

மேலைநாடுகளில் இந்திய கலாச்சாரத்தை வளர்ப்பதில் அளிக்கும் உயரிய பங்குக்காக லண்டனின் பாரதிய வித்தியபவன் கௌரவிக்கப் பட்டிருக்கிறது.

இங்கு நடைபெற்ற இந்திய பூர்வீக மக்களின் இரண் டாவது உலக மகா நாட்டிலேயே இக்கௌரவ விருது பவனுக்கு வழங்கப் பட்டது. பவன் லண்டன் நிலையத்தின் இயக்குநர் திரு மத்தூர் கிருஷ்ணமூர்த்தி மாநாட்டுக்கு வந்திருந்தபோது இந்த விருது அவரிடம் நேரடியாக அளிக்கப்பட்டது.

# மக்களாணை மீண்டும் ஒத்திவைப்பு

(கொழும்பு நிருபர்)

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச சர்ச்சைக்குரிய வடக்குகிழக்கு மாகாண மக்களாணையை உத்தியோக அறிவிப்புமூலம் மீண்டும் ஒத்திவைத்திருக்கிறார். ஜுலை 22ந் தேதியிடப்பட்ட ஆனால் 28ந் தேதியே அறிவிக்கப்பட்ட ஜனாதிபதியின் அறிவிப்பு, இவ்வாண்டு ஆகஸ்ட் 28ம் தேதி நடைபெறவிருந்த மக்களாணை வாக்களிப்பு அடுத்த ஆண்டு மார்ச் 5ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கிறது.

1988 டிசம்பர் 31ந் தேதிக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த இந்த மக்களாணை வாக்கெடுப்பு, வடக்கு கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்தும் ஒரே நிர்வாகப் பிரிவாக இணைக் கப்பட்டிருக்க வேண்டுமா? அல்லது ஒவ்வொரு மாகாணமும் தனித்தனி நிர்வாகப் பிரிவுடன் தனித்த பிரதேச சபையாக வேண் டுமா என்பதைத் தீர்மானிக்கும்.

இது இரண்டு மாகாணங்களின் ஸ்திரமற்ற நிலைமைகளினால் பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது. 1987 இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான மாகாணசபை சட்டத்தின் கீழ் இந்த மக்களாணை வாக்கெடுப்பு நிர்ணயிக்கப்பட்டது.

இந்தியாவைத் திருப்திப்ப டுத்துவதற்காக ஜயவர்த்தனா இந்த வடக்கு- கிழக்கு மாகாணங்களை தற்காலிகமாக ஒன்றிணைத்தார். இறுதி முடிவு இரு மாகாண மக்களதும் மக்களாணையால் தீர்மானிக்கப்படும்.

புலிகளின் இராணுவ நடவடிக் கைகள் இன்னமும் தீவிரமாகவுள்ள இப்பகுதிகளில் அரசு எந்தவொரு தேர்தலையும் நிகழ்த்த இயலாதாகையால் இந்த ஒத்தி வைப்பு எவருக்கும் ஆச்சரியத்தை அளிக் கவில்லை.

1990இல் ஏனைய இடங்களில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்கள் கூட வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடைபெறவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழோசை

## அஞ்சுதல் யாதொன்றுமில்லை

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இரகசியப் பேச்சு என்பதே கொழும்பிலிருந்து இப்போது கிடைக்கும் செய்திகள்.

ஊர்ஜிதமற்ற செய்திகளாக வேயிருந்தாலும் ஏற்கனவே தொடங்கி விட்டனவா, அல்லது தொடங்கப் போகின்றனவா என்ற எதுவுமே சரியாகத் தெரியாவிட்டாலும் அத்தகைய ஒரு சாத்தியக்கூற்றை மறுத்துவிடுவதற்கில்லை.

இலங்கையில் தமிழினம் துன்பத்தின் உச்சக்கட்டத்தை அநுபவிக்க ஆரம்பித்த ஒன்பதாவது ஆண்டு நிறைவு காலத்தில் இப்படி ஒரு செய்தி வரவேற்புக்கு உரியதே. இது உண்மையானால் அது எந்த அளவுக்கு விசுவாசமானது என்பது அடுத்த கேள்வி. இருதரப்பிலும் இதில் எவர் சமர்த்தர் என்பதைக் கூறிவிடமுடியாது.

உடனேயே மற்றைய கட்சிகள் - குழுக்கள் சிலவற்றிடையே இது ஒரு சலனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் கூறுகின்ற கருத்துக்கள் சிலவற்றில் சில நியாயங்கள் இருக்கலாமென்றாலும், இப்போதைய நிலையில் அரசுக்கும் புலிகளுக்குமிடையே ஒரு பூர்வாங்க பேச்சுவார்த்தை நிகழ்வதிலும் தவறிருப்பதாக கூற முடியாது.

ஆனால் இந்த இருசாராரின் பேச்சு மட்டுமே ஒரு தீர்வை நிஜமாக்கிவிடும் என்றும் எதிர் பார்த்து விட முடியாது.

இக் கால கட்டத்தில்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட ஐந்தாவது ஆண்டு நிறைவும் அமைகிறது. அதுவும் கூட ஒரு வரலாற்று ஆசானே.

இவற்றையெல்லாம் நினைவிலிருத்தி, அனைத்தும் அங்கு வாழ்கின்ற மக்களுக்கே - அவர்களின் வருங்கால சந்ததிக்கே என்பது எல்லோர் மனதிலும் விஞ்சினால், அஃதல்லாதவர் விஞ்சுதலன்றி அஞ்சவே செய்வர்.

## உரைகல்

ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். "தமிழோசை'யின் முதல் இதழ் பார்த்தேன்.

அரசியல், ஆன்மிகம், கலை, இலக்கியம் ஆகிய அனைத்திற்கும் முறையாகப் பங்கீடளித்து கட்டுரைகள் அமைந்துள்ளன. பாராட்டுகிறேன். முதல் இதழிலேயே முதுபெரும் எழுத்தாளர் 'சிட்டி' சுந்தரராஜன் அவர்கள் அருமையாக எழுதிய மதிப்புரையை மறுவெளியீடு செய்தது, "உலகத் தமிழர் பற்றிய செய்திகள்" என்னும் தலைப்பிற்கு மிகப் பொருத்தமாக கால்கோள் செய்துவிட்டது.

எனதருமை நண்பர் திரு சிவபாத சுந்தரம் சென்னையை விட்டு நீங்கியது இலக்கியச்சுற்றத்தில் சற்று வருத்தத்தை ஏற்படுத்தியது. ஆனால், அவருடைய எழுத்துகள் 'தமிழோசை'யின் ஒலியில் இணைந்து, தொடர்ந்து வெளி வருவது ஆற்றாமைக்கு நன் மருந்தாகின்றது. சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாத்தொடர்பாக அவருடைய "பழைய நினைவுகள்" வெளிப்படுத்தும் வரலாற்றுக் குறிப்புகள் ஆய்விற்கு பயன்தருகின்றன. குறிப்பாக "ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி" என்னும் புதிர் விடுபட்டதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார், திரு சிவபாதசுந்தரம். "இராம கிருஷ்ணர் இயக்கத்தில் சுவாமி விபுலானந்தர்" "சுவாமி விபுலானந்தர் பார்வையில் மகாகவி பாரதியார்" என்னும் இரு நோக்குகளை பிரதானமாகக் கொண்டு "சுவாமி விபுலானந்தர்" என்னும் என்னுடைய நூல் வெளி வந்துள்ளது.

'மாதம் ஒரு மந்திரம்' எனும் தொடர் மிகவும் தேவைப்படுவதாகும். 'தமிழோசை' சங்கரண்ணாவின் எளிமையான தமிழ் நடையும், தற்காலச் செய்திகளின் பின்னணியில் விளக்கும் திறமும் கட்டுரையை மிக்க இலக்கியத்திறத்திற்கு உயர்த்துகின்றன.

இலங்கைத் தமிழரின் கழிவிரக்க நிலையை 'மக்பை'யை மையமாக வைத்த கவிதை' நெஞ்சகன கல்லையும் நெக்குருக' செய்யும்.

தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்பில் இரவு 10மணியளவில் "world this week" என்னும் நிகழ்ச்சியின் ஒரு பகுதியை விரிவாகப் புரிந்து கொள்ள "உலக அரங்கில் இவ்வார அரசியல் கண்ணேட்டம்" என்னும் தலைப்பில் "டயானா- அவரது உண்மைக்கதை" பற்றிய விமர்சனம் பயனளித்தது. மிக முக்கியமான இந்தப்பகுதியில் சுருக்கமாகவும், தெளிவாகவும் விமல் சொக்கநாதன் எழுதும் பாணியும் பாராட்டுதலுக்குரியது.

உண்மையில், தமிழ்நாட்டில் இவ்வாறு பலநோக்குகளில் "உண்மைகள் புனிதமானவை; ஆனால் கருத்துரைகள் சுதந்திரமானவை" என்னும் சீரிய கொள்கைப் பிடிப்புடன் தமிழ் இதழ்களைக் காண்பது மிக அரிதாகி விட்ட நிலையில் லண்டனில் இருந்து 'தமிழோசை' எழுப்பும் ஒலி, செவி இனிக்க, கூர்த்த மதி ஒளிர, மனம் விரிவடைய வழிநடத்துகின்றது. மீண்டும் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,
**பெ.சு.மணி**
மேற்கு மாம்பலம்,
சென்னை- 600033
18.7.92

# நினைவுகளும் நிகழ்வுகளும்

'நவ இலங்கையின் தற்போதைய வரலாற்றில் முக்கியமான இரண்டு நினைவுகள் ஜுலை மாதத்து இறுதியில் அமைகின்றன. ஜுலை 23; இலங்கையின் தற்கால சந்ததி, குறிப்பாக தமிழினம் என்றுமே மறக்கவியலாததும் பல்லாயிரக் கணக்கான உயிர்களை- முக்கியமாக அப்பாவி பொது மக்களைப் பலிகொண்டு, பலகோடி டாலர் நஷ்டத்தை ஏற்படுத்தி, தொடர்ந்து கொண்டிருக்கின்ற இப்போதைய யுத்தத்துக்கு வழிகோலியதுமான அந்த இருண்ட நாளின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு. ஜுலை 29; மறைந்த இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜுனியஸ் ஜயவர்த்தனாவும் ஒப்பமிட்ட சர்ச்சைக்குரிய- வரலாற்றில் முதல் முறையாக இலங்கையின் மண்ணில் வெளிநாட்டு இராணுவம் ஒன்று உத்தியோக அழைப்பில் காலடி வைக்கவும்- பின்னர் அழைத்த அரசாலும் ஆயுதங்களைக் களைவதற்காக வந்த போராளிகளாலும் புண்படுத்தப்படவும் காரணமாகவிருந்த இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் 5ஆவது ஆண்டு நிறைவு. இந்த வருட நிறைவு வாரத்தில், விசேடமாக இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதி தமிழ், முஸ்லிம் மக்கள், இன்னமும் எங்குமே ஒளிதோற்றுவதற்கான அறிகுறிகளேயற்ற, இருண்ட குகையுள்ளேயே வாழ்ந்து கொண்டிருகிறார்கள். ஓடுகின்ற இரத்தம் எப்போ ஓயுமென்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

### இருவேறு மனோநிலை

இராணுவத் தீர்வோ அல்லது அரசியல் தீர்வோ, எதுவோ ஒன்று ஏற்பட வேண்டும். ஒன்றில் தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவரீதியில் நிலைநாட்டப்பட்டு, தமிழ்ப் பகுதிகளில் 'தமிழ் ஈழம்' என்ற பட்டியை இன்னமும் தமது வெளிறும் பெயர்ப்பலகைகளில் இணைத்துக் கொண்டிருக்கும் ஏனைய தமிழ்க் குழுக்கள் முற்றாக ஒழிக்கப்படவேண்டும். அல்லது தமிழர்களின் கோரிக்கைகளும் அவர்களை உறுத்தும் அவர்களுக் கெதிரான பாரபட்சங்களும் நியாயமானமுறையில் சமாதானமாக ஆனால் ஐக்கிய இலங்கை என்ற வரையறைக்கு உட்பட்டு தீர்க்கப்பட வேண்டும். இந்த இரண்டு கருத்துக்கள்தாம், தமது புதல்வர்களை யுத்த களத்தில் பலிகொடுக்கும்- யுத்தத்தின் பெரும் சுமையைத் தாங்கும் சிங்கள பெரும் பான்மை மக்களிடையே வளர்ந்து வருகின்றன. ஆனால் 'ஈழம்' என்பதை அவர்கள் ஏற்க மறுக்கி றார்கள். இந்த மனோநிலை வேலிக்கு அப்பால்- வடக்கு, கிழக் கில் துப்பாக்கி பீரங்கிக் குண்டுகளின் வேட்டுக்களில் களைத்துப் போய்விட்ட பொதுமக்கள் இந்த வேட்டோசைகள் விரைவில் அடங்கி அமைதியான ஒரு வானைப்பார்க்க ஆவல்கொள்கிறார்கள். குடும்ப இழப்புகள், குலைந்தபொருளாதாரம், தெற்கிலே தங்கியிருக்கும் நிர்ப்பந்தம் போன்றன தொடர்கின்ற ஆயுத போராட்டத்திலே அவர்களைச் சலிப்படைய வைக்கின்றன. ஆனல் அடிப்படை உரிமைகள், கௌரவம்,சுயமரி யாதை என்பன உறுதியளிக் கப்பட்டு பேணப்பட வேண்டும் என்பதிலும் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

ஆக, நிர்ப்பந்திக்கும் காரணங்கள் வேறுபடலாம்; இருப்பினும் இருசாராரினதும் விருப்புகள்- அபிலாஷைகள் எதிர்பார்ப்புகளில் ஒற்றுமையும் அதேவேளை முரண்பாடுகளும் இருக்கின்றன. இந்த இடைவெளியை நிரப்புவது அல்லது அது மேலும் அதிகரிக்காதபடி தடுப்பது எப்படி?

உண்மையில் இதுதான், இனத்துவேஷ போக்கற்றவரான சுதந்திரக் கட்சி எம்.பி.மங்கள முனசிங்க தலைமையிலான- பெரிதும் நம்பிக்கையோடு எதிர்பார்க்கப்படுகின்ற- பாராளுமன்ற தெரிவுக் குழுவின் புனித நோக்கமாகும். சுமார் ஓராண்டுகால விசாரணை- விவாதங்களின் பின்னர் முக்கிய ஓர் அம்சமான காணி தொடர்பில் அதன் பூர்வாங்க அறிக்கையை பூர்த்தி செய்திருக்கிறது. பாதுகாப்பு பற்றி ஆலோசிப்பதற்காக ஜுலை 29ஆம் தேதி இக்குழு மீண்டும் கூடியிருக்கிறது. இந்த வகையில் பார்த்தால் தெரிவுக்குழு பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் சமர்ப்பிப்பதற்கான அதன் இறுதி சிபாரிசுகளை அடைய மிக நீண்ட காலமாகலாம். தெரிவுக்குழு முன்னுள்ள மிக முக்கியமான- மிகச் சிக்கலான விடயம் மாகாண சபை சட்டத்தின் கீழ் தற்போது இணைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கை நிரந்தரமாகவே இணைப்பதா? அல்லது மீண்டும் பிரிப்பதா? என்பதே.

### தனிநாட்டின் முன்னோடி

இன்னமும் ஈழத்துக்காக போராடும் புலிகள், இதுபற்றி கருத்துத் தெரிவிக்காவிடினும், அவை இணைப்பை பிரிப்பதை ஏற்கமாட்டா என்பது வெளிப்படை. தமிழ்க் கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்ககிரஸ் என்பனவும் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, ஈரோஸ், ஈ.என்.டி.எல்.எவ், ஈ.பி.டி.பி என்பனவும் ஈழத்துக்கு மாற்றாக நிரந்தர இணைப்பை வேண்டி நிற்பதுடன் தமது ஏழு கட்சிக் கூட்டின் 4 அம்சக்கோரிக்கைகளில் இதனையே முக்கியமாகவும் வைத்திருக்கின்றன. இதை ஐக்கிய தேசிய கட்சியின் பொருளாளரும், தெரிவுக்குழுவுக்கு ஐ.தே.க. பிரேரணைகளை வரையும் குழுவின் முக்கியஸ்தருமான கொழும்பு பிரதிமேயர் கணேசலிங்கமும் ஆதரிக்கின்றார்.

ஐ.தே.க.வின் தேர்தல் விஞ்ஞாபனம், இணைப்புக்கு எதிர்ப்பை பிரகடனப்படுத்தினாலும்

**ஏ.ஸி.எம்.சாலி**

ஜனாதிபதி பிரேமதாச தேர்தல் காரணங்களுக்காக இது தொடர்பில் திறந்த மனப்பாங்கையே கொண்டிருக்கிறார். அவரும் அவரது அரசாங்கத்தினரும தெரிவுக்குழுவின் முடிவு எதுவானாலும் ஏற்பர். ஆனால், மிகப்பெரும்பான்மையான ஐ.தே.க. எம்.பிக்கள், சிங்கள மக்களின் கண்ணுக்கு இந்த இணைப்பு தனிநாட்டுக்கான ஒரு முன்னோடி என்றே தெரிவதால், இதனை எதிர்க்காவிட்டால் தாம் தமது தொகுதிகளுக்கு செல்லமுடியாது என்பதற்காக எதிர்க்கவே செய்வார்கள். தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும் வாசுதேவ நாணயக்காரவின் நவசமசமாஜ கட்சியைத்தவிர ஏனைய வலதுசாரி இடதுசாரி கட்சிகளும் சிங்கள தீவிரவாதிகளும், புத்த குருமாரும் இதனை வன்மையாகவே எதிர்ப்பார்கள். பாராளுமன்றத்தில் பொதுவாக எதிர்க்கட்சியில் சுதந்திரக் கட்சியுடன் ஒத்துழைக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் கருத்து வேறுபாடுற்று, சிறிமா பண்டாரநாயக்காவை அவரின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும்படி வற்புறுத்துகிறது.

முஸ்லிம்கள் பக்கத்தில் இணைப்பை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை குறிப்பாக கிழக்கில் வலுப்பெற்று வருகிறது. இந்த எண்ணம் 1984ஆம் ஆண்டிலிருந்து அனைத்து ஆயுதம் தாங்கிய தமிழ்க்குழுக்களுடனான தங்கள் சொந்த அநுபவத்திலிருந்து எழுகிறது. முஸ்லிம் பொதுமக்கள் மீதான கொலைச் சம்பவங்கள், பள்ளிவாசல் தாக்குதல்கள், வடக்கிலிருந்து முஸ்லிம்களின் பலாத்கார வெளியேற்றம், பொருளாதார வாழ்வில் தடை போன்றவை தமிழ்க் குழுக்களுடனான அவர்களின் விரோதத்துக்கு பங்களித்தன. அண்மைக்கால்த்தில் கிழக்கில் இவர்கள் மீது புலிகளின் கொலை நடவடிக்கைகள் இதை இன்னும் ஆழமாக்கியிருக்கிறது.

தற்காலிக இணைப்பிலேயே இவர்கள் இவற்றைச் செய்தால் நிரந்தரமாக இணைக்கப்பட்ட ஒரு வட- கிழக்கு மாகாண சபையில் எமது எதிர்காலத்தையும் பாதுகாப்பையும் என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாமலிருக்கிறது என்று இன்னமும் தமிழ்- முஸ்லிம் நல்லுறவை விரும்பும் முதிர்ந்த பாராளுமன்ற வாதியான முன்னாள் எம்.பி.திரு எம்.எம்.முஸ்தபா கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

எம்.எச்.எம்.அஷ்ரப் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் எம்.ஐ.எம்.மொஹிதீன் தலைமையிலான முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகிய இரண்டுமே இணைப்பை ஆதரிக்கும் முஸ்லிம் கட்சிகள். இவை இரண்டும் முக்கியமாக அம்பாறை மாவட்டத்தைச் சார்ந்தவை. ஆனால் இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்களுக்கு ஒரு சுயாட்சி சபையை நிறுவுவது பற்றி 7 கட்சிக் கூட்டுடன் இரகசியப்பேச்சு நடத்திவரும் அஷ்ரப்பின் தலைமை ஆதிக்கத்துக்கு சவால்களும் எழுந்துள்ளன. மிககுறுகிய காலத்தில் மிகுந்த பிரபல்யத்தைப் பெற்றவரான

### ஆதரிக்கும் முஸ்லிம்கள்

அஷ்ரப் இப்போது தனிமைப் படுத்தப்பட்டே வருகிறார். லெனின் கூறியதுபோல 'களிமண் பாதங்களைக் கொண்ட பூதம்" அவர்.

இதேவேளை இந்த நிரந்தர இணைப்பு என்பதில் பிடிவாதமாக இருந்தாலும் இது பேசித் தீர்க்கக்கூடியது என்று இந்த 7 கட்சிக்கூட்டு இடதுசாரித் தலைவர் ஒருவரிடம் கூறியதாக அத்தலைவர் தெரிவித்தார்.

இவையெல்லாமிருக்க, அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தையிலீடுபட்டிருப்பதாகவும் சொல்லப் படுகிறது. யாழ் மாவட்ட எம்.பி. கே.நவரத்தினம் பகிரங்கமாகவே இக்குற்றச்சாட்டைத் தெரிவித்திருக்கிறார். அரசுக்கும் புலிகளுக்குமிடையே பேச்சு நடைபெற்று அவை வெற்றி பெற்றால், இவர்கள் நிலை இருதலைக் கொள்ளி எறும்பாகவே முடியும்.

## நடன அரங்கேற்றம்

(நமது நிருபர்)

லண்டன் 'நாட்டியாலயா' திருமதி ராகினி ராஜகோபாலின் மாணவியான செல்வி தாரணி பாலதரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் ஆகஸ்ட் 8ந் தேதி சனிக்கிழமை மாலை 6.30மணிக்கு ஹென்சிங்டன் பொதுநல நாடுகள் நிறுவன மண்டபத்தில் நடைபெறு கிறது. தாரணி, கிளப்பத்தைச் சேர்ந்த திரு.திருமதி பாலதரன் தம்பதிகளின் புதல்வியாவார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சின்னவீடும் பெரிய இடங்களும்

—சஞ்சயன்

மக்களின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளாக அரசியல் நடத்தும் மந்திரிகளின் வாழ்க்கையில் அபகீர்த்தி ஏற்பட்டபோது பதவியைத் தொடர்ந்து வைத்திருக்கலாமா அல்லது மரியாதையாக ராஜினாமா செய்துவிட்டுப் போய் விட வேண்டுமா என்பது பற்றிய விவாதம் கடந்த இரண்டு வாரங்களாக பிரிட்டிஷ் பத்திரிகைகளில் நடந்து கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜருக்கு மிகவும் நெருங்கிய நண்பரான டேவிட் மெலர் என்பவர் தேசிய பாரம் பரியம், கலைகள், பத்திரிகைகள், ஒலிபரப்பு முதலிய முக்கியமான துறைகள் சம்பந்தமான நிர்வா கத்துக்குப் பொறுப்பான மந்திரியாக இருக்கிறார். இந்த மனுஷன் மணம் முடித்து இருபது ஆண்டுகளாக நல்ல மனைவியும் இரண்டு ஆண்மக்களும் கொண்ட குடும்பத்தை நடத்தி வருகிறார். அப்படியிருந்தும் ஒரு நாடகக் கணிகையுடன் சல்லாபமாக நடந்து கொண்டதை சில பத்திரிகைக்காரர் மோப்பம் பிடித்து அவர்களின் களவுக்காதல் பேச்சுக்களையும் நடத்தைகளையும் பகிரங்கப் படுத்திவிட்டார்கள். மந்திரி தாமாகவே தமது பதவியை ராஜினாமா செய்ய முன்வந்தபோது அவரது நண்பர், பிரதமர் ஜோன் மேஜர், "பைத்தியகாரத்தனம். உன் மந்திரி வேலையைப் பொறுத்தவரையில் எவ்வித குறையும் கிடையாது. ஆகையால் ராஜினாமா என்ற பேச்சுக்கு இடமில்லை." என்று சொல்லிவிட்டார். ஆயினும் "சின்ன வீட்டு" விவகாரம் பத்திரிகைகளுக்குத் தீனி போட்டு வருகிறது.

## நாடகக் கணிகை

31 வயதான நாடகக் கணிகை அந்தோனியா டி சஞ்சாவின் தந்தை ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர். தாயார் சுவீடனைச் சேர்ந்தவர். இடையிலே விவாகப் பிரிவினை ஏற்பட்டு வெவ்வேறு திசையில் போய் மறைந்து விட்டார்கள். சஞ்சா சுவீடன் பாட்டியின் அன்பைப் பெற்று வளர்ந்தார். நாடகங்களில் நடிக்க முயன்றார், சரியான அங்கீகாரம் கிடைக்கவில்லை. அரைநிர்வாணப் படங்களில்தான் இடம் கிடைத்தது. அவரது வாழ்க்கை இந்த மந்திரித் தொடர்பு ஏற்பட்ட பின்னர்தான் ஆராயப்பட நேர்ந்தது. தனியாக ஒரு வாடகை வீட்டில் இருந்த போதுபோதிய வருமானமில்லாமல் கஷ்டப்பட்டார். வாடகைப்பணம் கொடுக்கவும் முடியவில்லை. அந்த நேரத்தில்தான், கடந்த ஜூன் மாதத்தில் டேவிட் மெலர் நட்பு



ஏற்பட்டது. அது படுக்கயறை நட்பாய் மலர்ந்ததும், அம்மாளின் புளகாங்கிதம் கரைகடந்து பாய்ந்தது. எலெக்ட்ரோனிக் தொழில் நடத்தும் பிலிப் என்ற அந்தரங்க நண்பனிடம் உளறிக் கொட்டிவிட்டாள். "நான் இப்போது தெய்வலோகத்தில் இருக்கிறேன். மிகப்பெரிய அரசியல்வாதி கிடைத்திருக்கிறார். உண்மையான ஆண்மகன். அவருடைய உறவும் சுகமும் அளப்பரியது" என்று தனது சல்லாபங்களையெல்லாம் அளந்து தள்ளினாள். அடிக்கடி அவர் டெலிபோனில் பேசுவார் என்றும் சொன்னாள்.

## ஒட்டுக்கேட்டார்.

எலெக்ட்ரோனிக் நிபுணன் பிலிப்பின் மூளை வேலை செய்தது. பெரிய அரசியல் புள்ளி சம்பந்தமாயிருப்பதால் நமக்கும் லாபமுண்டு என்று கண்டான். அவள் அப்போது குடியிருந்தது பிலிப் கொடுத்த விடுதியில்தான். டெலிபோன் இணைப்பும் கொடுத்திருந்தான். உடனே, மர்மமாக அவள் பேசும் டெலிபோன் இணைப்பில் ஒட்டுக்கேட்கும் கருவியை இணைத்து, அவளும் மந்திரி மெலரும் பேசும் காமவிகாரச் சம்பாஷணைகளையெல்லாம் ஒலிப்பதிவு செய்துகொண்டு அவற்றை இன்பரசப் பத்திரிகைகளுக்கு விலைபேசினான். லண்டனிலுள்ள குட்டிப் பத்திரிகைகள் அவற்றை வாங்காமல், ஒரு பத்திரிகை தனது சொந்தக் கருவிகளை உபயோகித்து ஒட்டுக்கேட்டு, மந்திரியும் மாதவியும் கொண்டிருந்த கள்ளக் காதலைப் பகிரங்கப்படுத்தியது.


பிரிட்டிஷ் அரசியல்வாதிகளும் மந்திரிகளும் சிலர் பரதாரப் பிரியர்களாயிருந்தும் பகிரங்கமானவுடன் பதவி துறப்பதும் அடிக்கடி நேரும் கதைதான். கடந்த பொதுத் தேர்தலின் போது எதிர்க்கட்சி ஒன்றின் தலைவர் பாடி ஆஷ்டான் பிறர் மனைவி ஒருத்தியுடன் தகாத உறவு வைத்திருந்தார் என்ற செய்தி பகிரங்கமானவுடன், ஆஷ்டான், "ஆமாம், அது முன் ஒரு போது நடந்த விஷயம்தான். ஆயினும் நானும் என் மனைவியும் அன்போடுதான் இருக்கிறோம்" என்று பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தார். அதற்கு முன்னர் சில மந்திரிகள் கள்ளக் காதல் வெளிப்பட்டவுடன் பதவி விலகியிருக்கிறார்கள்.

## பத்திரிகா தர்மம் என்ன?

மந்திரிகள் வாழ்க்கையில் சில மர்மமான தகவல்களைப் பத்திரிகைகளில் வெளிப்படுத்துவதைப்பற்றி இப்போது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. பத்திரிகா தர்மம் என்பதுபற்றி எத்தனையோ ஆண்டுகளாக ஒரு பிரச்சனை: அதாவது, தனிப்பட்டவர்களின் சொந்த வாழ்க்கையைப்பற்றிப் பகிரங்கப் படுத்துவது குற்றமாகும் என்ற அடிப்படை தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஒரு நியதி பத்திரிகைச் சங்கங்கள் தமக்குத் தாமாகவே ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்த விதிக்கு மாறாக சில இதழ்கள் நடந்துகொள்வதுதான் அதிருப்தியை உண்டாக்குகிறது என்று சிலர் குறைகூறுகிறார்கள். உதாரணமாக, கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு சுகாதார மந்திரியாக நியமிக்கப்பட்ட வேர்ஜினியா பொட்டம்லி என்ற மாது, அவர் விவாகமாகு முன்பே கருவுற்றிருந்தார் என்ற செய்தியை ஒரு பத்திரிகை வெளியிட்டுப் பலரது வெறுப்பைத் தேடிக்கொண்டது. ஆனால், மிகப் பொறுப்புள்ள கபினெட் மந்திரி மெலர், அன்பு மனைவியும் வளர்ந்த பிள்ளைகளும் இருக்கக்கூடியதாக, பரத்தையரிடம் சரண்புகுவது அவர் பதவிக்கும் குடும்பத்துக்கும் துரோகம் என்பது சில பத்திரிகைகளின் கணிப்பு. சில மாதங்களுக்கு முன்பு பிரிட்டிஷ் நீதித்துறையில் முக்கிய பதவி வகித்த ஒருவர் நள்ளிருவில் பரத்தையர் தெருவில் நடமாடி ஒரு பெண்ணுடன் பேசிக்கோண்டிருந்தார் என்று பொலீஸ் அவரைக் கைது செய்ததால், அவர் அதற்குரிய குற்றப்பணத்தைக் கொடுத்ததோடு, உடனே பதவியையும் துறந்தார். இதையெல்லாம் பத்திரிகைகள் சுட்டிக்காட்டி, டேவிட் மெலர் இடத்தைக் காலி செய்ய வேண்டும் என்றுதான் உரக்கப் பேசுகின்றன.

## மந்திரியம்மா

ஆனால், பின்னால் வந்த செய்திகளின்படி, மெலர் ராஜினாமா செய்யப்போவதில்லை என்று தெரிகிறது. அவர் நடத்தை குடும்பத்தை எவ்வகையிலும் பாதிக்கவில்லை என்று காட்டுவதற்கு அவரது மனைவி, மக்கள், மாமனார், மாமியார் அடங்கிய படங்கள் வெளியிடப்படுகின்றன. அதற்கிடையில் ஒரு பத்திரிகை நிருபர், மந்திரிமாரின் மனைவியர் அந்தஸ்தைப்பற்றி விவரமான தகவல்களை எடுத்து சொல்கிறார். அரசியல் தலைவர்களைக் காட்டிலும் அவர்களது பாரியார்கள் அனுபவிக்கும் லாபங்களைப்பற்றி விளக்கும் அவர், அந்த ஒரு



மதிப்புக்காக, புதிதாக அடையும் அந்தஸ்துக்காக, அவர்கள் எத்தகைய அவமானத்தையும் தூசு தட்டிவிடத் தயாராயிருக்கிறார்கள் என்கிறார். ஆயினும், கூடாநட்பு எங்கே கொண்டுபோய் முடியுமோ. மெலரின் சின்ன வீடு அழகி சாஞ்சா சாதாரண அழகியல்ல. இருந்து பார்க்கலாம்.


**Hartley College**

**PAST PUPILS ASSOCIATION**
**(UK BRANCH)**

FIAT LUX

**INVITES**

**ALL HARTLEYITES, WELL WISHERS AND FRIENDS**

to attend

**A DINNER**

In Honour of

**MR & MRS K POORANAMPILLAI**

DATE : Saturday 15th August 1992

TIME : Reception from 7.30pm to 8.30pm
Dinner 8.30pm onwards

VENUE : Holiday Inn (Commonwealth Suite)
(Hotel Marriott) Ditton Road, Langley, Slough
Berks. SL3 8PT (Off Junction 5 - M4)

DRESS : Lounge Suit

CARRIAGES : 11.00 pm

TICKET : £ 23.50 Per Head

Bookings Close on 12th August 1992

**Special arrangements have been made with the Hotel for accommodation at reduced rate of £45.00 per twin-bed double room for participants from long distance for overnight stay. Group bookings consisting of 10 persons can have their own table**

**CONTACT PERSONS**

Mr R Raveendralingam
(081) 554-2710 / (071) 403-5528

Mr A Sriharan
(0895) 257788 / (081) 843-9974




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈராக் மீது மீண்டும் நெருக்குதல்



உலகின் கவனமெல்லாம் பொஸ்னியா மீது நிலைத்து நிற்க, அமெரிக்க மக்கள், தமது நவம்பர் மாதத்து அதிபர் தேர்தலில் கவனத்தை செலுத்திவர, இங்கு இங்கிலாந்தில் பிரதமர் மேஜரின் அமைச்சரவையில் ஒரு முக்கிய அமைச்சர் 'மெலர்' ஒரு 'மேனகை'யுடன் சல்லாபம் செய்தது பற்றி பத்திரிகைகள் படுக்கை அறைப்புகைப்படங்களுடன் வெளியிட்டுவர- இந்த வேளையில் அமெரிக்க அதிபர் புஷ் அவர்கள் தமது தேர்தல் பிரச்சாரக்கூட்டங்களை அப்படியே கைவிட்டுவிட்டு அவசர அவசரமாக வெள்ளை மாளிகைக்கு திரும்பினார். தமது அரசியல் மற்றும் ராணுவ ஆலோசகர்களை வரவழைத்து ஈராக் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி உரையாடினார்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் பெக்கர் பேசும்போது: "ஈராக் மீது மீண்டும் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படலாம்" என்று எச்சரித்திருக்கிறார்.

திடீரென இந்த இறுக்க நிலை ஏற்பட்டமைக்கு காரணம் என்ன? வளைகுடாப் போரை நிறுத்த ஈராக்குக்கும் ஐ.நா.மன்றத்துக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைப்படி ஈராக்கின் அண்ணன் சதாம் அவர்கள் தம்மிடமுள்ள அணு ஆயுதக்கையிருப்புகளை வெளியிடுவார்- அகற்றுவார்- என்று ஒத்துக்கொள்ளப்பட்டது.

இதனை உறுதிப்படுத்த ஐ.நா. ஆயுதப்பரிசோதகர்கள் குழு ஒன்று ஈராக்கிற்கு அனுப்பிவைக்கப் பட்டது. பல கட்டடங்களை பல தடைகளின் பின் பார்வையிட்ட இக்குழு பல பத்திரங்களை கைப்பற்றியது. பல ஆயுதங்களை பறிமுதல் செய்தது. இறுதியில், ஈராக்கின் விவசாய அமைச்சு வாசலில் வந்து நின்றது ஐ.நா.குழு. இவர்களை உள்ளே அனுமதிக்க முடியாது என்று ஈராக்கியர்கள் மறுத்தார்கள். 'உள்ளே சென்றே தீருவோம்' என்று விடாப்பிடியாக நின்ற ஐ.நா.குழுவினர் அங்கேயே 'தவமிருந்தார்கள்'. அவசரப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. தோல்வி கண்டன.

இந்த நிலையில் தான் அமெரிக்க அமைச்சரின் எச்சரிக்கை; ராணுவ தாக்குதல் பற்றிய பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஈராக் இதற்கெல்லாம் அஞ்சுகிறதா? பின்வாங்குகிறதா? இல்லவே யில்லை!

"ராணுவப் பயமுறுத்தல் விடுக்கப்படுகிறது என்பதற்காக நாம் ஏன் பின் வாங்க வேண்டும்?..." என்று எழுதியிருக்கிறது ஈராக்கின் பாபெல் பத்திரிகை. இந்தப் பத்திரிகையின் உரிமையாளர் அதிபர் சதாமின் மூத்த புதல்வர்! 'அல் தவ்ரா' என்ற மற்றோர் ஈராக்கிய பத்திரிகை எழுதும் போது: "ஐ.நா. மன்ற அதிகாரிகள் அமெரிக்காவின் சேவகர்களாக பணியாற்றுகிறார்கள்!" என்று குற்றஞ்சாட்டியிருக்கிறது.

குவேத் நாடு ஈராக்கின் ஒரு பகுதி என்று உரிமை பாராட்டியபடி குவேத்துக்குள் நுழைந்த ஈராக் குவேத்தை தனது 9வது மாநிலமாக பிரகடனம் செய்து ஈராக்கிய வரைபடத்தையே மாற்றி எழுதியது பழைய செய்தி.

வளைகுடாப்போர் ஆரம்பித்து நூற்றுக்கணக்கான உயிர்கள் அழிந்து சொத்துக்கள் சேதமடைந்து ஈராக் குவேத்திலிருந்து விரட்டப்பட்ட பின்னர் கூட ஈராக் இந்த 'உரிமைப் பிரச்சினை'யை விட்டதாக தெரியவில்லை. ஈராக்கின் பஸ்ரா பல்கலைக்கழகம் அண்மையில் வெளியிட்டுள்ள அதிகாரபூர்வமான வரலாற்று நூல் ஒன்றில்; "குவேத் ஈராக்கின் ஒரு பகுதிதான்!" என்று ஆணித்தரமாக வலியுறுத்தியிருக்கிறது.

வளைகுடாப்போரின் "இரண்டாம் அத்தியாயம்; விவசாய அமைச்சு தாக்குதல் காண்டம்!" அடுத்த சில தினங்களில் ஆரம்பமாகுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# பொஸ்னியாவின் தொடரும் பெருந்துயரம்

உலகநாடுகளின் மாமன்றம் கண்டனப் பிரேரணைகளையும் ஏற்றுமதித் தடைகளையும் அறிவித்தும் பொஸ்னியப் பெருந்துயரம் தொடர்கிறது. பொஸ்னியா மீது தாக்குதல் நடத்தும் சேர்பிய ஆக்கிரமிப்பாளர்களை அடக்க எந்த மேல் நாட்டினாலுமே முடியவில்லை. ஐரோப்பியக் குடும்ப நாடுகளின் தலைமையில் இங்கு இலண்டனில் கடந்த வாரம் ஒரு சமரச மகாநாடு கூட்டப்பட்டது. பொஸ்னியர்கள் வந்தார்கள். சேர்பியர்கள் வந்தார்கள். ஆனால் ஒரே மேசையில் ஒன்றாக உட்கார மறுத்தார்கள். இதனால் சமரசத்தலைவர் பிரிட்



டனின் முன்னாள் வெளியுறவு அமைச்சர்- தற்போது பிரபு ஆக்கப்பட்டுள்ள கரிங்டன் பிரபு, சண்டையிடும் குழுத்தலைவர்களுடன் தனித்தனியாகப் பேசினார். ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் சண்டை நிறுத்தத்தைக் கடைப் பிடிப்போம் என்று பொஸ்னிய, சேர்பிய பிரதிநிதிகள் ஒப்புக்கொண்டு தத்தம் நாடுகளுக்கு திரும்பினார்கள். ஞாயிற்றுக்கிழமையும் வந்தது. சண்டை ஓய்ந்தது போலத் தெரிந்தது. இது நிரந்தர ஓய்வா அல்லது புயலுக்கு ஒரு அறிகுறியா என்பதை யாராலும் ஊகிக்க முடியவில்லை.

அடுத்த சில தினங்களில் பொஸ்னியாவில் மீண்டும் தீப்பிழம்புகள் வெடித்தன. இலண்டனில் கரிங்டன் பிரபுவின் முன்னிலையில் ஏற்படுத்தப்பட்ட 'சண்டை நிறுத்த உடன்படிக்கையும்' அந்தத்தீயில் கருகிச் சாம்பலானது! விரக்தியடைந்த ஐ.நா .ராணுவத்தளபதி லூயிஸ் மக்கென்ஸீ சொன்னார் : "சண்டை நிறுத்தம் என்று ஒன்றை ஏன்தான் ஏற்படுத்துகிறார்களோ தெரியவில்லை! ஒவ்வொரு முறையும் சண்டை நிறுத்தத்தின் பின்னர்தான் சண்டை மிகமோசமாக வெடித்துக்கிளம்புகிறது!..." பொஸ்னியத் தலைநகர் சரயேவோவிலிருந்து சுமார் 100 குழந்தைகள் இவ்வாரம் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டார்கள். பிரான்ஸ் நாட்டின் மனிதாபிமான நிறுவனம் ஒன்று அனுப்பிய இரண்டு பஸ்வண்டிகளில் இந்தக்குழந்தைகள் ஏறிப் புறப்பட்டபோது பெற்றோர் கண்ணீர் மல்க வழி அனுப்பிய காட்சி கல் நெஞ்சையும் உருக்கும் காட்சி!

"இங்கே எங்களுக்கு உண்ண உணவு இல்லை. ஆனால் எனது மகன் குழந்தைப் பையன். அவன் பசியுடன் ஏன் இருக்க வேண்டும்? அவனுக்கு உணவு கிடைக்க வேண்டுமானால் அவன் எங்களை விட்டுப் பிரிவதைத்தவிர வேறு வழியில்லை!" என்று தன் 9 வயது மகனை முத்தமிட்டு பஸ்ஸில் ஏற்றி வேற்று நாட்டுக்கு அனுப்பி வைத்தார் ஒரு தாயார்.

இந்தப் பெற்றோரும் குழந்தைகளும் இனி எந்த நாட்டில் எப்போது சந்திப்பார்கள் என்பது விடை தெரியாத வினா. உலகப் போர் நடைபெற்ற காலத்தில் இங்கிலாந்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்படவிருக்கிறது என்ற தகவல் கிடைத்ததும் உடனே இலண்டனில் ஆரம்பமாகியது 'எவகுவேஷன்'! (குழந்தைகள் அப்புறப்படுத்தல்) நூற்றுக்கணக்கான குழந்தைகள் விசேஷ ரயில் வண்டி ஒன்றில் ஏற்றப்பட்டு இலண்டனில் 'சறிங் குறொஸ்' ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட காட்சி நினைவுக்கு வருகிறது. தமக்கு மன திடம் தரும் தமது 'ரெடி பெயரை' (பொம்மைக்கரடியை) அரவணைத்தபடி அப்பா அம்மாவுக்கு கையசைத்து- கண்ணீர் மல்க விடைபெற்ற காட்சியை அன்றைய பிரிட்டிஷ் மக்கள் இன்னும் மறக்கவில்லை! எப்படி மறக்க முடியும்?

பொஸ்னியாவில் குழந்தைகளை மட்டுமல்ல பெற்றோரையும் அகதிகளாக்கியுள்ளது இந்த யூகோஸ்லாவிய அவலம். ஏற்கனவே 20 லட்சம்பேர் அகதிகளாக்கப் பட்டிருக்கிறார்கள். இன்னும் 15 லட்சம் பேர் இவர்களுடன் சேர்ந்து அகதிகளாவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பொஸ்னிய அகதிகளில் சுமார் 2 லட்சம்பேர் ஏற்கனவே ஜேர்மனி போய் சேர்ந்திருக்கிறார்கள். மேலும் ஐயாயிரம் அகதிகளை தானாகவே 6 ரயில் வண்டிகளை அனுப்பி வரவழைக்க இருக்கிறது ஜேர்மனி! 6 ரயில் வண்டிகளில் 3 வண்டிகள் திரும்பி வந்துவிட்டன. பிறந்து ஓரிரு தினங்கள் கூட ஆகாத பச்சிளம் குழந்தைகள் சில உட்பட மொத்தம் 2,700பேர் 3 ரயில்களில் வந்திருக்கிறார்கள். பொஸ்னிய அகதிகள் பிரச்சினையை ஜேர்மனி, அவுஸ்திரியா, இத்தாலி ஆகிய மூன்றேமூன்று நாடுகளின் தலையில் மேற்குலக நாடுகள் சுமத்திவிட்டு ஒதுங்கி விட்டதாக ஜேர்மனி குற்றஞ் சாட்டியிருக்கிறது. இன்ன நாடு இத்தனை பொஸ்னிய அகதிகளை ஏற்றே ஆகவேண்டும் என்று கட்டாயமாக்கும் விகிதாசாரமுறை ஒன்று பற்றி- ஜெனிவாவில் அகதிகள் பற்றிய மகாநாட்டில் தாம் பிரேரிக்க போவதாக ஜேர்மனி கூறியிருக்கிறது.

## உலக அரங்கில்

## இவ்வார அரசியல் கள கண்ணோட்டம்

-விமல் சொக்கநாதன்-

# எழுத்துச் சுதந்திரமா பத்திரிகா தர்மமா?

ஒரு நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம்- எழுத்துச் சுதந்திரம் இருக்கிறதோ இல்லையோ- ஒரு எழுத்தாளன் தனது எழுதுகோலை காகிதத்தில் பயன்படுத்த ஆரம்பிக்க முன் தன் மனோதர்மத்தைப்பற்றி சிந்திக்க வேண்டும். 'நான் எழுதப் போவது உண்மைதானா? இதனால்- பல குடும்பங்களுக்குள் பிரச்சினைகள் ஏற்படுமா? இந்த உண்மையை மக்கள் அறியவேண்டியது- அவசியந்தானா,...

ஒரு பத்திரிகையாளனுக்கு ஏற்படும் கலக்கம் பாரதப்போரில்- பார்த்திபனுக்கு ஏற்பட்ட கலக்கத்தை ஒத்தது. "என் கண்முன்னால் என் குருநாதர்- என் அண்ணன்மார்- என் குலகுரு அனைவரும் நிற்கிறார்கள்! இவர்கள் மீது நான் எப்படி தாக்குதல் நடத்துவேன்!" என்று கலங்கினான் அர்ச்சுனன்! தேரோட்டியாக அமர்ந்திருந்த கிருஷ்ண பரமாத்மா பேசத் தொடங்கினார். பாகவதம் பிறந்தது. பிரிட்டிஷ் பத்திரிகையாளர்கள் பாகவதம்- பாகவத்கீதை படித்ததில்லை. எனவே மயக்கங்கள்- சபலங்கள் ஏற்படும்போது கண்களை மூடிக்கொண்டு எழுதித்தள்ளுகிறார்கள். இல்லை இல்லை; மன்



னிக்கவும்- வேட் புறோசெசரில் வைத்து அமுக்குகிறார்கள்.

நான்கு சுவர்களுக்குள் இருக்க வேண்டிய விஷயங்கள் பத்திரிகைகளில் எழுதப்பட்டு விமரிசிக்கப்பட்டு சிரிப்புக்கிடமாகின்றன. அரச குடும்பத்தினரின் அந்தப்புர வாழ்வைப்பற்றி எழுதுவதையே தமது தொழிலாகக் கொண்ட அரசவை நிருபர்கள் (றோயல் ரிப்போர்ட்டர்கள்) சிலர் அரச குடும்ப இளவல்களின் வாழ்க்கையின் சந்துபொந்துகளில் எல்லாம் நுழைந்து சேகரித்த குப்பைகளையெல்லாம் பொதுமக்கள் முன் செய்திகளாக பிரசுரித்தார்கள். பத்திரிகைச் சுதந்திரம் பத்திரிகைக் கமிஷன் என்றெல்லாம் சில வாரங்கள் ஏதோ பேச்சடிபட்டது. இது பற்றி விசாரணை செய்ய ஒரு அமைச்சரும் நியமிக்கப்பட்டார்; பத்திரிகைகள் தமது வாலைச்சுருட்டிக்கொண்டு சொற்பகாலம் சும்மா இருந்தன! அப்படியே இருந்திருக்கக் கூடாதா?

பிரதமர் மேஜரின் அமைச்சரவையில் சேமநலத்துறை அமைச்சராக பணியாற்றுபவர்- ஸ்ரீமதி வேர்ஜினியா பொட்டம்லீ அம்மையார். அவரது கணவர் திரு பொட்டம்லீ கூட கன்சர்வேட்டில் கட்சியின் ஒரு எம்.பி.ஆக இருக்கிறார். திருமணம் செய்யாமல் கர்ப்பம் தரிக்கும் இளம் பெண்களைப்பற்றி அரசின் சார்பில் கவலை தெரிவித்துப் பேசிய அமைச்சர் வேர்ஜீனியா அம்மையார் இதுபற்றி அரசு எடுக்கவிருக்கும் உதவித்திட்டங்களை ஒருநாள் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இரத்தத்தின் சுவை கண்டுவிட்ட காட்டு மிருகங்கள் மீண்டும் கொல்ல முற்படுவதுபோல- பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று (இம்முறை 'இன்டிபென்டன்ட்' என்ற கட்சிச் சார்பற்ற பத்திரிகை:) துப்பறிய முற்பட்டது. பிரிட்டனில் பிறப்பு இறப்பு திருமண பதிவேடுகள் ரகசியமானவை அல்ல. யாரும் எப்போதும் போய் புரட்டிப்பார்க்கலாம். பிரதிகள் எடுக்கலாம்! அமைச்சர்

(18ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

G COM

கோடை விடுமுறையில் சிறார்களின் தொல்லையா? தவிர்த்திடுவீர்!

# பரிசளிப்பீர்!!



## 386SX , 386DX, 486

உங்கள் கம்ப்யூட்டர் தேவை எதுவாயினும் நாடுங்கள்

# கம்ப்யூட்டர் தயாரிப்பிலும், தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதிலும் ஆறு ஆண்டு கால அனுபவம் வாய்ந்த நிறுவனம்

## G-COM COMPUTERS LTD

253 Western Avenue, London, W3 OPP, United Kingdom.

தொலைபேசி : 44-(0)81-992 8384

www.tamilarangam.net

# எங்கள் பரம்பரை

## வழுவூர் ராமையா பிள்ளை

நம்மிடையே வாழ்ந்த நடன ஆசிரியர்களில் தலைசிறந்த ஒருவர் வழுவூர் ஸ்ரீ ராமையாபிள்ளை. இவர் இந்தக் கலையில் தமக்கென ஒரு தனிப்பாணியை வகுத்துக்கொண்டவர். இவரிடம் பயின்று புகழ் பெற்றவர்களில் கமலா, ஆனந்தி, ராதா, வைஜந் திமாலா, விஜயா, எல்.விஜயலட்சுமி, ஈ.வி.சரோஜா, எம்.பானுமதி, சித்ரா விஸ்வேஸ்வரன், ராதிகா பாலகிருஷ்ணன், ராதிகா வேங்கடராமன், சந்திரிகா, பத்மா சுப்பிரமணியம் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

இவர், 'வழுவூர் கிளாசிகல் பரதநாட்டிய ஆர்ட் சென்டர்' என்ற கலைக்கூடத்தை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவித்து மிகத் திறம்பட நடத்தி வந்தார். இவருடைய அடிச்சுவட்டைப் பின் பற்றி இவர் புதல்வர் ஸ்ரீ வி.ஆர்.சாமராஜ் பல கலைஞர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு முன்னேறி வருகிறார்.


'நாட்டிய கலாகேசரி', 'இசைப்பேரறிஞர்', 'கலைமாமணி' முதலிய சிறப்புப் பட்டங்களோடு 'பத்மஸ்ரீ' விருதையும் இவர் பெற்றிருந்தார்.

தம்முடைய ஊரைப்பற்றியும் அங்குத் தோன்றி வளர்ந்து படர்ந்த நாட்டியக் கலையைப் பற்றியும் ஸ்ரீ ராமையாபிள்ளை 20 ஆண்டுகளுக்கு முன்னர் 'கலைமகள்' சஞ்சிகைக்கு உணர்ச்சிததும்பக் கூறுகிறார்:


வழுவூர் நாட்டியாசார்ய பரம்பரை மிக மிகப் புராதனமானது. தொன்றுதொட்டுப் பல நூற்றாண்டுகளாக அந்தப் பரம்பரையில் பல வித்துவான்கள் பிரபலமாக இருந்திருக்கிறார்கள்.

ராஜராஜசோழன் காலத்தில் எங்கள் முன்னோர்களில் பிரபலமாக இருந்த ஒருவரிடம் குந்தவி நாச்சியார் நாட்டியம் பயின்றதாகவும், அதற்குச் சம்மானமாக ஆசிரியருக்கு அக்காலச் சம்பிரதாயப்படி மானியங்கள் அளிப்பதற்குச் சக்கரவர்த்தி முன்வந்ததாகவும், அந்த ஆசிரியர் அந்த மானியத்தை வழுவூரில் எழுந்தருளியுள்ள ஞானசபேசருக்கு அளிக்குமாறு கேட்டுக்கொண்டதாகவும் கூறுவர். தம் பேரில் மன்னனின் மானியம் இருந்தால் ஐசுவரியச் செருக்கினால் பரம்பரையிலே கலையபிவிருத்தி தடைப்பட்டுவிடுமோ என்ற ஐயத்தினாலேயே அவர் அவ்வாறு கேட்டுக்கொண்டாராம். சக்கரவர்த்தியும் அந்தக் கருத்துக்கு இசைந்து அவ்வாறே செய்ததாகவும் பழைய வரலாறுகள் கூறுகின்றன. குந்தவி நாச்சியார் பேரில் வழுவூர் ஞானசபேசருக்குப் பிரதோஷக் கட்டளைக்கு மானியம் விடப்பட்டிருப்பதை அங்கே உள்ள கல்வெட்டு இன்றைக்கும் அறிவிக்கிறது.

வழுவூர் அட்டவீரட்ட க்ஷேத்திரங்களில் ஒன்றாகும். கஜ சம்ஹார க்ஷேத்திரம். ஈசுவரன் தாருகாவன ரிஷிகளால் ஏவப்பெற்ற கஜேந்திரனைச் சங்காரம் செய்து, அந்தக் கரியின் தோலை இடையில் தரித்ததனால் பகவானுக்குக் கிருத்திவாசன் என்று ஒரு பெயர். அந்தக் கஜத்தின் மத்தகத்தின் மேல் பூத தாண்டவம் என்னும் தாண்டவமாடி, தாருகாவன ரிஷிகள் அடைந்திருந்த அகம்பாவத்தை அடக்கி அவர்களிடம் உண்மையான ஞானம் பிரகாசிக்கச் செய்ததனால் ஞானசபேசர் என்று மற்றொரு பெயர். அந்த ஸ்தலத்தை ஞானபூமி என்றும், சபையை ஞானசபை என்றும் வழுங்குவர்.



வழுவூர்ப் பரம்பரையில் சமீப காலத்தில்- அதாவது இந்தத் துறையில் மிகுந்த வியாபகமாக இருந்தவர் என் பாட்டனார் வழுவூர் சாம நட்டுவனார் அவர்கள். அவருக்கு மிகச் சிறந்த மாணவ மாணவிகள் பலர் இருந்தார்கள். வழுவூர் நாகம்பாள் என்பவர் பரதநாட்டியத்தில் அப்பொழுது மிகப் பிரபலமாக இருந்தார். சாம நட்டுவனார் மைசூர், திருவனந்தபுரம் மற்றும் தமிழ்நாட்டில் ஞானவான்கள் உள்ள ஜமீன்கள் முதலிய இடங்களில் கலைநிகழ்ச்சிகள் புரிந்து அமோகமான பாராட்டுக்கள் பெற்றிருக்கிறார். அக்காலத்தில் இருந்த மைசூர் மன்னர் சாமராஜ உடையார், கிருஷ்ணராஜ உடையார் இவர்கள் பேரில் தில்லானா இயற்றியிருக்கிறார். அவருக்குப் பின் பிரகாசமாக விளங்கிய என் குரு வழுவூர் மாணிக்கம்பிள்ளை அவர்களின் மாணவிகளில் சிறந்தவரான மதுராந்தகம் ஜகதாம்பாள் அம்மாள் என்பவர் ஆட்டத்திலும் அபிநயத்திலும் நிகரற்று விளங்கினார்கள்.



வழுவூர் நாகம்பாள் அம்மாள், திருவாரூர் ஞானத்தம்மாள், மதுராந்தகம் ஜகதாம்பாள் அம்மாள் மூவரும் பரதக் கலையில் மும்மணிகளாக ஒளிர்ந்தார்கள்.

அபிநயம் என்கிறபோது, முக்கியமாக ஒன்றை இங்கே குறிப்பிட வேண்டும். 'பிரதி பத தாத்பர்யம்' என்று வடமொழியில் குறிப்பிடுவதற்கிணங்க, 'சொல்லுக்குப் பொருள்' பிடிப்பதில்லை. ஒரு சொல்லைச் சுட்டிப் பல பொருள்களை விளக்குவதே முறை.

உதாரணமாக, பரசு ராகத்தில் அமைந்த 'மெல்லனி மாட்ட', தேவகாந்தாரியில் அமைந்த 'தாமரஸாக்ஷ' முதலிய மிகச்சிறந்த பதங்களுக்கு, வந்த கல்பனை மீண்டும் வராமல் விதவிதமான கல்பனைகளை அவர்கள் அபிநயிப்பது சாலச் சிறந்ததாகும். அந்தக் கல்பனைகளுக்குத் தக்கபடி பாடுகிறவர்களும் பாவத்தோடு பாடும் முறை போற்றுதலுக்குரியதாகும்.

முன்பெல்லாம் பதங்களும் மற்றும் பெரும்பாலான பாடல்களும் தெலுங்கு மொழியிலேயே இருந்து வந்தன. சில காலத்துக்கு முன்பிருந்துதான் தமிழ்ப் பாடல்கள் தோன்றிப் பரவலாயின. முன்பு மொழி புரிந்தவர்களும் புரியாதவர்களுங்கூட, பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் அபிநயத்தைக் கொண்டு பொருளை நன்கு உணர்ந்து ரசித்தார்கள். தமிழ்ப் பதங்கள் பரவிய பின், பாடலின் பொருளைக் கேட்ட மாத்திரத்தில் உணரக்கூடிய நிலையில், ஏற்ற அபிநயங்கள் குறையலாயின. ஒரே அம்சத்தை விளக்கப் பல அபிநயங்கள் மிக உயர்ந்த முறை. இதற்கு ஏற்ற ஓர் உதாரணமாகத் தமிழில், 'சொன்னதெல்லாம் மறந்தாரோ- என்னைச் சோதனை செய்யத் துணிந்தாரோ!' என்ற வாக்கியங்களுக்கு மடித்து மடித்துப் பல வேறு பொருள்களை அபிநயத்தால் உணர்த்தலாம். 'சொன்னதெல்லாம்'- என்ன சொன்னார், எந்த எந்த நிலையில், எத்தகைய ஈடுபாடான வேளைகளில் சொன்னார்- என்பன போன்ற விளக்கங்களை அபிநயபூர்வமாக உணர்கிறபோது பார்ப்பவர் உள்ளம் பரவசமுறும்.

கலையின் தொடர்பாகச் சில நிகழ்ச்சிகள் இப்போது என் நினைவுக்கு வருகின்றன. ஆண்டுதோறும் சிறப்புற நடைபெறும் சங்கீத வித்துவத் சபை நிகழ்ச்சிகளில் பங்கு பெறச் சில ஆண்டுகளுக்கு முன் நாதஸ்வர வித்துவான் குழிக்கரைப் பிச்சையப்ப பிள்ளை வந்திருந்தார். அவருக்குத் தவில் வாசிக்க நாச்சியார் கோயில் ராகவ பிள்ளை வந்திருந்தார். இவர்கள் என் விருந்தினராக என் இல்லத்தில் தங்கியிருந்தார்கள். அப்பொழுது வித்துவத் சபைக்குச் சொந்த கட்டிடம் ஏற்படவில்லை. நிகழ்ச்சிகள் மயிலை பி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் நடைபெறுவது வழக்கம்.

"புதிதாகப் பல்லவி ஏதாவது சொல்லுங்களேன். இரவு நிகழ்ச்சியில் வாசிக்கிறேன்" என்று கேட்டார் பிச்சையப்பபிள்ளை. "பழசு தான் தெரியும். 'மாம்பழப் பல்லவி' என்று அதற்குப் பெயர்." 'சோலையிலே கட்டிமாம், பழம் பழுத்திருக்குது பன்னிருகை வேலனே' இந்தப் பல்லவியைச் சொல்லி "இது திஸ்ரமும் சதுஸ்ரமும் கலந்தது. சதுஸ்ரஜாதி திரிபுடையில் ஒரே ஆவர்த்தத்தில் முன்பகுதி திஸ்ர நடையும் பின்பகுதி சதுஸ்ர நடையும்" என்று தாளத்தைப் போட்டுப் பாடிக் காட்டினேன். இருவரும் சிறந்த மேதைகளானதால் அநாயாசமாக இதை மனத்தில் வாங்கிக்கொண்டார்கள். மேலெழுந்தவாரியாக நோக்குமிடத்து மிகவும் எளிதாகத் தோற்றும் இது காலப் பிரமாணத்தைத் தள்ளத் தள்ள இடைஞ்சல் தருவதாக அமையும்.

நிகழ்ச்சியில் பைரவியை அற்புதமாக ஆலாபனம் செய்துவிட்டுப் பல்லவியை எடுத்தார் பிச்சையப்பபிள்ளை. ராகவபிள்ளை உற்சாகத்துடன் வாசிக்கலானார். ஆனால் கணக்கு வழக்குகள் சரிவரவில்லை. முன்னணியில் அமர்ந்திருந்த பெரிய பெரிய இசைமேதைகள் நிமிர்ந்து உட்கார்ந்து தாளமிட ஆரம்பித்தார்கள். அப்பொழுதும் சரிவரவில்லை. பல்லவிக்கு அடிப்படை தாளம். 'இன்ன முறை' என்பதைப் புரிந்துகொண்டுவிட்டால் எளிதாகத் தாளமிடலாம். தாளக்காரரிடம் முன்கூட்டி விவரம் அறிவிக்காததுதான் இந்த நிலைக்குக் காரணம். கலையின் பலதுறை அறிஞரும் லயமேதையுமாகிய அம்மாசத்திரம் கண்ணுச்சாமி பிள்ளை அவர்களின் புதல்வர் திருவழுந்தூர் கணேசபிள்ளை அருகிருந்தார். அவரிடம் விவரம் உரைத்ததும் அவர் முன்னணியில் சென்று தாளமிட்டார். தாளக்காரர் புரிந்துகொண்டார். அதன் பின்னர் அந்தப் பல்லவி பிரமாதமாக அமைந்தது.



மதுரை, சௌராஷ்டிர சங்கீத சபையில் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி இது. முதல் நாள் மைசூர் சௌடையா அவர்களின் ஸோலோ கச்சேரி நடைபெற்றது. மறுநாள் அங்கே கமலாவின் பரதநாட்டியம் என்று அறிந்ததும் அதனைக் கண்டு களிக்க வேண்டும் என்று சௌடையா அங்கே தங்கிவிட்டார்.

மறுநாள் கமலாவின் பரதம் நடந்தது. இடையில் மாலை மரியாதைக் கட்டத்தில் "நான் இரண்டு வார்த்தைகள் பேசுகிறேன்" என்று கூறிவிட்டுப் பேசினார். "பல காலத்துக்கு முன்பு கண்டு களித்த சாஸ்திரீய நடனத்தை மீண்டும் இன்றுதான் காண்கிறேன். என் உள்ளம் இப்பொழுது ஆனந்தத்தால் நிறைந்திருக்கிறது" என்றவர் தாம் அணிந்திருந்த தங்கப் பதக்கத்தைக் கழற்றினார். "இதில் நடராஜப் பெருமானின் உருவம் இருக்கிறது. இதை அணியும் தகுதி இவருக்கே உண்டு" என்றவர் அதனை எனக்கு

(17ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## சங்கர் (தமிழோசை சங்கரண்ணா)

சிறுகதை

> **முன் கதை:**
> இலண்டன் ஹேம்ஸ்டெட் பகுதியில் வாழ்ந்து வரும், ஸ்வீடிஷ்காரரான பெர்க்மன் அவர்களுடைய ஒரே மகள், இளம்பெண் நார்மா. 20 வயது! அவளோடு குட்டியிலிருந்தே 'ஒட்டிப்' பழகிய செல்ல நாய், அல்சேஷன் ஸீஸருக்கு ஒரு 'விசர்'! வீட்டிற்கு வரும் எல்லோரிடமும் அன்போடு பழகி வாலைக் குழைக்கும் அந்த நாய்க்கு, நார்மாவின் காதலன் ஸ்டீஃபானைக் கண்டால் மட்டும் ஆகாது! நார்மாவிடம் அவன் சகஜமாக, சரஸமாகப் பழகுவது கண்டு, பிடிக்காமலோ என்னவோ மனத்துள் 'கறு' வைத்து உறுமிக் கொண்டிருந்த– பொறுமிக் கொண்டிருந்த அது, ஒரு நாள் நார்மாவைத் தேடி, அவள் இல்லாத சமயம் வீட்டுக்கு வந்த ஸ்டீஃபானைக் கடித்துக் குதறிவிட்டது! நார்மாவின் தந்தை அவனை மருத்துவமனையில் சேர்த்து விட்டு வந்தவர், கோபவெறியில் அந்த நாயைச் சுட்டுக் கொன்று விட்டார்!
> தன்னுடைய 'செல்லநாய்' கொல்லப்பட்ட செய்தியும் காதலன் ஸ்டீஃபானுக்கு ஏற்பட்ட கதியும், நார்மாவைத் கதி கலங்கச் செய்கின்றன. சின்னாட்கள் மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெற்று உடல் நலம் தேறி விடுபட்டதும், நேரே டார்பிஷயரில் ஒரு வாரம் பெற்றோர்களுடன் தங்கிவிட்டுக் காதலி நார்மாவைப் பார்க்கப் பேராவலுடன் ஹேம்ஸ்டெட் நோக்கி வருகிறான் ஸ்டீஃபான்!



–4–

இரவு ஒன்பது மணி தாண்டியிருக்கும். 'கோல்டர்ஸ் க்ரீன்'– டியூப் ஸ்டேஷனில் இறங்கி, ஹேம்ஸ்டெட் செல்லும் சாலையில் கால் பதித்ததுமே ஸ்டீஃபானின் உள்ளம் பரவசத்தால் பரபரத்தது. பத்து நிமிட நடை! நார்மாவைத் தரிசித்து விடலாம் என்ற ஆவலில் வேகமாக நடந்து கொண்டிருந்தான்!

பிரிட்டிஷ் வேனிற்கால நியதிப்படி எங்கும் நல்ல வெளிச்சம் படர்ந்திருந்தது. 'புல் அன்டு புஷ்' தவரணை மதுச்சாலை முன்றிலில் சட்டியில் நீர் அருந்தும் புறாக்களைப் போல வட்ட மேஜைகளில் சுற்றிவர அமர்ந்து மதுவருந்திக் கொண்டிருந்த இள வட்டங்கள்– இளம் 'பெட்டை'களின் ஆனந்த ஆரவாரக் கும்மாள ஒலிகளைப் பிளந்து கொண்டு "ஸ்டீஃபான்!...." என்று அழைக்கும் குரல்கேட்டுத் திரும்பிப் பார்த்தான்!

திருவாளர் பெர்க்மன்!

என்ன விந்தை! மதுச்சாலையில் பெர்க்மன்! அதுவும் தம் மாளிகையை அடுத்துள்ள பேட்டையில், 'பப்'பில் வந்து பருக வேண்டிய அவசியம் அவருக்கு "எப்படி வந்தது?" என்ற வியப்புடன் ஒரு கணம் திகைத்து நின்று விட்டான் ஸ்டீஃபான்! வீட்டில் எவ்வளவு அழகான 'பார்' வைத்திருப்பவர்! பருகவே வேண்டாம், அதிலுள்ள விதம் விதமான மதுவகைகளைப் பார்த்தாலே போதும், ஒரு 'கிக்' வருமே, அதனை உதைத்துத் தள்ளிவிட்டுத், தவரணைக்கு வந்து 'ஸ்ருதி' கூட்டவேண்டிய நிர்ப்பந்தம் என்ன?

ஸ்டீஃபானின் கையிலிருந்த சிவப்பு ரோஜாச் செண்டு, தொட்டால் அரிக்கும் 'நெட்டில்' செந்தட்டிக் கற்றையாக மாறுவதுபோல் ஒரு பிரமை!

"கமான் இன் ஸ்டீஃபான்!... லெட்ஸ் ஹேவ் எ டிரிங்"

ஸ்டீஃபானுக்கு ஒன்றும் பிடிபடவில்லை!....

ஏற்கெனவே அவர் சேர்த்த 'ஸ்ருதி', உச்சஸ்தாயியையும் தாண்டி மேலே 'சஞ்சரித்துக்' கொண்டிருந்ததை அவர் குரலின் 'ஒலிநயம்' அவனுக்கு உணர்த்திற்று!

அவனைக் கைப்பிடியாக அழைத்துக் கொண்டு உள்ளே போய் ஓர் ஓரத்தில் தாம் அமர்ந்து 'தாகசாந்தி' செய்துகொண்டிருந்த இருக்கைக்குப் பக்கத்தில் அமர்த்தினார்!

"ஹௌ'ஸ் நார்மா?...."

அதைக் காதில் ஏற்றுக் கொள்ளாதவரைப் போல "வாட் வுட் யூ லைக் மை பாய்?! என்று கேட்டார் பெர்க்மன்!

"ஸம் ஸாஃப்ட் டிரிங் ப்ளீஸ்....... அய்தர் 'கோக்' ஆர் 'பெப்ஸி'"

பெர்க்மன் அந்த மதுச்சாலையே அதிர்ந்து போகும்படி 'கட கட' வெனச் சிரித்தார்! அந்தச் சிரிப்பொலியில் 'ஷிவாஸ் ரீகல்' ஸ்காட்ச் விஸ்கியின்– நான்கு 'டபுள்'களோடு, 'கொர்வாஸியே' நெப்போலிய 'பிராண்ட்' பிராந்தியின் கூட்டுறவும் கலந்து 'நெடி' வீசியது!

"ஸ்டீஃபான்!...ஐ நோ யூ!... நல்ல பிள்ளை, உன்னை என்றைக்கு முதன்முதலில் பார்த்தேனோ, அன்றே, என் நார்மாவுக்கு ஏற்ற மணவாளன் நீ தான் என்பதை முடிவு செய்துவிட்டேன்!... ஐ'ம் எ பிட் ஸெல்பிஷ்!.... வீட்டுக்கு அப்புறம் போகலாம்; நார்மா எங்கும் ஓடிப்போய்விட மாட்டாள். முதலில் என்னோடு கொஞ்சம் இரு! உன்னிடம் நிரம்பப் பேச வேண்டியிருக்கிறது..." என்று கூறிய பெர்க்மன், 'பார்' கவுண்டருக்குத் தள்ளாடிச் சென்று, இரண்டு 'கிளாஸ்'களுடன் திரும்பி வந்தார்!

"எனக்கும் விஸ்கியா? என்ன இது!..."

"தம்பீ...சாப்பிடு!.... மது, போதை என்பதெல்லாம் 'மனத்தைப்' பொறுத்த விஷயம்! சிற்சில சமயங்களில் வெறும் 'மின்ரல் வாட்டரைக்' குடித்துவிட்டே நான் 'ட்ரங்'காகியிருக்கிறேன். இன்றைக்கு 'எதைத்தான் கலந்து, எவ்வளவுதான்' ஊற்றினாலும் உள்ளே இருக்கும் 'அட்லாண்டிக்' அடங்கமாட்டேன் என்கிறது!....வாட் கேன் ஐ டு?... ப்ளடி நெமிஸிஸ்!... தலையெழுத்து....."

ஸ்டீஃபானுக்கு பெரிய கலக்கம்!... பெரியவர் ஏதோ சொல்லொணாத துயர வேக்காட்டில், உள்ளத்துக்குள்ளே வெந்து கொண்டிருக்கிறார் என்பது புலப்பட்டது!... இதற்கு முன் அவரை இந்நிலையில்– அதுவும் தன் முன்னிலையில் அவன் பார்த்ததில்லை!...

"அப்படி என்ன குடி முழுகுகிற– குடித்து முழுகுகிற கவலை?...."

ஓஹோ... ஓர் உயிர்ப்பிராணியை– தம்முடைய வீட்டு நாயைச் சுட்டுக் கொன்றதால் ஏற்பட்ட குற்ற உணர்வோ?..." என்று மனத்துள் ஊகித்த ஸ்டீஃபான் "ஸீஸரைப் பற்றி இன்னமும் உளைந்து கொண்டிருக்கிறீர்களோ? எ சேப்டர் இஸ் க்ளோஸ்டு!......அதைப்பற்றிக் கவலைப்படுவதில் எந்தப் புண்ணியமும் இல்லை!" என்றான்.

"யெஸ்!...ஓர் அத்தியாயம் முடிந்துவிட்டது!... ஆனால் 'புத்தகம்' முடியவில்லை!..."

"என்ன சொல்கிறீர்கள்?....."

"நாயைக் கொன்று விட்டேன்!... கொன்று புதைத்தாகியும் விட்டது. ஆனால் நாய் விடமாட்டேன் என்கிறது."

"என்னது?...

"ஆமாம் ஸ்டீஃபான்!... ஆமாம்... கடந்த ஒரு வாரகாலமாக– 'ஸீஸர்' நார்மாவின் கனவில் வந்து அவளைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது..."

"கொன்றது தாங்கள் அல்லவா,"

"'அது' நேசித்தது அவளையல்லவா?"

ஸ்டீஃபான் விலவிலத்துப் போய்விட்டான், பெர்க்மன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு! மேஜையிலிருந்த 'லார்ஜ் விஸ்கியை' அப்படியே எடுத்து ஒரே மடக்கில் உள்ளே தள்ளினான். உள்ளத்து விதிர்விதிர்ப்பில்– விஸ்கி– பச்சைத் தண்ணீராக 'ஆவி' கழன்று எந்தச் சுரத்தும் இன்றித் தன் 'பயணத்தை' முடித்துக் கொண்டது!

"வுட் யூ லைக் அனதர் ஒன்?..."

"யெஸ் ப்ளீஸ்!..." இரண்டு 'விஸ்கிகள்' வந்தன!

இரண்டு உள்ளங்களும் உரையாடத் தொடங்கின....

"ஸைக்காடிரிஸ்ட்– மனவியல் நிபுணர் பெஞ்சமின் வந்து பார்த்தார்! நார்மாவுக்கு 'மனம்' தடம்புரண்டு விட்டது என்பது இப்போது உறுதியாகிவிட்டது! ஒவ்வொரு நாளும், தூக்கத்தில்– நைட் மேர்!... ஸீஸரின் 'ஆவி' வந்து அவளை 'ஏதோ' செய்கிறது! அலறித் துடித்த வண்ணம் தூக்கத்தினின்றும் விழிக்கிறாள்!...என்னையோ, தாயார் உல்மானையோ அவளுக்கு இனம் தெரியவில்லை! பேந்தப் பேந்த விழிக்கிறாள்!.... பார்வையில் ஒரே வெறுமை, வெம்பரப்பு!...உன்னைப் பற்றியும் இதுவரை ஒரு வார்த்தை இல்லை!...தூக்கத்தில் அலறி எழுந்து 'ஸீஸர்...கெட் லாஸ்ட்!... நோ... நோ... என்ற கூச்சல்!... சென்ற வாரம், 'யூ.கே பிரம்மானந்த ஏக போக– யோக பவனத்தின் மணி மந்திர ஔஷத– சித்த வைத்திய சிகாமணி– ஸ்வாமி பிரபலானந்தா வந்து 'டேலிஸ்மன்'– தாயத்துக் கட்டிவிட்டுப் போனார்!... தாயத்தையும் நாய் 'அத்து' விட்டது, கனவில் வந்து!..." முடுக்கிவிட்ட 'டேப் ரெகார்டரைப்' போல போதை ஒருபுறம், மனத்தின் வேதனை ஒருபுறம் சுழித்துப் புரளப் பேசிக்கொண்டே போனார் பெர்க்மன்...

"இட்'ஸ் ஆல் நான்ஸென்ஸ, ஸ்டுபிட்!....என் 'நர்மாவுக்கு' பைத்தியமா பிடித்திருக்கிறது!... ஏதோ மனது 'அப்ஸெட்' ஆகியிருக்கலாம்... அதற்காக 'லூனடிக் அஸைலத்துக்கே' அனுப்பிடுவீங்க போலேருக்கே!... புறப்படுங்க... நான் இப்பவே போய் நார்மாவைப் பார்த்தாகணும்...."

"கொஞ்சம் பொறு தம்பீ!... அவளை நாளை பெஞ்சமின் பிரைவேட் கிளினிக்கில் சிகிச்சைக்காகச் சேர்க்க எல்லா ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டது! இப்போது, வீட்டில்தான் இருக்கிறாள்... உள்ளமும் உடலும் உருக்குலைந்து கிடக்கும் நிலையில் நீ இப்போது அவளைப் பார்ப்பதை நான் விரும்பவில்லை! உங்கள் இருவரின் எதிர்கால நன்மையை உத்தேசித்துத்தான் இதனைச் சொல்கிறேன்...." "புல் அன்டு புஷ்" மதுச்சாலை ஆப்பிரிக்கக் காட்டில் வனவிலங்கு "வாட்டர் ஹோல்"– நீர் அருந்தும் துறையாக ஸ்டீஃபானுக்குப் பட்டது!....

–5–

ஆறு மாதங்கள் அல்லோல கல்லோலம்!

"என்ன செலவானாலும் சரி, நான் தரத் தயார்; எப்படியும் என் மகளின் மன– நலம், உடல் நலம் மீண்டாக வேண்டும்! இது ஒன்றே இந்த ஜென்மத்தில் என் லட்சியம்!" என்றார் பெர்க்மன். மனத்தத்துவ நிபுணர்– புரபஸர் பெஞ்சமின் முகத்தில் பொருள் பொதிந்த புன்னகை ஒன்று பூத்தது! "மிஸ்டர் பெர்க்மன், ஒன்று கேட்கிறேன், வித்தியாசமாக எடுத்துக் கொள்ளாதீர்கள்; பதில் சொல்வீர்களா?...."

"என்ன விஷயம்?" "இந்த ஜென்மத்தில் என் லட்சியம்" என்றீர்களே, உங்களுக்கு இந்த மறுபிறவி, ஜென்மம் என்பதில் எல்லாம் நம்பிக்கையுண்டா? இல்லை, பேச்சு வழக்கில் வரும் சொற்றொடரை ஒட்டிச் சொன்னீர்களா?... பெர்க்மன் இந்தக் கேள்வியை, உள்ளபடியே எதிர்பார்க்கவில்லை. "வெல்... ஏதோ என் உள்ளத்தின் உறுதியை, நார்மாவின் மேல் நான் கொண்





(13ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புருஷா மிருகம்

12ம் பக்க தொடர்ச்சி

டுள்ள அன்பை, பாசத்தை உணர்த்தவே- இந்தப் பிறப்பில் என் லட்சியம் என்று குறிப்பிட்டேன்... ஆமாம்... இந்த வேதாந்த விசாரணைக்கும், மகளின் சிகிச்சைக்கும் என்ன தொடர்பு... ஏன் இதைக் கேட்கிறீர்கள்?... என்றார் பெர்க்மன், சற்று வியப்புடன். "இல்லை, சும்மாதான் கேட்டேன்-" என்று மழுப்பும் குரலில் கூறிய புரபஸர் பெஞ்சமின் அவர்கள் "அது சரி, மிஸ்டர் பெர்க்மன்", இந்த 'ஆன்டிக்ஸ்'- பழம் பொருள் வியாபாரம் எத்தனை காலமாகச் செய்துவருகிறீர்கள்?..." என்று பேச்சை மாற்றினார்!

"இது எங்கள் பரம்பரை 'பிஸினஸ்'; என்னுடைய தந்தையார், பாட்டனார் எல்லோருமே ஓரளவு 'பழங்கலைப் பொருள்' வணிகத்தில் ஈடுபட்டு வந்தவர்கள்தாம். ஆனால் இதில் நான் ஒருவனே 'பெரும் பொருள்' சம்பாதித்தவன்! 'ஸ்டாக் ஹோமில்' எங்கள் பூர்வீக வீட்டில் இன்னமும் 'எக்கச்சக்கமான' சரக்குகள் 'ஸ்டாக்' செய்து வைத்திருக்கிறேன்! ஏதாவது 'ஆர்டர்' வரும் போது போய், அங்கிருந்தே உரிய இடங்களுக்கு அனுப்புவதும் உண்டு!...

"ஆமாம், உங்களுக்கு கீன்யாவில், நைரோபியில் ஏதாவது 'பிஸினஸ்' தொடர்பு உண்டோ?" தாத்தா காலத்திலிருந்தே உண்டு; மேற்கு ஆப்பிரிக்க- பழங்குடி- மக்களின் கலைச்சின்னங்கள், மரப்பாச்சி பொம்மைகள், மரவுரி ஓவியங்கள், நார்ப் பெட்டிகள்-இன்னும், யானைத்தந்தம், அபூர்வ விலங்கினக் கொம்புகள் இப்படிப் பல்வேறு பொருள்களில் கொள்முதல்- விற்பனை எல்லாம் உண்டு! ஆனால் இப்போது கொஞ்ச காலமாக அரபுநாடுகளிலும், நேபாளம், இந்தியா, இலங்கை- ஆசியவற்றோடும்- தொடர்பு அதிகம்!...

"அடேயப்பா!... ஒற்றையில் எப்படிச் சமாளிக்கிறீர்கள்?..."

"என்ன செய்வது?... கலைப்பொருள் வியாபாரம் என்பது கத்தரிக்காய் வியாபாரமா?... அதில் கூடத் தரம் பார்த்து வாங்க ஒரு திறமை வேண்டும்! எது உண்மையான 'ஆன்டிக்ஸ்' கலைப்பொருள் என்பது என் கண்ணுக்கு மட்டும் கைவந்த கலை! அதனால் தான் நானே பல நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 'சுருட்டிக்' கொண்டு வரவேண்டிய நிலை... என்றாலும் நாலைந்து ஆண்டுகளாக 'பாய்ச்சல்' தளர்ந்து விட்டது.... வயசு ஆகிறதல்லவா?... இப்போது 'நார்மாவின் கவலையும் சேர்ந்து விட்டது! அவளுக்கும் ஸ்டீஃபானுக்கும் திருமணம் செய்து வைத்து, ஒரு பேரக் குழந்தையைப் பார்த்து விட்டு நிம்மதியாகக் கண்களை மூட வேண்டும் என்று மனது அடித்துக் கொள்கிறது!... இறைவன் என்ன கணக்குப் போட்டிருக்கிறானோ?..." சொல்லிக் கொண்டே வந்த பெர்க்மனின் நெஞ்சிலிருந்து ஆழ்ந்த பெருமூச்சொன்று வெளிவந்தது!...

'மிஸ்டர் பெர்க்மன்! நார்மாவை எப்படியும் குணப்படுத்தி விட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது! அவளுடைய வியாதி முழுக்க முழுக்க மனத்தைப் பற்றியது. அதில் விழுந்துள்ள மர்மச் சிக்கலை ஓரளவு புரிந்து கொண்டு விட்டேன். கடந்த இரண்டு நாட்களாக 'ஹிப்னாடிஸ' உத்தியைக் கொண்டு அவளை 'ஆழ்ந்த அறிதுயில்' உறக்கத்திற்கு உட்படுத்தி உள்ளத்தின் அதளபாதாளத்தில்- கள்ள மூலைகளில் 'பிறவி' மூலக் கூறுகளாக உறங்கும்- உறுத்தும் சங்கதிகளையெல்லாம், வெளியே- அவள் வாய்மொழி மூலமாகவே கொணர்ந்து அறிந்து கொண்டேன்! 'சிக்கல்' என்ன, எங்கே என்று கண்டு பிடித்தால்- அதனை எங்ஙனம் 'பக்குவமாக' 'உயிரிழை' அறுந்து போகாமல் அவிழ்ப்பது என்ற ஒன்றே இப்போது என் குறிக்கோள், கவலை எல்லாம்!" என்றார் புரபஸர் பெஞ்சமின். பெர்க்மன் கண்கள் பனிப்ப, மெய்ம்மறந்த நிலையில் புரபஸர் வாயைப் பார்த்தவண்ணம் அசைவற்று உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் மனத்திரையில்- மற்றொரு 'படம்' ஓடிக்கொண்டிருந்தது....

-6-

பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு...... ஸ்டாக்ஹோமில்- நார்மா பிறந்த சமயம்.... வீட்டில் ஒவ்வொரு கணமும் ஆனந்தம் அலைவீசிக் கொண்டிருந்தது. பொத்துப் பொத்தென்று மக்னோலியா மலர் நிறத்தில், பொற்கூந்தலுடன் வந்து பிறந்த குழந்தையைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துக் கொண்டிருந்தார்கள் பெர்க்மன்- உலமான் தம்பதியர்! வீட்டுக்கு விருந்தினர்களாக வரும் எல்லோரும் குழந்தையின் பேரழகைக் கண்டு வியந்தார்கள்; பாராட்டினார்கள்1....

ஒரு நாள் 'உப்ஸாலா' வட்டாரத்திலிருந்து வந்த தூரத்து உறவினர் ஓர் அம்மாள்- மூதாட்டி, குழந்தை நார்மாவைப் பார்த்துவிட்டு 'அச்சு அசல்' ஆன்ட்டி யூஜீனைப் போலவே இருக்கிறது என்று சொல்லிவிட்டுப் போனாள்! பெர்க்மன் அவர்களுக்கு நெஞ்சில் 'திக்' என்று அடித்துக் கொண்டது! மனத்தில் ஏதோ இனம்தெரியாத உறுத்தல் முன்பு இருந்தது வந்து நிழலாடியது! காரணம், முன்பொரு சமயம், வீட்டின் 'அட்டிக்' பரண் பகுதியில் - ஓர் அறையில் குப்பை கூளங்களைத் தூசி தட்டிக் கொண்டிருந்த பொழுது, பழைய டைரிகள், தந்தையார் கட்டிப் போட்டிருந்தவை கிடைத்தன. இப்போது அந்தக் குறிப்பேடுகளின் பக்கங்கள் வந்து நெஞ்சிலே குத்தின! அவை யூஜீன் ஆன்ட்டியும், அவரது கணவர் எம்மானுவல் அவர்களும் அந்தக் காலத்தில் கீன்யாவில் 'வனவிலங்குச் சரணாலயத்தில்' பணிபுரிந்து கொண்டிருந்த போது எழுதிய டைரிகள்! ஏதோ 'பழங்குப்பை' என்று தள்ளி விடாமல், பத்திரமாக வைத்திருந்து ஓய்வு கிடைக்கும் போது ஒரு வரி விடாமல் படித்துப்பார்த்ததில் 'யூஜீன் - எம்மானுவல்' தம்பதியரின் 'சோகக் கதை' தெரியவந்தது! இரண்டு தலை முறைகளுக்கு முந்திய கதை அது! "யூஜீன், மிருகங்களையே கட்டி அழு!... உன்மேல் நான் கொண்டிருக்கும் காதல் தெய்வீகமானது என்பது உனக்குத் தெரியுமா?... எத்தனை பிறவிகள் எடுத்தாலும் உன்னை- உன் தொடர்பை நான் விடவே மாட்டேன்! - எம்மானுவல்!"

அவள் எழுதிய நாட்குறிப்பேட்டில் ஓர் இதழ்: "பாவம், எம்மானுவல்: வெரி பொஸ்ஸஸிவ்! என்னுடைய லட்சிய வாழ்க்கையை அவர் புரிந்துகொள்ளவே இல்லை! வாயில்லா ஜீவன்களாகிய மிருகங்களுக்குத் தொண்டு செய்வதில் ஏற்படும் ஆத்ம திருப்திக்கு அளவேது?..."-இந்த ரீதியில் டைரியின் பக்கங்கள் ஓடின! யூஜீனுக்கு மிருக சேவை லட்சியம்; எம்மானுவலுக்கு யூஜீன் மேல் அடங்காத காதல்; தாகம்! "அடுத்த பிறவியிலும் என் லட்சியம் தொடரும்!" என்று அவள் முழங்க, "அப்படியானால் நானும் அடுத்த பிறவியில் ஒரு விலங்காகப் பிறந்து உன்னையே வந்தடைவேன்" என்று அவர் அறைகூவல் விடுக்க, காட்டில் ஒரே கலாட்டா! அந்த 'டைரி'களிலிருந்து மேலும் தெரிய வந்த விஷயங்கள்: 'கிக்குயூ' பூர்வகுடி இனத்தைச் சேர்ந்த "விச் டாக்டர்"- "ஆவிகொண்டாடி" ஒருவர் 'அப்பனே! இறக்கும் தறுவாயில் எது ஒருவன் மனத்தின் அடித்தலத்தில் ஓங்கி நிற்கும் எண்ணமோ அபிலாஷையோ அதன்படியே அவனுடைய 'மறுபிறவி' அமையும்!" என்று கூறியதை எம்மானுவல் அப்படியே வேதவாக்காகப் பிடித்துக் கொண்டார்.. நாயகியின் மேலுள்ள பாசத்தால்- மோஹத்தால் "நாயாகப் பிறவி எடுக்க" நாயாகத் துடித்தார்! அல்லும் பகலும் அதே ஸ்மரணை! காலக் கிரமத்தில் இருவருமே- கள்ளத்தனமாக விலங்குகளைச் சூறையாடும் 'போச்சர்' களால் சுட்டுக் கொல்லப் பட்டார்கள்!

-7-

"மிஸ்டர் பெர்க்மன்! என்ன, இருளுக்குள் உட்கார்ந்திருக்கிறீர்கள்?..." என்று அவரைப் பார்க்க வந்த ஸ்டீஃபான் உசுப்பினான்! கதவைத் திறந்து அவனை வரவேற்ற திருமதி பெர்க்மன் "தம்பீ, இப்போதெல்லாம் அங்கிள் வெளிச்சத்தைக் கண்டு விலவிலக்கத் தொடங்கியிருக்கிறார்!" என்று விரக்தியுடன் முணுமுணுத்தவாறே ஸ்விட்சைப் போட்டாள்! ஹாலில் உயிர் வந்தது!...

"ஓ!... ஸ்டீஃபானா, வா வா... ஏதோ கண்களைப் பொத்தினேன், மனம் காடுமேடெல்லாம் சுற்றிவிட்டு இப்போதுதான் இதய 'லாயத்திற்குள்' வந்து ஒடுங்கியது!" என்று கூறியவாறே- மழையில் நனைந்த புரவி ஈரத்தை உதறுவதைப் போல- தம் தலையை ஓர் உலுக்கு உலுக்கினார்.

"ஹெட்டேக்கா?.."

"இல்லை, என் தலைவலி விரைவில் நிரந்தரமாகக் குணம் பெறப் போகிறது!... ஆமாம், நம் அனைவரது தலைவலிக்கும் விடிவு காலம் வரப்போகிறது!..."

"இட்'ஸ் எ குட் நியூஸ்" என்றவாறே அருகில் அமர்ந்தான் ஸ்டீஃபான். "யெஸ்!.. அடுத்த வாரம் நார்மாவுக்கு ஆபரேஷன் நடக்கப் போகிறது. உலகப் புகழ்பெற்ற அமெரிக்க 'ப்ரெய்ன் ஸர்ஜன்' டாக்டர் மில்லர் வரப்போகிறார். புரபஸர் பெஞ்சமின் எல்லா ஏற்பாடுகளையும் கச்சிதமாகச் செய்திருக்கிறார்."

"ஐ'ம் வெரி கிளாட் டு ஹியர் தேட்! எல்லாம் இறைவன் திருவருள்!"

"நார்மா, 'நார்மலுக்கு' வந்து விட்டால் உடனே உனக்கும் அவளுக்கும் திருமணத்தை முடித்து விடலாம் என்று எண்ணுகிறேன்...உன் சம்மதம் எப்படியோ?"

"தங்கள் சித்தப்படியே" என்று பரவசத்தை அடக்கிக் கொண்டு பதிலிறுத்தான் ஸ்டீஃபான்!

உல்மான் அருந்துவதற்கு பழரஸ பானம் கொண்டு வந்தாள்!... 'சீயர்ஸ்!...' என்று ஒரு கிளாஸைக் கையில் எடுத்தார் பெர்க்மன்.

"இனி வீணாக விஸ்கிக் கடலில் மூழ்கி வேதனைப்பட வேண்டிய அவசியம், நிர்பந்தம் இல்லை!..." என்றவாறே ஸ்டீஃபானும் ஆரஞ்சு ஜூஸைக் கையில் எடுத்து- 'சீயர்ஸ்!' சொல்லிவிட்டுப் பருகத் துவங்கினான்!

-8-

"இட்'ஸ் எ மிரகிள்!" என்றார் புரபஸர் பெஞ்சமின்.

"தாங்களுடைய 'ஹிப்னாடிஸ' உத்தியும், 'நவீன அறுவை சிகிச்சைத்துறை வல்லமையும் என் மகளைக் காப்பாற்றி விட்டன! பல்லாயிரம் கோடி நன்றிகள்!" என்று நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சியுடன் கூறினார் பெர்க்மன். அவர் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பொழிய ஆரம்பித்தது!

"திருமணத்திற்கு தேதி குறித்தாகி விட்டதா?"

"ஆமாம்!.. வருகிற வெள்ளிக்கிழமை! ஸ்டாக் ஹோமில் வைத்தே 'வெட்டிங்'; தாங்களும் வந்திருந்து மணமக்களை- மண மக்களை ஆசீர்வதித்து அருள வேண்டும்!" என்றார் பெர்க்மன்!

"வித் கிரேட் ப்ளஷர்!" என்றவாறே பெர்க்மன் அவர்களது இரு கரங்களையும் பற்றிக் குலுக்கினார்- அந்த மாமேதை, மனவியல் சித்தர் புரபஸர் பெஞ்சமின்!

திருமணம் ஸ்டாக்ஹோமில் கோலாகலமாக நடந்தது! தேனிலவுக்கு புதுமணத் தம்பதியர் நார்மாவும் ஸ்டீஃபானும் உலகையே வலம் வரும் வகையில் பெர்க்மன் ஏற்பாடுகளைச் செய்தார்! கரிபியன் கடல் வட்டார 'மோகனத்' தீவுகளிலிருந்து- காஷ்மீர் உல்லாசபுரிவரை சிறகடித்துப் பறந்தன அந்த இளம் சிட்டுக்கள்!...

"தான் மனநோய் வாய்ப்பட்டு அல்லலுற்றதும், கனவில் காமுகனாய்- அந்த நாய் வந்து கப்பி மிரட்டியதும்"- எல்லாமே துப்புரவாக அவள் மனத்திரையிலிருந்து துடைக்கப்பட்டு விட்டன! ஹனிமூனுக்குச் சென்ற இடத்தில்- கடற்கரைகளில் ஏனையோருடன் கூடி, அவர்களுடைய 'செல்ல' நாய்களுடன் எந்த 'நினைவும்' இன்றி நார்மா விளையாடிக் களித்தாள்!... ஸ்டீஃபானும் 'ஏதுமறியாதவனைப்' போல, அவளுடன் இணைந்து விளையாடினான்! என்றாலும் அவ்வத் தருணங்களில் உள்ளமெனும் மாயக் குடுவையிலிருந்து 'பழைய' பூதம் ஏதும் புறப்பட்டு விடக்கூடாதே என்ற அச்சமும் விலவிலப்பும் அவனுக்கு இருக்கத்தான் செய்தன!

நல்லவேளை, ஏதும் இசைவு-கேடுகள் இல்லை!...

தேனிலவைத் தேனாக அனுபவித்துவிட்டுத் தம்பதியர் தாயகம் திரும்பினார்கள்! பெர்க்மனுக்கும் உல்மானுக்கும் பரம ஸந்தோஷம்; நிம்மதி! நாலைந்து மாதங்களில் அந்த அமுதச் செய்தியும் வந்தது! நார்மா தாயாகப் போகிறாள் என்ற நற்செய்தி! பெர்க்மன் தம்பதியர்- அந்தப் பெற்றோர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை!

ஒரு நாள் மாலை!

நற்செய்தி கேட்ட புரபஸர் பெஞ்சமின், பெர்க்மன் இல்லத்திற்கு வந்து தம் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டார்! "செல்ஸி வட்டாரத்தில் 'நார்மாவுக்கும் ஸ்டீஃபானுக்கும்' பெரியதொரு மாளிகையே வாங்கிக் கொடுத்துவிட்டேன்!" "பேஷ்.... நல்ல காரியம்; தனிக்குடித்தன சுதந்திரம் மேலும் அவர்களுடைய இல்லற வாழ்க்கைக்கு மெருகூட்டட்டும்!" என்றார் புரபஸர் பெஞ்சமின்.

மாதங்கள் வளர்ந்தன........ காலம் கனிந்தது!.... நிறைமதி நாளில் நார்மா- சந்திர பிம்பம் போல அழகான ஆண்குழந்தை பெற்றாள்!

-9-

கென்ஸிங்டன் மகப்பேறு மருத்துவமனையின் முன்னால் பெர்க்மன் புதிதாக வாங்கிய 'ஜாகுவார்' கார் வந்து ஜம்மென்று நின்றது. புரபஸர் பெஞ்சமின், பெர்க்மன் தம்பதியர், ஸ்டீஃபான் ஆகிய நால்வரும், மலர்ச் செண்டுகளுடனும் மலர்ந்த முகங்களுடனும் வந்து இறங்கினார்கள்! அவர்கள் வருகைக்காக அங்கே வாசலில் காத்து நின்ற சீருடைச் சிங்காரத் தாதிப் பெண் இருவர் - மலர்ந்த முகங்களுடன் வந்து வரவேற்று நால்வரையும் உள்ளே அழைத்துக் கொண்டு போனார்கள்!

மூன்றாம் மாடி, விசேஷ 325ஆம் அறையைக்காட்டி "பேரனைப் போய்ப் பாருங்கள்! எ பியூட்டிபுல் பாய்! வெரி 'நாட்டி'! பிறந்து இரண்டு நாள் ஆகவில்லை, வெரி தூஸி... ஃபீடிங் பாட்டிலை உதறித் தள்ளிவிட்டு அம்மாவின் 'அமுதப்' பாலுக்காகப் பாய்கிறான்!... க்ளவர் பெலோ!... " என்று கூறிவிட்டு, எதிர் அறைக்குள் தம் வேலைகளைக் கவனிக்கச் சென்றனர் அத்தாதிமார்!... நால்வரும் உள்ளே நுழைந்தனர்!...

"கங்க்ரேச்சுலேஷன்ஸ்!..." மூன்று குரல்கள் முழங்கின!... ஒன்று ஊமை: ஸ்டீஃபான்! இரண்டு நாட்களாகவே, அனுமதிக்கப்பட்ட எல்லா நேரங்களிலும் மனைவியையும் மகனையும் விட்டுப் பிரியாது இருந்து ஆனந்தப் பரவசத்தில் மிதந்து கொண்டிருந்தபடியால் மௌனானந்த சாமியாகிவிட்டான்!...

அந்த நர்ஸ் சொன்னது சரிதான்! பயல் பால் குடித்துக் கொண்டிருந்தான், ஆண்டவன் அருளிய அன்னையின் அமுத கலசத்திலிருந்து!...

நார்மா 'தாய்மை' பூசிய தங்கமெருகில் தகத்தகாயமாகச் சுடர்விட்டாள்! அவள் 'கடமைக்குக்' குறுக்கே நிற்காமல், பெர்க்மனும், பெஞ்சமினும் விரைவில் ஆசியையும் பாராட்டுதலையும் தெரிவித்துவிட்டு வெளியே வந்தார்கள்! மாமியாரும் மருமகப்பிள்ளையும், உள்ளேயே அமர்ந்து விட்டார்கள்! அவளுக்கு தாய் ஸ்தானம்; அவனுக்கோ மகளைத் 'தாயாக்கிய' ஸ்தான பலம்!.. உரிமையை எடுத்துக் கொண்டதில் வியப்பு என்ன இருக்கிறது சொல்லுங்கள்!

எண் 325- அறைக்கு வெளியே....

"என்ன ஒரே சிந்தனையில் ஆழ்ந்து விட்டீர்கள்?" என்று அந்த மனத்தத்துவ மாமேதையிடம் கேட்டார் பெர்க்மன். "ஒன்றுமில்லை! ஆழ்- அறிதுயில் நிலைக்கு நார்மாவை உள்ளாக்கி, அவள் இதய பாதாளத்திலிருந்து வரவழைத்தறிந்து கொண்ட சங்கதிகளையெல்லாம் நான் என் மனத்திலிருந்து எங்ஙனம் முற்றாகத் துடைப்பது, மறப்பது என்பதைப் பற்றிச் சிந்தனை ஓடுகிறது!..."

பெர்க்மன் அவர்களுக்கு ஆன்ட்டி யூஜீனின் டைரிகள் மனக்கண்முன் சிறகடித்துப் பறப்பது போல் தோன்றியது! "பெஞ்சமினுக்கு எப்படி அது தெரிய முடியும்!... ஒருக்கால்... சித்தத்தை அறியும் சித்து வேலையின் விளைவோ?... மனத்துள் மறுகியவாறே அவரும் மௌனமானார்! புரபஸர் தொடர்ந்தார்:"சைல்ட் இஸ் த ஃபாதர் ஆப் மேன்!"

புரிந்து கொண்டாரோ, புரியவில்லையோ, "வெரி ட்ரு!... மெத்தவும் உண்மை" என்று கூறினார் பெர்க்மன்! அப்போது உல்மானும் ஸ்டீஃபானும் நார்மாவிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வரவே, நால்வரும் இல்லம் ஏகக் கீழே இறங்கினார்கள்... "லிப்டில்"- பெர்க்மனின் காதோடு காதாக, புரபஸர் கிசுகிசுத்தார்:

"புருஷன்...மிருகம்...புதல்வன்!...
பிறவிச் சக்கரம் சுழல்கிறது!...."

முற்றும்.

THAMPA

SOLICITORS
16 Welbeck Road, West Harrow
Middx HA2 0RW Tel 081-422 8248

* CONVEYANCING * LITIGATION
* IMMIGRATION MATTERS * LAND LORD & TENANT
* LIQUOR LICENSING * PERSONAL INJURY
* WILLS & PROBATE * MATRIMONIAL MATTERS

LEGAL AID WORK UNDERTAKEN



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யார் இந்த யாழ்ப்பாணத்தான்? - 2

## 'ஆனையிறவுக்கங்காலை எல்லாரும் ஒண்டுதான்'

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் தமிழர்களும் ஒரு சில முஸ்லீம்களும் வாழ்கின்றனர். இவர்களுள் முஸ்லீம்கள் உண்மையான "யாழ்ப்பாணத் தமிழராக" யாழ்ப்பாணத்தாரால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. எனவே நாம் தமிழர்களைத்தான் எடுத்துக் கொள்ளல் வேண்டும். இந்த நிலையிலாவது ஒருமை உணர்வும் கூட்டுணர்வும் நிலவுகின்றதா என்பதைப் பார்த்தல் வேண்டும். இக்கட்டத்தில் யாழ்ப்பாணத்தின் அக முரண்பாடுகள் தென்படத் தொடங்கு கின்றன. அதாவது சமயமும் சாதியும் இவ்விடத்திற்கான முக்கிய பிரிவினைச் சக்திகளாக முகிழ்த்து நிற்கின்றன..

யாழ்ப்பாணப்பேச்சு வழக்கில் கிறிஸ்தவர்கள் "வேதக் காரர்" என்றும், சைவர்களைத் "தமிழர்கள்" என்றும் குறிப்பிடும் மரபொன்றுண்டு. யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு பாகத்திலும் கிறித்தவர்கள் உள்ளனரெனினும், கிறித்தவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணக் கலாச்சார வாழ்வினின்றும் ஒதுக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். யாழ்ப்பாணத்துப் பெரும்பான்மை மக்கள் சைவ மதத்தவராதலால், மதம் மாற்றப்பட்டவர்களான கிறித்தவர்கள் சைவர்களின்றும் ஒதுங்கி வாழுமாறு கிறித்தவ போதகர்களால் ஊக்கப் படுத்தப்பட்டு வந்தமை வரலாற்று உண்மையாகும். கிறித்தவர்களையும், றோமன் கத்தோலிக்க வேதத்தினர் எனவும், புரோட்டஸ்தாந்து வேதத்தினர் எனவும் வகுக்கலாம். இவர்களுள் பண்பாட்டொதுக்கம் கத்தோலிக்க வேதத்தினரிடையிலேயே பெரும்பாலும் காணப்படுகிறது. உயர் சாதியினருள்ளும் கத்தோலிக்கர் பலருள்ளரெனினும் உயர் சாதியினரல்லாதவர்களும் தாழ்த் தப்பட்ட சாதியினருமே பெரும் பான்மையினர்.



மேற்குறிப்பிட்ட பண்பாட்டொதுக்கத்துக்கு இதுவும் ஒரு காரணமாகும். ஆயினும் அவர்களது மத உணர்வே இவ்வொதுக்க நிலைக்கு காரணமாகும். யாழ்ப்பாணத்தில் மிக அண்மைக் காலம் வரை இம்மத ஒதுக்கீட்டுணர்வு அடிதடி சண்டை நிலையை எய்தி நின்றதென்பதும் வரலாற்றுண்மை. புரொட்டஸ்தாந்தப் பிரிவுகளுள் வருபவர்கள் பெரும்பான்மையும் உயர் சாதியினராகக் காணப்படுவது கண்கூடு. ஒல்லாந்த, ஆங்கில ஆட்சிக் காலங்களில் மதம் மாற்றப்பட்டவர்களாதலால் இவர்கள் பெரும்பாலும் உத்தியோகத்தினராகவே உள்ளனர். கமவாழ்க் கையை தனிப் பொருளாதார முயற்சியாக மேற்கொண்டுள்ள புரொட்டஸ் தாந்தினர் மிக மிகச் சிலரே. உண்மையில் அத்தகையோர் இல்லையென்றே கூறலாம்.

இவர்களே யாழ்ப்பாண வாழ்க்கையில் "மேனாட்டு நெறி மாற்ற முகவர்" களாக (Agents of Westernisation) விளங்கி வந்துள்ளனரென்று கூறலாம். இதன் காரணமாக இவர்கள் தேசிய வாழ்வுடன் இணையாதவர்களென்ற குற்றச்சாட்டு ஓரளவு நிலவி வருகின்றது. புரொட்டஸ் தாந்துக் கிறித்தவர்களும், றோமன் கத்தோலிக்கர்களும் தமது மதங்காரணமாக (இம் மதத்தினர் உத்தியோக இடங்களிலும் காணப்பட்டதால்) யாழ்ப்பாணத்துக்கு வெளியே, சிறப்பாகக் கொழும்பில் பிற மக்களுடன், அதாவது தம் மதங்களைச் சார்ந்த பிற இனத்தினருடன் இணைந்து வாழக்கூடியதாக இருந்தது. இதன் காரணமாக யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவர்கள் தாம் யாழ்ப்பாணத்துச் சைவ மக்களிலும் பார்க்க விரிந்த மனப்பான்மை உடையவர் கள் என்று

> கிறிஸ்தவர்கள் தாம் யாழ்ப்பாணத்துச் சைவ மக்களிலும் பார்க்க விரிந்த மனப்பான்மை உடையவர்கள் என்று கருதிக் கொள்வதுண்டு

கருதிக் கொள்வதுண்டு. உத்தியோகங்காரணமாக யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட்ட யாழ்ப்பாணத்தின் தொடர்பற்றுப் போனவர்களின் தொகையை எடுத்தாராய்ந்தால் அத்தகையோருள் கிறித்தவர்களே அதிகமானோர் என்பது தெரிய வரும். இத்தகைய பண்பியற் காரணங்களால் யாழ்ப்பாணத்தாருள்ளும் கிறித்தவர்கள் ஒதுங்கியும் ஒதுக்கப்பட்டுமே நிற்கின்றனர்.

மீதியாக உள்ளவர்கள் சைவ மக்களே. சைவமக்கள் என்ற நிலையில் வைத்துப் பார்க்கும் பொழுது சாதி பேதம் முக்கிய இடம் வகிப்பதைப் பார்க்கிறோம்....... சைமன்காசிச் செட்டி என்பவர் 1834ல் வெளியிட்ட The castes, customs,Panners and Literature of the Tamils (தமிழரின் சாதி, சம்பிரதாயங்கள், இலக்கியம்) எனும் நூலில் ஏறத்தாழ 65க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ்ச் சாதிப் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் பல சாதிகள் இன்றைய கணக்கீட்டில் இடம்பெற முடியாதவை என்பது உண்மையே. சமூக அதிகார நிலையினைப் பொறுத்த மட்டில் யாழ்ப்பாணத்துச் சாதிக்குழுக்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்:

(அ) உயர் சாதியினர்
(ஆ)உயர் சாதியல்லாதார்
(இ)குடிமக்கள்

உயர் சாதியினருள் இன்று முக்கிய இடம்பெறுவோர் வெள்ளாளரே. ஒல்லாந்தர் காலத்தில் வெள்ளாளர் உயர் சாதியினராகக் கருதப்பட்டு வந்தனர். மிக உயர் சாதியினரெனினும் யாழ்ப்பாணத்து வாழ்க்கையில் அதிகார மேன்மை உடையவர்கள் வெள்ளாளரே. X,X,X,X,X,X,X முதலியோர் (இப்படியல் பூரணமான தன்று) உயர் சாதியல்லாதோர் எனக் கருதப் படுகின்றனர். பொதுப் படை யாகக் கூறினால், விவசாய வாழ்க்கையை மேற்கொள்ளாதவர்கள் இப்பிரிவினுட் கொண்டு வரப்பட்டனர் என்று கூறலாம்.

மீனவர் குடியினர் வெள்ளாளர்களால் தமக்குச் சமமானவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லையெனினும், இவர்கள் சம அந்தஸ்து உடையவர்களாகவே வாழ்ந்து வந்துள்ளனர் என்பது தெரிய வருகிறது. மூன்றாவதாக உள்ள குடிமக்கள் குழுவினர் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பின் சிறப்பம்சமாவர். X,X,X,X என்போர் குடிமக்களென ஒல்லாந்தரால் கணக்கிடப்பட்டனர். இவர்கள் வெள்ளாளரின் வாழ்க்கையிலும் அவர்களின் அடிநிலை மக்களாக நடாத்தப்பட்டு வந்தனர். குடி மக்கள் என்போர் வெள்ளாள மக்களுக்கு குடும்ப ஊழியம் செய்து வந்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்துச் சாதியமைப் பின் பொதுப்படையான அதிகாரவன்முறை இதுவே. எனினும் இடத்துக்கிடம் காலத்துக்குக் காலம் உயர்வு தாழ்வு நோக்க மாற்றமுற்றே வந்தது. இது உயர் சாதியினரல்லாதோர் எனப்பட்டவர்கள் சம்பந்தமாகவே பெரும்பாலும் தொழிற்பட்டு வந்தது. எந்த நிலையிலும் அதிகார மேன்மையும் உயர்வும் வெள்ளாளரிடத்தே இருந்து வந்தது. பிராமணர்கள் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பில் அதிகார மேன்மையுடையவர்களாக இருக்கவில்லை. தமிழ் நாட்டின் சமூக அமைப்புக்கும் யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்புக்கும் உள்ள முக்கிய வேறுபாடு இதுவாகும். தமிழ் நாட்டைப் போன்று, யாழ்ப்பாணத்திற் பிராமணர் நிலச் சொந்தக்காரர்களாக விளங்கவில்லை. யாழ்ப் பாணத்துப் பிராமணர் பெரும் பாலும் புரோகித வாழ்க்கையை மேற்கொண்டிருந்தமையே இதற்குக் காரணமாகும்.

சாதியமைப்பின் முக்கிய அமிசங்கள் சாதிக்குள்ளேயே திருமணஞ் செய்து கொள்ளல். குறைந்தோர் எனக் கருதப்படு வோருடன் சம ஆசனம், சமபோசனம் வைத்துக் கொள்ளாமை, அடிநிலைச் சாதியினர் எனக் கருதப்படுவோரைக் கோயில் முதலிய இடங்களுக்குள் புகவிடாமை என்பனவாகும். இவற்றுள் திருமணந் தவிர்ந்த மற்றயவை உண்மையில் அந்தஸ்துச் சின்னங்களாகவே தொழிற்பட்டன. யாழ்ப்பாணத் துப் பொருளாதார சமூக வாழ்க்கையில் வெள்ளாள மேலாண்மை யாழ்ப்பாண வரலாற்றின் ஆரம்ப காலந் தொட்டே காணப்படும் ஒரு பண்பாகும். யாழ்ப்பாணத்தில் எவ்வாறு குடியேற்றம் நடந்தது என்பதைக் கட்டுக்கதை உருவில் தெரிவிக்கும் இலக்கியச் சான்றுகளை (யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்கள்) ஆராயும் பொழுது, யாழ்ப்பாணத்தில் முதன் முதலிற் குடியேறியவர் களுள் அதிகார நிலையிலிருந் தோர் விவசாய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தவர்களே என்பது தெரிய வரும். அந்நியராட்சிக் காலத்திலும் இவர்கள் அந்நியனைப்பேணி வந்தனர் என்பதும் அவ்வதிகார நிலையை விட்டுக்கொடுக்காது காலத்திற் கேற்றவாறு தமது கட்டுப்பாட்டதிகாரத்தைத் தம் கைகளினுள்ளேயே வைத்திருந்தனர் என்பதும் தெரிய வரும். போத்துக்கேயர் காலத்து ஒரு சிறிது மாறிற்றெனினும் இது பொதுப் படையான ஓர் உண்மையாகும்.

இவ்வரலாற்றுப் பண்பு காரணமாக, யாழ்ப்பாணத்து வரலாற்றைப் பின்னோக்காகப் பார்க்கும் சிலர் வெள்ளாளர் மேலாண்மைக் கோட்பாட்டினை (The Theory of Vella Domination) எடுத்துரைப்பர். போத்துக்கேய ஒல்லாந்த ஆட்சி யாவணங்களை ஆராயும் பொழுது இவ்வுண்மை நன்கு புலனாகின்றது. ஒல்லாந்தர் கால யாழ்ப்பாண ஆட்சி முறையை நன்கு எடுத்துக் காட்டுவதாக அமையும் சுவார் டெக் குறூன் நினைவேட்டில் (Memoir Left by Hendrick Zwaardecroon 1967 Colombo, 1911) இப்பிரச்சினை பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில், வெள்ளாளர் மற்றைய சாதியினரை அடக்கி வந்தனர் என்றும், தாழ்ந்த சாதியினர் தமக்கெதிராக முறைப்பாடுகள், சமர்ப்பிக்க முடியாத வண்ணம் அடக்கி வைத்திருந்தனர்



என்றும் அந்நிலையைத் தான் மாற்றியமைக்க முனைந்ததாகவும் கூறியுள்ளார். பன்னெடுங் காலமாக இருந்துவரும் வெள்ளாள மேன்மைக்கு இவர்கள் இடங்கொடுத்து வந்தனர் என்பது 1661 இல் எழுதப்பட்ட ஓர் அறிவுறுத்தக் குறிப்பிலிருந்து பெறப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் முக்கிய தமிழ்ப் பிரதானிகள் புரட்டேஸ்தாந்து மதத்தைத் தழுவி

பேராசிரியர் கா.சிவத்தம்பி

யிருந்தனர் என்பது அவர்களது பெயர்களால் தெரியப்படுகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத் திலும் இம்முறைமை தொடர்ந்து நிலவி வந்தது. ஒல்லாந்தர் காலத்தைப்

> சைமன்காசிச் செட்டி என்பவர் 1834ல் வெளியிட்ட நூலில் ஏறத்தாழ 65க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ்ச் சாதிப் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்.

போலவே, ஆங்கில ஆட்சியின் முற்கூற்றிலும், பெரும் பதவிகள் சாதியதிகார அடிப் படையிலேயே வழங்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சியமைப்பை மாற்றி ஆங்கிலக் கல்வியைப் பதவி நுழைவுச் சீட்டாக்கிய பொழுதும் இந்நன்மையை இவர்களே பெற்றனர். கிறித்துவக் கல்லூரிகள் ஆங்கிலம் கற்பிப்பதால் தேசிய வாழ்வின் பண்பாட் டடிப்படை தகர்க்கப் படுகின்றதென்பதை உணர்ந்து செயற்பட்ட ஆறுமுக நாவலர் சாதிவாதியாக இருந்தாரென்பதை அவரது பல்வேறு கட்டுரைகள் நன்கு புலப்படுத்து கின்றன. நாவலரின் சாதிவாதத்தினால் உயர் சாதியல்லாத சைவத் தமிழறிஞர் ஒருவர் நாவலரைக் கண்டிக்க நேர்ந்தமை இன்றைய இலக்கிய வரலாற்றேடுகளிற் காணப்படாத உண்மையாகும். தேசிய வாதம் கூட யாழ்பாணத்தில் சாதியடிப் படையைப் பேணுவதற்கான ஓர் அம்சமாக மாற்றப்பட்டது. யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட சாதியினர் பலர் கிறித்தவத்தைத் தழுவியமைக்குக் காரணம் உயர்சாதி சைவர்கள் அவர்களை அடக்கி வைத்திருந்தமையே என்பது கிறித்தவ ஏடுகளிலிருந்து புலனாகின்றது. சைவ ஆங்கிலப் பாடசாலைகளிலே தாழ்த்தப்பட்ட சாதிப் பிள்ளைகளுக்குப் பலகாலமாக இடம் வழங்கப்படாதிருந்தது. ஆரம்பப் பாடசாலைகள் கூட சாதியடிப்படையில் இயங்கி வந்ததென்பது பலரறிந்த உண்மை.

இவ்வாறு கல்வி வசதியினால் உத்தியோக வாய்ப்புக்கள் பெற்று யாழ்ப்பாணத்திலிருந்து, யாழ்ப்பாணத்தவர்கள் என்ற பூரண உணர்வுடன், வெளிப்பிர தேசங்கட்குச் சென்றவர்கள் பெரும்பாலும் உயர்சாதி மக்களே. கிறித்தவர்களும் அவ்வாறு வெளியே சென்றனரெனினும் அவர்கள் முன்னர் குறிப்பிட்டவாறு, ஒதுக்குநிலை வாழ்க்கையை மேற்கொண்டவர் களல்லர். ஏறத்தாழ 1945 வரையில் பெரும்பான்மையும் இந்நிலமை காணப்பட்டது. வெள்ளாளர் அல்லாதாரும் சிறு தொகையினர் சென்றதுண்மையே. ஆனால் அவர்கள் பிற இடங்களிற்றாமும் யாழ்ப்பாணத்து தாழ்த்தப்பட்ட சாதியினரல்லர் என்று நிறுவ வேண்டிய சமூகத்தேவை இருந்த தன் காரணமாக அவர்களும் பெரும்பான்மையினரின் வாழ்க் கை நெறியையே மேற்கொள்ள வேண்டியிருந்ததெனலாம்.ஆனால் இவ்வெள்ளாள மேலாண்மையானது உண்மையில், யாழ்ப்பாணத்துப் பொருளாதார அமைப்பின் சமூக வெளிப்பாடே. எனவே இதனை வெறும் சாதிப் பிரச்சனையாகக் கொண்டு எரிந்த கட்சி எரியாத கட்சி பாடுவதால் பிரச்சனையின் அடியுண்மையை அறியாது போய் விடும் ஆபத்து

(16ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பழைய நினைவுகள்

சோ.சிவபாதசுந்தரம்

## "தேமதுரத் தமிழோசை..."

**1947ம்** ஆண்டு நடுப்பகுதியில் ஒரு நாள் கொழும்பு கொட்டா ரோட்டிலிருந்த ரேடியோ சிலோன் காரியாலயத்தில், அப்போது யுத்த நடவடிக்கைகள்பற்றி ஒலிபரப்ப ஏற்பட்டிருந்த "சிபாக்" (தென்கிழக்காசிய ஒலிபரப்பு) நிலையத்தைச் சேர்ந்த இரண்டு ஆங்கிலேயர் ரகஸ்யமாக ரேடியோ சிலோன் அதிகாரியுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். போகும்போது அதில் ஒருவர் என்னிடம் வந்து சாதாரணமாக தமிழ் ஒலிபரப்பு சம்பந்தமாக விசாரித்துச் சென்றது எனக்கு அதியமாக இருந்தது. அவர்கள் ஏன் எனது சிங்கள சகாவிடம் ஒன்றும் கேட்கவில்லை? அடுத்த வாரம் மர்மம் விடுபட்டது. டைம்ஸ் ஓவ்சிலோன் பத்திரிகையில் பெரிய தலைப்பில், "இலங்கை ரேடியோ தமிழ் அறிவிப்பாளர் பி.பி.ஸிக்கு போகிறார்" என்ற செயதி பிரசுரிக்கப்பட்டது.

சில நாட்களாகவே பி.பி.ஸிக்கும் இலங்கை (வானொலிக்கும்) அரசாங்கத்துக்குமிடையில் கருத்துப்பரிமாற்றம் நடந்திருக்கிறது. இரண்டாவது உலகமகா யுத்தம் தென்கிழக்ககாசியப் பிரதேசத்தில் தொடர்ந்ததும், இந்தப் பகுதிக்கு மவுண்ட் பாட்டன் பிரபு தலைமைஸ்தானாதிபதியாக நியமிக்கப்பட்டதும் இலங்கையை மையமாக வைத்து யுத்தச் செய்திகளை வழங்க ஏற்பாடாகியது. பிரத்தியேகமாக "இலங்கை கடிதம்" ஒன்று தயாரிக்கப்பட்டு, தமிழிலும் சிங்களத்திலும் 1941 முதல் லண்டனிலிருந்து ஒலிபரப்பாகி, கொழும்பு ப்ளவர் ரோட்டிலிருந்த சியாக் என்ற ராணுவ ஒலிபரப்பு நிலையத்தின் மூலமாக ரிலே செய்யப்பட்டு வந்தது. இந்த ஒலிபரப்பு நிகழ்ச்சியை விஸ்தரிக்கவேண்டியே பி.பி.ஸி. ஒரு தமிழ் ஒலிபரப்பாளரைத் தேடி இலங்கைக்கு வந்தார்கள்.

முப்பதுக்களில் தந்தித்துறையின்கீழ் நிர்வகிக்கப்பட்ட இலங்கை ரேடியோ நாற்பதுக்களில் தபால் பிரிவின் ஆட்சியில் இருந்து வந்தது. குணவர்த்தனா என்ற போஸ்டல் டிபார்ட்மென்ட் உத்தியோகத்தர் ஒருவர்தான் அப்போது ஒலிபரப்புத் துறைக்கும் தலைவர். அவரின் கீழ் இரண்டு கிளார்க்கும், அறிவிப்பாளர்களாக ஆங்கிலத்துக்கு ஒரு பெண்ணும், சிங்களத்துக்கு ஒருவரும், தமிழுக்கு நானும் இருந்தோம். பி.பி.ஸிக்கு "தமிழ் அறிவிப்பாளர் போகப் போகிறார்" என்ற செய்தி வெளியிடப்பட்டதும் ஆபிஸ் தலைவராயிருந்த சிங்களவருக்கு என்னவோ மாதிரியிருந்தது. எப்படியோ விஷயம் ஊர்ஜிதமாகிவிட்டதால் எவரும் இடையில் தலையிடச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

லண்டனுக்குப் பிரயாணமாக மூன்று மாத அவகாசமிருந்தது. ஆபிசில் இரண்டு வார அவகாசம் வாங்கிக்கொண்டு திருச்சிக்கும் சென்னைக்கும் போனேன். திருச்சி ரேடியோ நண்பர்களெல்லாரும் சேர்ந்து திருச்சி அசோக பவனில் ஒரு விருந்து வைத்தார்கள். பின்பு சென்னைக்கு போனபோது வுட்லண்ட் ஹோட்டலில் சென்னை வானொலி நண்பர்களெல்லாரும் சேர்ந்து விருந்து வைத்தார்கள். இதில் விசேஷம் என்னவென்றால் தமிழ் ஒலிபரப்புக்கு தமிழ்நாட்டினர் அல்லாமல் இலங்கையர் ஒருவர் லண்டனுக்குப் போவதை அந்தச் சமயத்தில் திருச்சியிலும் சென்னையிலும் ஒருவராவது உள்ளுக்குள் பொறாமைப்பட்டதை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. அதற்கு மாறாக, திருச்சி நிலையத்தின் டைரக்டராக இருந்த ஜி.டி.சாஸ்திரி வெளிப்படையாகவே, "இலங்கைத் தமிழ் சுத்தமாயிருக்கும் என்பதை நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்" என்று சொன்னார்.

1947 செப்டெம்பர் முதல் தேதி கொழும்பில் கப்பலேறினேன். மெதுவாகவே ஊர்ந்து 27 நாள் கழித்து லிவப்பூல் துறைமுகத்தில் இறங்கி ரயிலில் ஏறி லண்டனில் யூஸ்டன் ஸ்டேஷனில் வந்தடைந்தேன். முன்னேற்பாட்டின்படி பி.பி.ஸியைச் சேர்ந்த ஒரு பெண்மணி வந்து சந்தித்து, தற்காலிகமாக போர்ட்லண்ட் பிளேசிலிலுள்ள பி.பி.ஸி, கட்டிடத்தின் மாடி ரூம் ஒன்றில் தங்க வசதிசெய்து தந்தார்கள். பின்னர் நான் வேறு ஜாகை ஏற்பாடு செய்து கொண்டேன். ஏற்கனவே ஐந்தாண்டுகள் இடைவிடாது மைக்கின் முன் பழகியதை பி.பி.ஸிக்காரர் தெரிந்திருந்தும் தங்கள் பந்தாவை அனுட்டிக்கவேண்டும் என்பதால் முதல் காரியமாக அவர்கள் என்னை "ஸ்டாவ் டிரெயினிங் ஸ்கூலுக்கு" பயிற்சி பெறஅனுப்பிவைத்தார்கள். சரியாக ஆறுவார காலம், தினம் பன்னிரண்டு மணி நேரம், பல பிரிவுகளில் பயிற்சி முடிந்து அதன் பின்னர் தொழிலை ஆரம்பித்தேன்.

நான் லண்டனுக்குப் புறப்பட முன்னர் கொழும்பிலோ ஒரு பெரியவரைச் சந்தித்தேன். தம்பு என்பது அவர் பெயர். யாழ்ப்பாணத் தமிழர். லண்டனில் படித்து ஐ.சி.எஸ். பரீட்சையில் தேறி, தென்னிந்தியாவில் பல இடங்களில் கலெக்டராகக் கடமை பார்த்தவர். அப்போது தனது சொந்த சகோதரியின் பெண்ணை மணம் முடித்ததால், இலங்கையில் அது சட்ட விரோதமாகையால், இந்தியாவிலிருந்து உத்தியோகத்தில் இளைப்பாறியதும் கேம்பிரிட்ஷில் நிரந்தரமாக வசித்தார். அப்போதுதான், பி.பி.ஸியில் "இலங்கைக் கடிதம்" வாசிக்கும் பணியும் சிலகாலம் அவருக்குக் கிடைத்தது. அதைப்பற்றி என்னிடம் பேசும்போது, "ஏதோ எனக்குத் தெரிந்த அரைகுறைத் தமிழில் நான் பேசினேன். உங்கள் மூலமாக பி.பி.ஸிக்கு பேர் வரப்போவது நிச்சயம்" என்று வாழ்த்தினார்.


1947 நவம்பரிலிருந்து அடுத்த ஏப்ரல் வரை பழைய முறைப்படி "இலங்கைக் கடிதம்" படித்தேன். நிறுவனத்தார் கொடுத்த செய்தி அறிக்கையுடன், லண்டன் பத்திரிகைகளிலிருந்து சில செய்திகளையும் திரட்டி அரைமணி நேர ஒலிபரப்பாக, வாரத்தில் மூன்று நாட்கள் ஒலிபரப்பி வந்தேன். நான் என்ன பேசுகின்றேன் என்று மேற்பார்வை பார்க்க ப்ரெயின் என்ற பெயருள்ள ஒரு ஆங்கிலேயரை அமர்த்தி வைத்தார்கள். இவர் இலங்கை சிவில் சேர்வில் உத்தியோகத்திலிருந்து இளைப்பாறிய பெரியவர். தமிழ் தெரிந்தவர். ஆனால், இரண்டொரு மாதம் என்னுடன் பழகியதும் "ஐயா, உங்கள் தமிழை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்று விலகிக்கொண்டார். பின்னர் மிக நெருக்கமான நண்பரானார்.

நாலைந்துமாதம் "கடித" வடிவில் நடந்த தமிழ் ஒலிபரப்பை "சஞ்சிகை" வடிவில் ஆக்கவேண்டுமென்று முன்பே தீர்மானிக்கப்பட்ட திட்டத்தை நிறைவேற்றச் சொன்னார்கள். இதற்கிடையில் கொழும்பிலிருந்து என் மனைவியும் வந்து சேர்ந்தார். என்னைவிட அப்போது அதிகமாக ஒலிபரப்புக் கலையில் அவரும் அனுபவப்பட்டிருந்ததால் இருவரும் சேர்ந்து சஞ்சிகை ஒலிபரப்புக்குத் திட்டம் அமைத்தோம். ஒரு நல்ல நாளில், இந்திய ஹை கமிஷன் ஆபீசிலிருந்து ஜி.பார்த்தசாரதியும், இலங்கை ஹைகமிஷன் ஆபீசிலிருந்து குமாரசுவாமியும் மற்றும் தமிழர் சமுதாயத்திலிருந்து சில நண்பர்களும் கூடியிருக்க, வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்க, பாரதியின் முழக்கத்திலெழுந்த "தேமதுரத் தமிழோசை யுலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" என்ற வேண்டுதலை மெய்ப்பிக்கும் வகையில் "தமிழோசை" என்ற நாமம் சூட்டி, வாராவாரம் முழங்க வகை செய்தோம். இலங்கைக்கு மாத்திரம் "செய்திக் கடிதமாயிருந்த ஒலிபரப்பு, தமிழ்ச் சஞ்சிகையாக, தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் ஒலிக்கும்படி வகை செய்தோம். எனது ஒப்பந்தம் முடிந்ததும் அகில இந்திய வானொலியிலிருந்தே ஒலிபரப்பாளரை நியமிக்கும் பழக்கம் ஏற்பட்டது. ரங்காச்சாரி, விஸ்வநாதன், சுந்தா முதலியவர்களைத் தொடர்ந்து வந்து ஒரு புதிய ஒலிபரப்பு மதத்தை உருவாக்கி வெற்றி கண்ட தமிழ் நாட்டவர் சங்கரண்ணா என்ற சங்கரமூர்த்தி. சென்னையில் இருந்து புறப்பட முன்னர் சங்கர் என்னிடம் வந்து ஆசி பெற்று வந்ததை மறக்க முடியாது.

# ஆத்மீகமும் யாழ்ப்பாண மக்களும்

இன்று நம்மக்கள் படும் துன்பங்கள் அளப்பிலா தன்மை உடையன. ஏன் இவ்வாறு நடக்கிறது என்பது பலரது கேள்வி. யாழ்ப்பாணத்தில் பல ஆலயங்கள் உண்டு, ஆராதனைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. தவசிரேஷ்டர்கள் பலர் வாழ்ந்த இடம். பண்டிதர்களும் உயர் கல்விமான்களும் இங்கு பலகாலமாக வாழ்ந்து வருகின்றனர். இங்கு தமிழர்களுடைய பண்பாடு இன்றும் பேணப்பட்டு வரப்படுகின்றது. பலஆண்டுகளாக, குறிப்பாக யாழ்ப்பாண வாசிக சாலை எரிக்கப்பட்ட காலத்திலிருந்து மக்கள் படும் இன்னல்கள் கணக்கில் அடங்கா. உலகத் தமிழ்மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தபொழுது பலர் உயிர் இழக்க நேரிட்டது.

இவற்றை சற்று ஆழமாக சிந்திக்கும்பொழுது அடியேனது மனத்தில் ஒரு சிந்தனை, நாம் ஆத்மீக வாழ்வுக்கு சீரான இடத்தை இன்னும் அளிக்கவில்லை. எனது வாழ்வில் இன்று மிளிரும் உயர் சிந்தனைகள், மனநேயப்பண்பு, இரக்கம் இவையாவுக்கும் இருப்பிடமாக உள்ளவர் தவத்திரு யோகசுவாமிகள்தான். கிறிஸ்தவ கல்லூரியில் படிக்கும் காலத்தில் தெய்வீக சிந்தனை சிறிது இருந்தாலும் 1955ம் ஆண்டு யோகசுவாமிகளை தரிசிக்க முதன் முதலில் சென்றேன்.சுவாமிகளுடைய ஆசீர்வாதத்தால் 1956ஆண்டு பரமேஸ்வரக்கல்லூரியில் படிக்க இடம் கிடைத்தது. முதன்முதல் இக்கல்லூரியில்தான் சிவராத்திரிவிரதம் முறையாக அநுஷ்டிக்க முடிந்தது. இங்கு எனக்குத் தரப்பட்ட சைவ சமய ஒழுக்கங்கள் எனது வாழ்வில்



ஒரு அத்திவாரமாக அமைந்தது.

மேலும் விடுதியில் தங்கிப்படித்த காரணத்தால் இக்கல்லூரியில் அமைந்த சிவாலயத்தில் சென்று பல பணிகள் புரிய நேரிட்டது. நவராத்திரி இக்கல்லூரியில் மிகவும் விசேடமாக அநுஷ்டிக்கப்பட்டது. நவராத்திரி காலங்களில் கல்லூரி படிப்பு காலை 11 மணியளவில்



முடிந்து, யாவரும் ஆலயத்தில் பூஜையில் கலந்து கொள்வர். மீண்டும் மாலையில் 6.30 மணியிலிருந்து இரவு 10 மணிவரை தினமும் இசைக்கச்சேரி நடைபெறும். கல்லூரி தினமும் ஆரம்பிக்க முன்பு சகல மாணவர்களும் ஆலயத்தில் பிரசன்னமாக வேண்டும். ஆலயத்தில் பூஜை முடிந்த பின்பு தான் படிப்பு ஆரம்பமாகும். மதிப்புக்குரிய சேர்.பொன்னம்பலம் இராமநாதனின் அபிலாஷை என்றும் வீண் போகாது. இன்று இக்கல்லூரி யாழ் பல்கலைக்கழகமாக மாறியதில் வியப்பதற்கு ஒன்றும் இல்லை. இக்கல்லூரியில் அச்சமயம் இருந்த அதிபர் திரு.சிவபாதசுந்தரம் பின்பு தவத்திரு யோகசுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டார்.

யாழ்ப்பாண மக்கள் ஆத்மீகத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். அமெரிக்காவில் நடைபெற்ற சர்வமத அரங்கில் மக்களை தனது பேச்சால் ஈர்த்த சுவாமி விவேகானந்தர் 1897ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து இந்துக்கல்லூரியில் பேசிய சொற்பொழிவை யாவரும் மறக்கக் கூடாது. எனது முதல் குருவான தவத்திரு யோகசுவாமிகள் சுவாமி விவேகானந்தர் ஏறிவந்த வண்டியைத் தாம் இழுத்ததாகவும், பின்பு இந்த இந்துசமயத்துறவியின் பேச்சை கேட்டதாகவும் எனக்கு ஒருமுறை தரிசனம் செய்யச் சென்ற சமயம் குறிப்பிட்டார். தவத்திரு யோக சுவாமிகளின் ஆத்மீகவாழ்வு மிகவும் பெருமைக்குரியது. இவரது தரிசனத்தால், பலமுறை சென்ற காரணத்தால் தான் யாழ்பபாண மக்களின் துன்பங்களில் கலந்து பணிபுரிய வழி கிடைத்தது. சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாண இந்துக்கல்லூரியில் பேசிய சொற்பொழிவு "வேதாந்தம்" என்னும் தலைப்பில் அமைந்தது. சுவாமி விவேகானந்தர் உலகில் சிறப்பான தானமும் முதன்மையானதும் ஆத்மீக தானமே என்று அங்கு குறிப்பிட்டுள்ளார். தவத்திரு யோக சுவாமிகளுக்கு, சுவாமி விவேகானந்தரின் தரிசனமும், சொற்பொழிவைக் கேட்டதும், இவரது குரு, செல்லப்ப சுவாமிகளின் திருவடி தீட்சையும் பெற்றதன் பயன், உயர்ந்த அநுபூதி நிலையை அடைய வழிவகுத்தது.

தவத்திரு யோக சுவாமிகளுக்கு யாழ்ப்பாண மக்கள் நிலையான இடத்தைக் கொடுக்கவில்லை. திருவண்ணாமலையில் உள்ள ரமண மகரிஷிகளை 1930ம் ஆண்டில் தரிசிக்க இரண்டு ஜேர்மன் தேசத்து கன்னியாஸ்திரிகள் சென்றனர். ரமண மகரிஷியை தரிசித்த பின்பு அதே ஆண்டு கொழும்புத்துறைக்கு வந்து இச்சந்நியாசினிகள் தவத்திரு யோகர் சுவாமிகளை தரிசித்ததாக அறிவோம். ரமண மகரிஷி இச்சந்நியாசினிகளுக்கு "ஒரு கடவுள், ஒரு உலகம்" என்று சொல்லியதாகவும் யோக சுவாமிகளும் தான் அதற்கு மேல் ஒன்றும் சொல்லமுடியாது என்று கூறிவிட்டார். 1930ம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சியை இப்பொழுது தான் அறிய நோ்ந்த பொழுது எனது உள்ளம் துடிக்கின்றது. தவத்திரு யோகசுவாமிகளை அடியேன் 1955ம் ஆண்டிலிருந்து 1964 வரைக்கும் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தபோதிலும் இவரது ஆத்மீக வாழ்வின் மகத்துவத்தை இன்றுதான் அறியக்கூடியதாக இருக்கிறது.

தவத்திரு யோக சுவாமி களின் சீடர்களான ஸ்ரீமார்கண்டு சுவாமிகளுடன் 1972ம் ஆண்டிலிருந்து தரிசிக்க முடிந்தது. இதேபோல் யோகசுவாமிகளுடையசீடர்களான கந்த சுவாமி (சோல்பரி பிரபுவின் மகன்), இன்று அமெரிக்காவில் பலபணிகள் புரியும் ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகளின் தரிசனமும் கிடைத்தன. ஆகவே எம்மக்கள் ஆத்மீக வாழ்வில் உன்னிப்பாக இருக்க, யாவும் சீராக அமையும் என்பது அடியேனது அயராத நம்பிக்கை. சுவாமிகள் ஒருக்கால் வேடிக்கையாக சொன்ன கதை ஞாபகத்தில் உண்டு. ஒரு பக்தர் சுவாமிகளைக் கண்டு சிவதொண்டன் நிலையத்திலும், பர ஆலயங்களிலும் பிரசங்கங்கள் செய்ய வேண்டும், சைவசமய வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும் என்றார். சுவாமிகள் அவரைப்பார்த்து "சிவபெருமான் இருக்கிறாரோ" என்று வினவினார். அதற்கு பக்தர் "ஆம்" என்று பதில் கொடுத்தார். உடனே சுவாமிகள் "அப்ப சிவபெருமான் கவனிப்பார், நீர் பேசாமல் இரும்" என்றார். இதில் ஆயிரம் பொருள் அமைந்துள்ளது. நாங்கள் இப்பொழுது செய்யக்கூடிய தலையாய கடமை சுவாமிகள் விட்டுச் சென்ற அகில பொக்கிஷங்களான "நற்சிந்தனை, தியான காலம், சுவாமிகளின் வாழ்க்கைத்தத்துவத்தை" சிக்கெனப் பிடித்தல் ஆகும். இதுதான் நம்துன்பம் அறுக்கும் அருமருந்து.

சிவத்தியானஞ் செய் செய் செய்
சிவமே நாமெனல் மெய் மெய் மெய்
அவனி யனைத்தும் பொய் பொய் பொய்
அதனை யறிந்து உய் உய் உய்

-நற்சிந்தனை

சுவாமி சித்ருபானந்தா
ஸ்ரீசாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தமிழோசை' சங்கரண்ணா

# மாதம் ஒரு மந்திரம்

**கோ**புரம் அழகானது. கொடிமரம் வடிவானது. கோயிலுக்குள் தூய உள்ளத்தோடு பக்தி பரவசத்துடன் கையில் தேங்காய் -பழம் பூமாலை அடங்கிய தட்டுக்களுடன் நுழையும் மக்கள் கூட்டத்தைப் பார்த்தால் பரமானந்தம், கண்ணுக்கு ரம்யம்! கோயிற் சிற்பங்கள், மூர்த்தி எல்லாமே எழில்... சௌந்தர்யம்... ஆன்ம அழகின் சதுரப்பாடு!.... கொட்டுமேளம், நாதஸ்வர மங்கள இசையின் ஒலி, மந்திர- அருச்சனை உச்சாடனங்கள், ஊனினை உருக்கும் பாசுரப் பதிகங்களின் தமிழ், பூஜை மணி நாதம், தீபாராதனைச் சுடர்- ஜோதியின் ஒளிவெள்ளம் அனைத்துமே அழகின் வடிவங்கள்! உண்மை யில் தெய்வ வழிபாடே அழகினை ஆராதிக்கும் ஓர் செயல், சடங்கு, சன்மார்க்கம் என்று சொன்னால் கூட மிகையில்லை! அன்பு, அருள், அழகு மூன்றும் இணைந்ததே ஆண்டவன் அல்லவா?..

எம்மதத்திற்கும் இது பொருந்தும். வானுற ஓங்கி நிற்கும் மாதாகோயில், 'சர்ச்' தேவாலய ஸ்தூபிகளையும், ஞாயிற்றுக்கிழமை வைகறைப் போதில் அணியணியாகப் பிரார்த்தனைக்குச் செல்லும் ஆண்-பெண்- குழந்தைகளின் முகங்களையும் பாருங்கள், எத்துணை எழில்! நீல வானப் பின்னணியில் நிமிர்ந்து நிற்கும் பள்ளிவாசல்- மசூதி மினரத்துக்களின் பேரெழில் ஊட்டும் பிரமிப்பை எப்படி வர்ணிக்க முடியும்? ஐந்து நேரமும் தொழுகைக்கு மக்களை அழைக்கும் முரசங்களின்- நகராக்களின் நாத அழகும், பாங்கொலியின் பவித்திரமான மெய்யுணர்வு முழக்கங்களும் எத்தகைய அருள் வனப்புடையன!


இயற்கையின் படைப்பில் எல்லாமே அழகுதான்! அழகற்றவை, வேண்டாதவை என்று எதுவுமே இல்லை! மரஞ்செடி கொடிகள், மலர்கள், புற்பூண்டுகள், பறவைகள், வண்டினங்கள் அனைத்தும் எழில் பெற இலங்குகின்றன. எழிலற்றவை, வேண்டாதவை என்று ஒதுக்குவதெல்லாம் மனித மனங்களின் விகாரத்தை ஒட்டிய சேட்டைகளே! "பயிர்களுக்கு நடுவே களை! தோட்டத்து நந்தவனத்தில் 'WEEDS'- வேண்டாத முட்செடிகள், அழிக்க அழிக்கத் தலைதூக்கும் அனாவசியங்கள்!" என்று நம்மில் பலரும் பேசுகிறோம்! குறைபட்டுக் கொள்கிறோம்! பழங்கதை வாக்கியம் ஒன்று நினைவுக்கு வருகிறது. "அந்தக் கல்லறையைச் சுற்றிக் காடுபோல் மண்டியிருக்கிறதே களைச்செடி, மூலிகை- அதன் 'மகத்துவம்' முன்பே தெரிய வந்திருந்தால், கல்லறைக்குள்ளே இருக்கும் 'பேர்வழி' அவ்வளவு விரைவில் 'உள்ளே' போயிருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது!" எதற்குச் சொல்ல வந்தேன் என்றால், உலகில், இயற்கை படைக்கும் ஒவ்வொன் றிற்கும் ஒரு 'பொருள்'- 'அவசியம்'- 'பயன்'இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்டவே. இயற்கையின் படைப்பனைத்தும் ஈஸ்வர சொரூபமல்லவா? "நிற்பதெல்லாம் நெடுமால்; பிறந்ததெல்லாம் பெருமாள்" என் று வைணவப் பெருமக்கள் கூறுவது இதைத்தான்!

இயற்கை அன்னையின் கலைத்திறன், அழகுணர்ச்சி அற்புதமானது. கூர்ந்து நோக்கினால் இயற்கையே ஒவ்வொரு படைப்பையும், சிருஷ்டி எனும் பட்டறைக் களத்தில் 'அழித் துப் பிசைந்து' திருத்தமாகப் புதுப் பித்து- அழகுடன் ஆற்றலுடன் திகழும் வகையில் உருவாக்கி வந்திருப்பது புலப்படும். Evolution- பரிணாம வளர்ச்சி என்கிறோமே அது, இயற்கையின் இந்த 'சிருஷ்டி தத்துவ' உண்மையையே காட்டுகிறது. ஆதிகாலத்தில் உலவிய, பிரம்மாண்டமான உருவங்கள் கொண்ட டைனோஸர்ஸ், 'மேம்மத்' எனும் மதம்பொழிசடை யானைகள், பெரிய பெரிய விலங்குகளையே 'கோழிக்குஞ்சை, அடித்துச் செல்லும் பருந்தினைப் போல, கவர்ந்து தூக்கிச் செல்லும் ராக்ஷஸப் பறவைகள் எல்லாம் காலப்போக்கிலே மறைந்து விட்டன; அதாவது அருகிப்போய்விட்டன!

இந்த யுகத்தில், காலத்திற்கு ஏற்றவண்ணம், கச்சிதமாக அத்தோடு முன்னிலும் பார்க்க எழிலுடன், ஏற்றத்துடன் உயிர்க்குலங்கள், திருந்திய படைப்புக்களாகத், திருத்தப்பட்ட 'பதிப்புக்'களாக மாற்றம் பெற்றிருக்கின்றன! இவ்வாறு இயற்கை படைத்த உயிர்களில் உடற்கூற்று அமைதியை, அறிவாற்றல் நிலை

## விகார விந்தம்

யமான "தலைச்சோற்று"- மூளை வளர்ச்சியை, உள்ளுறுப்புக்கள்- வெளியுறுப்புக்கள் ஆகியவற்றின் செயல்படு திறத்தின் மகோன்னதத்தை எடுத்துக் கொண்டால் மனித உருவே, உடலே, எழிலே மிகச் சிறந்தது என்பதை யாரும்



விளக்கத் தேவையில்லை! 'இறைவன் 'தன்சாயலில்' மனிதனைப் படைத்தான்' என்கிறதல்லவா விவிலிய வேதம்!

மனிதனும் பரவாயில்லை!...

படிப்படியாக அறிவிலும் நாகரிகத்திலும் முற்றித்தான் வருகிறான்! 'குகை'யிலிருந்து மாளிகை வாசம்!... மின்சார நேசம்! விமானப் போக்குவரத்து!... பல நோய்க்கிருமிகளையும் வென்று ஆயுள் நீட்டிப்பு; உள்ளுறுப்பு மாற்றிப் பொருத்தும் சஸ்திர சிகிச்சை வெற்றி! பிரபஞ்ச மண்டலத்தில் இயங்கும் கோள்களை பொறியியல் ஆற்றலால் 'வலவன்' விண்பொறிகளை அனுப்பி தகவல் சேகரிக்கும் ஆற்றல், அயனவெளியில்'செய்கோள்' ஸாட்டிலைட்டுகளைச் சுழல விட்டு ஒலியலை- ஒளியலை அஞ்சல், உலகப் பருவநிலை நோட்டம்- இப்படி அளப்பரிய சாதனைகள் புரிந்து வருகிறோம்! போதாக்குறைக்கு, உடற்கூற்று மூல 'வரைபடமான' DNA எனும் 'அணுவைத் துளைத்துச்' செப்பனிடும் ஆற்றலிலும் மனிதகுலம் அற்புதங்களைச் செய்து வருகிறது!

எல்லாம் நன்மையை உத்தேசித்த விஷயங்களே; தவறு ஒன்றுமில்லை! ஆனால் அறிவியல் துஷ்பிரயோகங்கள், இயற்கை என்றாலும் சரி, இறைவன் என்றாலும் சரி- இரண்டினையும் அவமதிக்கும் வகையில் 'அத்துமீறி' வருவதைக் கண்டால் வேதனைப்படுவதா, எள்ளி நகையாடுவதா, என்று தெரியவில்லை!

'Atomic Fusion' அல்லது 'Fission' மூலம், ஆக்கபூர்வமான பயன்கள் ஒரு புறம் இருக்க 'நாசகார அணுவாயுதங்களை' ஏவுகணைகளைத் தயாரிக்கிறார்களே, இந்த 'உற்பத்திப் பொருள்களை' உபயோகப்படுத்துவது என்பது 'உலக அழிவில்' அல்லவா வந்து முடியும்! இது வேதனைப்படத்தக்க அத்துமீறல்!... எள்ளி நகையாடத்தக்கது? மற்றொரு சங்கதி!.... விகார விந்தம்......

உணவுப் பொருள்களில்தான் கலப்படம் என்றால் உடல் உறுப்புகளுக்கும்-ஐயா, உயிர்காக்கும் உள்ளுறுப்புக்களைச் சொல்லவில்லை- வெளி உறுப்புக்களுக்கும் 'கலப்பட' மோஹம் வந்துவிட்டது. மூக்கு போலி! முகவாய்க்கட்டை முட்டுக் கொடுத்தது! "சீக் போன்" செதுக்கித்தள்ளிச் செப்பனிட்டது! 'மத்தகக் கொங்கையுள், சத்தியம் ஸிலிகான்! ப்ருஷ்டமோ பிறந்த போது இருந்த இரண்டில்லை! "ஆறடிக் கூந்தலென் பார் அத்தனையும் கடைச்சரக்கு" என்பது அந்தக்காலம்! இப்போது (மேலை நாட்டில்) "ஆறடி அழகி யென்பார்- அல்லது அழகன் என் பார் அரைவாசியும் ஒட்டுவேலை"! என்றுதான் பாடத்தோன்றும்! கலி முற்றாமல் என்ன செய்யும்? துணிச் சலவை நியாயமானது! தோல் சலவை என்னத்திற்கு?!

'COSMETIC SURGERY' என்ற "காசு பிடுங்கும்" கலைக்கு இப்போது சுக்ர தசை!... சக்கைப்போடு! சக்கையை 'யாக்கைக்குள்' போடும் சதுரப்பாடு! உடல் அழகை மூலதனமாகக் கொண்ட, 'ஹாலிவுட்' மற்றும் மேலையுலகப் 'பட' நடிகைகள், 'பாப்' உலகப் "பாட்டு காற்பங்கு, ஆட்டம் முக்காற்பங்கு" அணங்குகள் சிலர் 'ஸிலிகான்' தன லட்சுமிகளாக மாறப்போய், சாதாரணப் பெண்கள் பலரும் மாதனம் ஈந்தாவது 'சாதனம்' பெற மறுகுகிறார்கள்! மகளிர்க்கான ஒப்பனைப் பொருட்களின் விளம்பரங்கள் கொள்கலத்தில் 'உள்ளொன்று' வைத்துப் 'புறம்' ஒன்று வர்ணிக்கும் கலையில் ஒன்றையொன்று போட்டியிடுகின்றன!... "தோலுக்கு என்றும் இளமையூட்டும் சத்து அடங்கிய க்ரீம்" "தோற் சுருக்கங்களை மாற்றும் பூச்சுக்களிம்பு" -ரஸாயனச் சாலைகளில் பரிசோதித்துப் பார்த்ததில் 'ஒரு புண்ணாக்கும் இல்லை!' என்ற உண்மை செய்தித்தாட்களில் வெளிவந்திருக்கிறது!.... உடலின் பளபளப்பு, செந்தளிப்பு எல்லாம் நல்ல சத்துள்ள உணவாலும், மன மகிழ்ச்சியாலும் ஆரோக்ய விதிகளைக் கடைப்பிடித்து நடப்பதாலும், ஒழுக்கசீலத்தாலும் சித்திக்கக் கூடியவை! அத்தோடு 'பிறவி வாக்கும்' உண்டு. ஆரோக்கிய சுக்கில- சுரோணிதச் சங்கமம் சுந்தரக் குழந்தைக்கான மங்கலம்! அதற்காக ஒப்பனை கூடாது என்பதல்ல! அதீதம் தீது !-அளவோடிருத்தலே அழகு! அழகுக்கும் அழகு ஆன்ம பரிசுத்தம்- பக்தி!

உடம்பினை முன்னம்
இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே
யுறுபொருள்கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோயில்
கொண்டானென்று
உடம்பினை யானிருந்
தோம்புகின்றேனே.

-திருமந்திரம்.

## இசைக்கச்சேரி

சங்கீத வித்வான் திருமதி பிரியதர்சனா யோகராஜாவின் பாட்டுக் கச்சேரி ஒன்று ஆகஸ்ட் 15ஆம் தேதி மாலை 7 மணிக்கு வெம்பிளி ஈஸ்ற் லேன், வெம்பிளி உயர் பாடசாலையில் நடைபெறுகிறது. நிகழ்ச்சியில் டாக்டர் லக்ஷ்மி ஐயன் வயலின், செல்வர்கள் ஜேசன், ஜொனதன் பி ராஜசிங்கம் ஆகியோர் மிருதங்கம், பங்களூர் திரு பிரகாஷ் கடம்.

# யுத்த நிறுத்தத்துக்கு 'ஸ்கொட்' கோரிக்கை

(நமது நிருபர்)

இலங்கையில் தமிழ் மக்களின் உயிருக்கும் உடமைக்கும் நாசம் விளைவிக்கும் பாரபட்சமற்ற விமான, கடல் தாக்குதல்களை நிறுத்தி தமிழர் பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் ஒரு சமாதானத் தீர்வைக் காண்பதற்கு வாய்ப்பாக ஒரு யுத்த நிறுத்தத்தையும் அறிவிக்குமாறு லண்டனின் 'ஸ்கொட்' நிறுவனம் இலங்கை அரசைக் கோரியிருக்கிறது.

இக்கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை இந்த நிறுவனத்தின் மனித உரிமைகள் குழு லண்டனிலுள்ள இலங்கைத் தூதர் திரு சேபால ஆட்டிகலவை இம்மாதம் 28ந் தேதி சந்தித்து கையளித்தது. பரஸ்பர போர்நிறுத்தத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகளையும் அது கோரியிருக்கிறது.

இவை தவிர, இனப்பிரச்சனைக்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றக்குழு முன் ஏனைய கட்சிகளைப் போல ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமது பிரேரணைகளை முன்வைக்க வேண்டும் என்றும், இவ்விருகட்சிகளும் தமது கட்சி நலன்களுக்கு அப்பால் இவ்விடயத்தில் ஒன்றுபடவேண்டும் என்றும் குழு அதன் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. அத்துடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட அனைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளும் இனப்பிரச்னைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்றாற்போல் பிரேரணைகளை முன்வைப்பதில் தம்முள் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

தூதரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில், அண்மைக்காலங்களில் வடக்கு கிழக்கில் நிகழ்ந்த பல சம்பவங்களையும் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

# எங்கள் பரம்பரை

(11ம் பக்க தொடர்ச்சி)

அணிவித்துக் கரகோஷம் செய்தார். இதை என்றும் என்னால் மறக்க முடியாது.

புதிய செயல் ஒன்றைச் செய்தால் அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் பழக்கம் என்றுமே இருந்து வருகிறது. விவரம் தெரியாதவர்களின் மறுப்பைப்பற்றிக் கவலை இல்லை. கற்றுணர்ந்த பெரியோர்களும் அந்தச் செயலில் ஈடுபடுகிறபோது தான் சஞ்சலம் ஏற்படுகிறது.


ஸ்ரீதியாகராஜ பஞ்சரத்தின கீர்த்தனைகளில் ஒன்றான ஆரபியில் அமைந்த 'ஸாதிஞ்சனே' உருப்படியைக் கமலாவுக்குப் பயிற்றுவித்து ஆடச்செய்தபோது பார்த்தவர்களில் பலரும், 'ஆஹா! அற்புதம்!' என்று பாராட்டினர். அறிவிலும் ஆண்டிலும் கலையிலும் முதிர்ந்த பெரிய மேதை ஒருவர் இதை ஆட்சேபித்தார்.

"பஞ்சரத்தினக் கீர்த்தனையைப் பரத நாட்டியத்தில் இணைத்துவிட்டீர்களே! இது முறையா?" "ஏன்? இதில் முறைப் பிசகு என்ன?"

"ஸ்ரீதியாகப்பிரம்மம் பக்திபூர்வமாக இயற்றியது."

"இங்கேயும் அந்தப் பக்தி முறைக்கு ஒன்றும் குறைவில்லையே! தாங்கள் பாடலில் பக்தியைக் காண்கிறீர்கள். நான் பாடலோடு ஆடலிலும் பக்தியைக் காண்கிறேன். பக்தி மார்க்கத்தில் அபிநயத்துக்கு முக்கியத்துவம் உண்டு என்பதை மறந்திருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது. வெறும் பாடலைவிட, ஆடல் அபிநயத்தோடு பாடலையும் இணைத்து நாயக- நாயகி பாவத்தை வெளிப்படுத்துவது இறைவழிபாட்டில் தலையாயது என்பதே என் கருத்து. பரதநாட்டியத்தை வெறும் கேளிக்கையாக எண்ணாமல் சாஸ்திர சம்பிரதாய பூர்வமான உயர்ந்த கலை என்று எண்ணி அந்தக் கருத்தோடு பார்த்தால் பக்திபாவம் நன்றாகக் கமழும்."

நான் இவ்வளவு சொன்னபிறகு அவர் மனம் ஒருவாறு சமாதானம் அடைந்தது.



வானோர் சிறைமீட்ட வடிவேலா- எமை
வாழ்விக்க வந்த அருள்வேலா!
தானோர் பிரணவப் பொருளாகி- தந்தை
தனக்குப தேசித்த குருநாதா!
கானோர் குறவள்ளி தேவானை- மயில்
கண்கவர் கொண்ட அழகேசா!
மானோர் பதஞ்சோலை கோயில் கொண்டு
- லண்டன்
மாநகர் அரசாளும் பெருமாளே!

-சங்கர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஈராக் மீது.........
(9ம் பக்கத் தொடர்ச்சி)

# மெலரும் 'மேனகை'யும்

வேர்ஜீனியா அம்மையாரின் திருமணப் பதிவேடுகள் அவரது குழந்தைகளின் பிறப்பு பதிவேடுகளை துருவி ஆராய்ந்து ஆராய்ந்து ஒரு குறை கண்டுபிடித்தது 'இன்டிபென்டன்ட்' பத்திரிகை. வேர்ஜீனியா அம்மையாரின் முதலாவது குழந்தை- மூத்தபிள்ளை- பிறந்த திகதி, வேர்ஜீனியா- பொட்டம்லீ தம்பதிகளின் திருமணத்திகதிக்கு முந்தியதாக இருந்தது என்று ஆதாரங்களுடன் வெளியிட்டது "இன்டிபென்டன்ட்"! எனவே அமைச்சர் வேர்ஜீனியா கூட "திருமணம் செய்யாமல் திருமணம் செய்யமுன்- கர்ப்பம் தரித்த ஒரு யுவதிதான் என்று பத்திரிகை சுட்டிக்காட்டியது.


அடுத்த சில தினங்கள்- இன்டிபென்டன்ட் ஆசிரியர் குழு மீதும் குறிப்பாக தலைமை ஆசிரியர் அன்டிரீயஸ் விட்டம் சிமித் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்ட வெறிநாய்கள் போல மற்றப்பத்திரிகைகள் பாய்ந்து கடிக்க ஆரம்பித்தன. கணவர் திரு பொட்டம்லீ அமைச்சராக இருந்திருந்தால் இப்படி ஒரு துரதிருஷ்டத்தை பத்திரிகை சுட்டிக்காட்டியிருக்குமா? பெண் அமைச்சர் என்றபடியால்தானே இத்தனை பாரபட்சம் என்றும் சில பத்திரிகைகள் அழுதன!

"சன்", "சன்டே டைம்ஸ்" பத்திரிகைகளை வெளியிடும் அவுஸ்திரேலிய மேடொக்கின் நியூஸ் இன்டநேஷனல் நிறுவனம் இன்டிபென்டன்ட் ஆசிரியரை அக்குவேறு ஆணி வேறாகக் கழற்றியது. யார் இந்த இன்டிபென்டன்ட் ஆசிரியர்? அவரது பூர்வீகம் என்ன. எங்களூரில் ஸ்ரீ ராஜாதி ராஜ.. என்று ஆரம்பிப்பது போல "பெரிய குடும்பத்து" விட்டம் சிமித் பெயரை வைத்துள்ள இவர் உண்மையில் பெரிய குடும்பத்தவரா? அல்லது தன்னை பெரிய குடும்பத்தவராக 'காட்டிக்கொள்ள' இவர் சூடிக்கொண்ட பெயரா இது? என்றெல்லாம் துப்பறிய முற்பட்டன, 'மேடொக்' குழுவினர் பத்திரிகைகள். இன்டிபென்டன்ட் பத்திரிகை ஆசிரியரின் பிறப்புப் பதிவேடுகளை ஆராய்ந்து அவரது பூர்வீகப் பெயரை வெளியிட்டு ஆராய்ச்சி செய்ய முற்பட்டன.

அமைச்சர் வேர்ஜீனியா பொட்டம்லீ அம்மையாரின் 'கர்ப்பம்' பற்றிய வாதப்பிரதிவாதங்களை பிரிட்டிஷ் பத்திரிகைகள் மறந்து கொண்டிருந்த நேரத்தில்- ஒரேயொரு பத்திரிகை மட்டும் இன்னோர் அமைச்சரை குறிபார்த்துக் கொண்டிருந்தது. அந்த அமைச்சர்- "பத்திரிகைகள் தனிப்பட்ட மனிதர்களின் வாழ்க்கையில் வரம்பு மீறி தலையிடுகின்றனவா?.." என்று ஆராயவென பிரதமரால் பணிக்கப்பட்ட வரலாற்றுத்துறை களியாட்டத்துறை அமைச்சர் டேவிட் மெலர் அவர்கள்! தொழிற்கட்சியை ஆதரிக்கும் மக்ஸ் வெல் நிறுவனத்தின் "சன்டே பீப்பிள்" பத்திரிகை- அமைச்சர் மெலர் மீது வைத்த குறி தப்பவில்லை. அமைச்சருக்கு காயம்பட்டது. ஆனால் அமைச்சர் கீழே விழவில்லை! பதவி பறி போகவில்லை. சன்டே பீப்பிள் தனது ஞாயிறு மலரில் கொட்டை எழுத்தில் வெளியிட்டு மற்றப்பத்திரிகைகள் பிரதிசெய்து வெளியிட்டிருந்த செய்தி என்ன?...

43 வயதான அமைச்சர் மெலர்- பிரதமரின் நெருங்கிய நண்பரான மெலர்- அழகிய மனைவியும் 2 குழந்தைகளும் கொண்ட பொறுப்பான குடும்பஸ்தராக வாழவேண்டிய மெலர், பட்டப்பகலில் ஒரு நடிகையை அடிக்கடி ரகசியமாக சந்திக்கிறார்! இன்னோர் நண்பனின் அறையை பகல்பொழுதுக்கு 'இரவல்' எடுத்து இரவில் செய்வதை பகலிலும் செய்கிறார்! சில சமயங்கள் இரவிலும் அந்த நடிகையுடன் தங்குகிறார்- என்று பக்கம் பக்கமாக புகைப்படங்களுடன் எழுதியிருந்தது சன்டே பீப்பிள் பத்திரிகை.

அந்த நடிகை- எப்போதோ எடுத்துக்கொண்ட அரை நிர்வாணப்படம், அமைச்சர் பயன்படுத்திய மெத்தை (கட்டில் கிடையாது) வைன் போத்தல், சிகரெட் இவையெல்லாம் புகைப்படங்களில் காட்



சியளித்தன. உறுதியற்ற வதந்திகளை வெளியிட விரும்பும் வடஇந்திய தென்இந்திய இலங்கைப் பத்திரிகைகள் சில அவற்றை வெறும் 'கிசுகிசுக்களாக' மட்டுமே வெளியிடுகின்றன. இந்த 'கிசுகிசு'க்கள் மூலம் தமது வாசகர்களுக்கு 'கிளுகிளுப்பூ'ட்டவேண்டும் என்பது அந்தப்பத்திரிகைகளின் முக்கிய நோக்கம்.

ஆனால் பிரிட்டிஷ் பத்திரிகைத் துறையில் செய்தியை வெளியிடமுன் ஆதாரங்களை சேகரிப்பார்கள். தங்கள் வழக்கறிஞரிடம் காட்டி அங்கீகாரம் பெறுவார்கள். பின் சம்பந்தப்பட்ட பேர்வழியை (உதாரணமாக அமைச்சர் மெலரை அல்லது அவரது வழக்கறிஞரை) அணுகி "உங்களைப்பற்றிய இன்ன இன்ன தகவலை நாளை புட்டுப் புட்டு வெளியிடப் போகிறோம் உங்கள் பதில் என்ன?" என்று முன்னெச்சரிக்கை கொடுப்பார்கள்.

அமைச்சர் மெலரை அணுகிய போது அவர் தலைமறைவாகி விட்டார். அவரது வழக்கறிஞர் பல தடவை அமைச்சருடன் தொடர்பு கொள்ள முற்பட்டு ஈற்றில் அமைச்சரின் அப்பாவி மனைவி ஜூடித் மெலரிடமே இந்த கசப்பான செய்தியை வெளியிட வேண்டியதாயிற்று.

பொழுது விடிந்தது. ஞாயிறு வந்தது. கற்பனைக்கே இடம் வைக்காமல் எல்லாப் பத்திரிகை



அன்ரோனியா

களும் மெலர் 'மேனகை' கதையை வெளியிட்டிருந்தன. 'மேனகை'யின் பெயர் அன்டோனியோ டி சஞ்சா என்பது.

"களியாட்டத்துறை அமைச்சரின் களியாட்டம்!" இது ஒரு தலைப்பு! "வெட்கமற்ற சுண்டெலியே!" இது இன்னோர் பத்திரிகையின் தலைப்புச்செய்தி. இச்செய்தி வெளியான தினம் அமைச்சர் மெலர் ஜூடித் தம்பதிகளின் திருமண ஆண்டு நினைவு தினம் என்றும் அன்று இந்த அவதூறு வெடித்துக்கிளம்பும்போது அமைச்சர் மனைவியின் அருகில் இருக்கவில்லை என்றும் இன்னோர் பத்திரிகை குறைப்பட்டது. இதற்கிடையே நடிகை அன்டோனியோவைத் தெரிந்தவர் கண்டவர் போனவர்- அவருடன் பணியாற்றியவர், நடித்தவர் பக்கத்து வீட்டுக்காரர் அவரது நடிப்புக் கம்பெனி அதிபர் இத்தியாதி பேர்வழிகள் எல்லாம் பத்திரிகையாளர்களை அணுகி பேட்டி கொடுத்து பணம் வாங்க ஆரம்பித்தார்கள். தலைமறைவாகியிருந்த அன்டோனியோ மீண்டும் வெளியே வந்து செவ்வி கொடுக்க ஆரம்பித்தார். "நான் ஓர் பொதுமகன் அல்ல! நான் செய்ததில் வெட்கப்பட ஒன்றுமேயில்லை" என்று கருத்து வெளியிட்டார். அமைச்சர் மெலர் கூட தமது மனைவியுடன் சேர்ந்து நின்று படம் பிடித்தார். செவ்வி கொடுத்தார்!..."பிறகு ராஜாவும் ராணியும் தமது அரண்மனையில் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்!" என்று கதையை முடிக்க விரும்புவது போல இருந்தது அமைச்சரின் அவசரப் படமும் செய்தியும்! இதன் பிறகு அமைச்சர் விலகுவாரா? அல்லது பிரதமர் அவரை விலக்குவாரா?..



வேர்ஜீனியா பொட்டம்லீ

என்றெல்லாம் சில பத்திரிகைகள் கேள்விகேட்க ஆரம்பித்தன.

இந்த மெலர் புராணத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பியவரைப் போல பிரதமர் மேஜர் அறிக்கை விடுத்தார்... 'வரலாற்றுத்துறை களியாட்டத்துறை மிகவும் பொறுப்பான ஒரு பதவி. திரு டேவிட் மெலர் பொறுப்பான ஒரு அமைச்சர்! அவர் அந்தப் பதவியில் தொடர்ந்தும் இருப்பார்!...' என்று பிரதமர் சொன்னதோடு இந்த விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. சில தினங்களுக்கு முன் பிரிட்டிஷ் பொதுமக்கள் மத்தியில் நடத்தப்பட்ட கருத்தறியும் வாக்கெடுப்பில்கூட இந்தக்கருத்து உறுதிப்படுத்தப்பட்டது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் அமைச்சர் மெலர்- வேலி தாண்டிய ஒரு வெள்ளாடு! நிலத்தில் விழுந்தும் மீசையில் மண் ஒட்டாமல் தப்பிக்கொண்டார். நடிகை சஞ்சாவுக்கோ நடிப்புத் தொழில் போயிற்று! இருப்பிடம் போயிற்று! இன்னும் சில வருடங்களுக்கு- தலைமறைவு வாழ்க்கை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் தான்.

சன்டே பீப்பிள் பத்திரிகை இந்தத் தகவலை எப்படி எடுத்தது என்று சில பத்திரிகைகள் ஆராய்ச்சியில் இறங்கியுள்ளன. தனியார் தொலைபேசி உரையாடல்களை சன்டே பீப்பிள் எடுத்தது சட்டவிரோதம் என்று சில பத்திரிகைகள் வரிந்து கட்டிக்கொண்டு கோதாவில் இறங்கியுள்ளன. வேறு சில கன்சவேட்டிவ்கட்சி உறுப்பினர்களும் இதற்கு ஆதரவாக கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

பத்திரிகைகளின் எழுத்துச் சுதந்திரம், பத்திரிகா தர்மம் என்ற வரையறையற்ற ஒரு எல்லைக் கோட்டுக்குள் பிரிட்டிஷ் பத்திரிகைள் அடிக்கும் கும்மாளமும்- கோமாளித்தனமும் பார்ப்பதற்கு மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும்! இவை பற்றி இன்னும் விரிவாக மற்றோர் தடவை கவனிப்போம்.

## காற்றிடையே....

இன்னும் வெளியில் இடையிடையே
பின் நிலவில்;
தென்னைகளின் ஓலை திடீர் என்று
சலசலக்கும்
பின் அவைகள் ஓயப்
பிறகும் சலார் என்று
வீசி எழுந்து விரைகின்ற வெள்வாடைக்
காற்றிடையே
தூரக்
கடல் இரைந்து கேட்கிறது

உள்ளறையில் கண்ணாள் உறங்குகிறாள்
பக்கத்தில்
பிள்ளைகளைப் போட்டுள்ளாள்
பின்னும் ஒருமுறை, எம்
சின்ன மகன் இருமித் தீர்த்துச்
சிணுங்கலிடை
கண்ணயர்ந்து போகையிலே...
மீண்டும் கடும் இருமல்

எத்தனை நாள் வந்த இருமல்
இதற்கு முன்
சத்தியும் காய்ச்சலும்
சனியன்
நமக்கே தான் இத்தனை நோய்
என்றே எழாது படுத்தபடி
நித்திரை பாதி, நினைவு பாதி என
"இச்சுச்சு" சொல்லி
இதமாய் மகன் தோளைத்
தட்டிக் கொடுத்துச் சரிசெய்தாள்
கண்மணியாள்
விட்டுவிட்டு
இன்னுமந்த வெள்வாடை மேய்கிறது

கொஞ்சம் அமைதி
பிறகும் அதே குக்கல்
இந்த முறை, லேசில் இளகவில்லை
சங்கிலி போல்
நெஞ்சு பிளந்து நிறுத்தலின்றித்
தொண்டையின்- அப்
பிஞ்சுச் சதையெல்லாம் பிய்ந்து
வருகிறது
என்ன செய்வோம்?
ஏதறிவோம்?
எவ்வாறிதைத் தீர்ப்போம்
அஞ்சிப் பதறும் அவளுக்கோர் ஆறுதல்
நான்

நெஞ்சைத் தடவு...
முதுகை நிமிர்த்தாதே...
கொஞ்சம் சுடுநீர் கொடுப்போமா?...
என்றிவைகள்
சொல்லி
மெல்ல அவன் துயிலும் போது
மெதுவாக
மெத்தையில் சேர்த்து
விளக்கைத் தணித்த பின்
சத்தம் எழாமல் கதவினையும்
சாத்திவிட்டு
மண்டபத்தில் வந்தேன்
மணி இரண்டு!
சாய்மனையில்
குந்துகிறேன்
மீண்டும் குழந்தை இருமுகிறான்.

—சண்முகம் சிவலிங்கம்



பாலேந்திராவின் 'மழை' நாடகத்தில் விக்னேஸ்வரன், கிருஷ்ணராஜா, ஆனந்தராணி.

ஜூலை 19ஆம் தேதி வோல்தம்பொரஸ்ற் தியேட்டரில் நடைபெற்ற அவைக்காற்று கலைக்கழகத்தின் நாடக விழாவில் இடம்பெற்றது 'மழை'.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ANGLO ASIAN MINI MART

## Beckons You To

EXPERIENCE THE DIFFERENCE

OF

# SRI LANKAN PRODUCTS

IN

# WEMBLEY

## HURRY CURRY

## DYNAFAB

ஆனந்தவிகடன், பொம்மை, பேசும்படம், குமுதம், கல்கி,

மற்றும் சகல வாரப் பத்திரிகைகளுக்கும்

# ANGLO ASIAN MINI MART

513 HIGH ROAD, WEMBLEY

TEL: 081-903 8202 FAX: 081-868 4918

www.tamilarangam.net

தமிழோசை
THAMIZHOSAI

## லண்டனில்

# தேரூர்ந்து வந்த திருமுருகன் வானூர்ந்து வந்த மலர்க்குவியல்

பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்களின் 'வேல் முருகா! வேல் முருகா! செந்தில் முருகா! கதிர்காமக் கந்தா! நல்லூர் கந்தா! லண்டன் முருகா! எம்துயர் துடைக்க வாராயோ!' என்ற கோஷங்கள் வானைப்பிளக்க, பஜனைக் கோஷ்டிகள் தேர் முன்னும் பின்னுமாக முருகன் அருட்பாட்களை முழங்க, லண்டன் முருகன் வள்ளி தெய்வானை சமேதராய் அடியார்களுக்கு திருவருள் பாலிக்க தேரில் எழுந்தருளி வீதி வலம் வந்த காட்சி



எல்லோர் உள்ளத்தையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்திவிட்டது.

கிழக்கு இலண்டன் ஈஸ்றஹாமில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் செந்தில் முருகன் தேர்த்திருவிழா கடந்த ஞாயிறு அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டு 9வது ஆண்டாக நடைபெறும் இத்தேர்த்திருவிழாவினைக் கண்டு களிக்க பல்லாயிரக்கணக்காக பக்தர்கள் அங்கு குழுமினர். அன்று காலை 9.30 மணிக்கு முருகன் தலத்திலிருந்து புறப்பட்ட தெய்வபவனி, சுமார் மூன்று மைல் தூரத்தைச் சுற்றி அடியார்களுக்கு அருள் பாலித்து, பி.ப.1.30 மணிக்கு ஆலயத்தை வந்தடைந்தது.

ஆடிக்கிருத்தியை மையமாக வைத்து இக்கோவில் கொடியேற்ற விழா கணிக்கப்பட்டு தேர்திருவிழா நிர்ணயிக்கப்படுவதாக கோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ நாகநாத சிவம் குருக்கள் அவர்கள் குறிப்பிட்டார்கள். இத்தேர்த்திருவிழாவைச் சிறப்புடன் நடத்துவதற்கு சில தினங்களுக்கு முன்னர் திருவருள் செயலாக இங்கு வந்திருந்த சென்னை ஸ்ரீ காளியம்பாள் கோவில் பிரதம குரு ரி.எஸ்.சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் அவர்கள் தேர்த்திருவிழா மகிமையைக் குறிப்பிட்டார்கள்.

கொடியேற்றத்துடன் நடைபெறும் திருவிழா ஒவ்வொன்றிற்கும் காரணம் உண்டென்றும், இவற்றுள் தேர்த் திருவிழா மிகமுக்கியமானது என்றும் அவர் கூறினார். 'ஆண்டவன், அடியார்கள் அனைவருக்கும் திருவருளைப் பாலித்து காட்சி கொடுப்பதற்காக தேரில் எழுந்தருளி திருவுலா வருகிறார்' என்றார் சிவாச்சாரியார்.

இதில் உண்மை உண்டு என்பதை உணர்ந்த பக்தர்கள் பல்லாயிரக் கணக்கில் வருகைதந்து அமைதியும் அடக்கமும், தெய்வீக சிந்தனையுமாக தெருத்தெருவாக நின்று கருணா மூர்த்தி முருகனின் திருவருளை வேண்டி நின்று வழிபட்ட காட்சி கண்கொள்ளாக் காட்சி.

ஆங்கில நாட்டில் பிறந்து வளர்ந்த தம் சிறார்களுக்கு இந்த தத்துவத்தை பல தாய், தந்தையர்கள் ஆங்கில மொழியில் விளங்க வைத்த- சமய நெறியைப் புகுத்தும் அவர்களின் ஆர்வத்தை இத்தேர்த் திருவிழாவில் காண முடிந்தது.

தேர்த்திருவிழாவின் போது இங்கு முதன்முறையாக நாதஸ்வர கச்சேரி இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இன்று வானொலியிலும், தொலைக் காட்சியிலும் நாதஸ்வர கச்சேரிகளைக்கண்டு களித்த லண்டன் வாழ் தமிழ் மக்களை- குறிப்பாக இளம் சந்ததியினர்களை மிக கவர்ந்தது. மிக உன்னிப்பாக ரசித்தனர். இந்த நாதஸ்வர வித்வான்கள் பாரிஸ் நாட்டிலிருந்து அழைக்கப்பட்டிருந்தார்கள். தேர்ப் பவனியுடன் பக்தி அலைகளைப் பரப்பி வந்த பெருமை பஜனைக் கோஷ்டிகளுக்குரியதாகும். ஐந்து பிரிவாகி ஆங்காங்கே கோஷ்டி கோஷ்டியாக நின்று பக்திப்பரவசம் நிறை முருக பாடல்களைப்பாட, பக்தர்களும் சேர்ந்து பாட, பக்தி மிகுதியால் பலர் ஆட, வீதியெல்லாம் தமிழ் முழக்கம் முழங்க, அரோகரா என்ற கோஷம் எல்லோர் நாவிலும் ஒலிக்க, தெய்வீக உணர்வை எல்லோரிடையேயும் ஏற்படுத்தின.

ஈழத்திலும், தமிழகத்திலும் இடம்பெறுவது போன்ற காவடி ஆட்டமும் இடம்பெற்றால் நன்றாக இருக்குமென்று பலர் பேசிக் கொண்டனர். நேர்த்திக் கடனை தீர்ப்பதற்காக பல பெண்கள் கற்பூரச் சட்டி ஏந்தி வந்தார்கள்.

எமது நாடுகளிலுள்ள சித்திரத் தேர்போல் இங்கு அமைக்க முடியவில்லையென்றாலும், பல்வகையான புஷ்பங்களினால் லண்டன் முருகன் தேர் அலங்கரிக்கப்பட்டிருந்தது ஒரு தனிச் சிறப்பாக இருந்தது. எப்படி இப்படி குவியல், குவியலாக புஷ்பங்களைப் பெற்றார்கள் என்று கோவில் நிர்வாகி திரு சம்பத்குமார் அவர்களைக் கேட்டபோது "முருகன் பம்பாயில் ஓர் அன்பரை ஏற்படுத்தித்தந்தார்" என்றார். அவர் வேறுயாருமல்ல அங்குள்ள விமான நிலைய பொறுப்பதிகாரி திரு வெங்கட நாராயணன் என்பவர். அவர் ஆண்டு தோறும் லண்டன் முருகனுக்கு குவியல் குவியலாக புஷ்பங்களை சரியான நேரத்தில் கொண்டு வந்து சேர்ப்பாராம். தேர்த்திருவிழாவை கண்டு களித்துக் கொண்டிருந்த திரு வெங்கட நாரயணனை அறிமுகம் செய்து வைத்தார் சைவமுன்னேற்றச்சங்க பிரமுகர் முருகதாஸ். "எப்படி இவ்வளவு புஷ்பங்களை முருகன் கோவிலுக்கு அனுப்புகின்றீர்கள்" என்று அவரிடம் கேட்டபோது "இதெல்லாம் அவன் செயல்" என்றார்.

இப்படி பல திருவருள் செயலுடன் நடைபெற்ற தேர் திருவிழாவை கண்டு களித்துக் கொண்டிருந்த பக்தர்களுக்கு ஒரு சோதனையும் ஏற்பட்டது. தேர்ப்பவனி ஆரம்பமானபோது வழமைபோல் வருணபகவான் தன் வருகையைக் காட்ட முற்பட்டான். தீர்த்தம் தெளிப்பது போல் துளிகள் விழுந்தன; கருமேகங்கள் மழை பொழியும் போல் இருண்டன. ஆனால் பக்தர்கள் "முருகன் மழை பெய்ய விடார்" என்று நம்பிக்கை கொண்டனர். தேர்வீதி வலம் வரும்போது ஏதும் நிகழக்கூடாது என்று முருகனை வேண்டி நின்றனர். தேர்ப்பவனி புறப்பட்டது. நீர் துளிகள் நின்றன. ஆனால் இடையிடையே மழை வந்துவிட்டது போன்று மேலும் பல சோதனைகள். தேர் மீண்டும் ஆலயத்தை வந்தடையும் வரை வருணபகவானின் மிரட்டல் பலிக்கவில்லை. இது முருகனின் திருவருள் செயல் என்று பக்தர்களிடையே நம்பிக்கை வலுவேற்பட்டது. தேர்ப்பவனி வந்த வீதியெல்லாம் தண்ணீர்ப் பந்தல் சேவை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இங்நாட்டின் சூழலுக்கேற்ப, காப்பி, தேநீர், குளிர்பானம், வடை, கடலை, பாயாசம் போன்றன வழங்கி பக்தர்களை உபசரித்த காட்சி மற்றுமோர் சிறப்பு அம்சம். மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து இந்த தண்ணீர்ப் பந்தல் சேவையை ஆற்றிவருகிறது சைவமுன்னேற்றச்சங்கம்.

இத்தேர்த்திருவிழாவிற்கு, ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து பலர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. பிரித்தானிய நாட்டிலும் பல பகுதிகளில் வாழும் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் வந்திருந்தனர்.

"கோணேசர் தேர்த்திருவிழாவைப் பார்த்து பல வருடங்களாகி விட்டன. இன்றைய தேர்த்திருவிழாவைப் பார்த்ததில் அங்கு சென்று வந்தது போன்ற ஒரு திருப்தியைக் கண்டேன்" என்றார் திருமலை அன்பர் ஒருவர்.

"மாமங்கப்பிள்ளையார் ஆடி அமாவாசை தீர்த்த விழாவை கண்டு கழித்து ஐந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இன்று இத்தேர்த் திருவிழாவில் கலந்து கொண்ட பின்னர் இன்னும் மூன்று தினங்களில் வரும் ஆடி அமாவாசை தீர்த்தத்தை நினைவுக்கு கொண்டுவந்தது. ஒரு கணம் மட்டுநகர் சென்று வந்ததாக உணர்கின்றேன்" என்றார் மட்டுநகர் நண்பர் ஒருவர். கொழும்பில் ஆடிவேல் விழாவினை 1983க்கு பின்னர் பார்க்க முடியாத அன்பர் ஒருவர்- இத்தேர்த்திருவிழா ஆடிவேல்விழாவினை பார்த்துக் களித்தது போல் இருந்தது என்றார்.

மூன்று மணித்தியாலங்களாக யாழ்ப்பாணம் நல்லூர் வீதியில் நடமாடி நல்லூர் தேர் திருவிழாவையா கண்டு களித்தோம் என்ற பூரிப்பை பலர் தெரிவிக்கக் கேட்கக் கூடியதாக இருந்தது.

இதேபோன்று மலேசியா, மொறிசியஸ் நாட்டு தமிழ்மக்கள் தங்கள் தங்கள் நாடுகளில் நடைபெறும் விழாக்களில் கலந்து கொண்டது போன்ற ஒரு மன நிறைவைக் கொண்டிருந்தனர். பிரித்தானிய நாட்டில் முற்றிலும் வேறுபட்ட மேற்கத்திய சூழலில் தமிழ் கலை கலாச்சாரமும் சைவ சமய நெறியும் பிரதிபலிக்க தேர்த் திருவிழாவை சிறப்புடன் ஏற்பாடு செய்துவரும் திரு சம்பத்குமார் அவர்களை இவ்வொழுங்குகளைப் பற்றி கேட்டபோது

"இதெல்லாம் யாரோ ஒருவன் நடத்தி வருகின்றான். நாம் ஒரு கருவியாக செயல்படுகிறோம்" என்றார். இவ்வளவு சிறப்பாக தேர் திருவிழா நடைபெற ஏற்பாடுகள் செய்துள்ள நிருவாகிகளின் திறமைகளைப் பாராட்டாமலிருக்க முடியாது. அதுவும் ஆங்கில நாட்டில் சமய ஊர்வலம் நடத்துவது இலகுவான காரியமல்ல. எல்லோரும் இன்புற்று முருகன் அருளைப்பெற இதுபோன்ற தேர்ப் பவனி பெரிதும் பயனுள்ளதாக அமைந்துவிட்டது.

இலண்டன் ஸ்ரீமுருகன் தேர்த்திருவிழா இங்கு வாழும் பன்னாட்டுத் தமிழர்களுக்கும், நிறைவையும், ஆத்மீக ஈடேற்றத்தையும் அளிக்கும் பெருவிழாவாக சிறப்புற்றுள்ளது.

**ஐ.தி.சம்பந்தன்**

படப்பிடிப்பு:- கிருஷ்ணராஜா



# பெருமை சேர்த்த நாள்

லண்டன் ஸ்ரீ முருகனலாய தேர்த்திருவிழா26.7.92 ஞாயிற்றுக்கிழமை மறக்கமுடியாத ஒருநாள். அன்றைய காலைப்பொழுது நெஞ்சைவிட்டகலாத உன்னதப் பொழுது. சிந்தனையைச் சிலிர்க்கச் செய்து கல்நெஞ்சைக் கரைத்துக் கனியாக்கி, கண்களைத் துளிர்க்கச் செய்த ஒரு நிகழ்ச்சி லண்டன் ஸ்ரீ முரகனாலய தேர்த்திருவிழா.

நான்தான் அழகன், ஆயிரம்கோடி மன்மதர்கள் ஒன்றினைந்தாலும் என்னழகிற்கு ஒப்பாகுமா என்று கேட்டது அத்திருக்கோலம். கோடி சூரியப் பிரகாசம் என்வதனத்திலே இருக்கிறது என்று அத்திருமுகம் காட்டியது. முருகனிடம் அணிகலனாய் இருப்பதால் நாம் மிளிர்கின்றோம் என்றன பொன்னாபரணங்கள். எங்கெங்கோ பூத்த மலர்கள் எல்லாம் நறுமணங்கமழும் பூமாலைகளாக, முருகனின் திருத் தோள்களை அலங்கரிக்க நாம் தவம் இருந்து இப்பேறு பெற்றோம் என அவன் மேனியை தழுவித் தவழ்ந்தன. இத்தனைச் சிறப்புகள், இன்னும் ஆயிரம் சிறப்புகளுக்கு மத்தியில், வேலெடுத்தவர்களெல்லாம் வீரர் கள் அல்ல நானொருவன்தான் வேலவன் என்று ஞானவேல் கையில்லேந்தி, சிங்கார மடந்தையர் இருவருடன் முருகன் அன்று தேரில் பவனிவந்தக் காட்சி பக்தர்களின் நெஞ்சைத் தொட்டு நிற்கிறது.

எல்லாம் யாம் அறிவோம், என்னிலிருந்தே சர்வமும் ஆரம்பம், எல்லாம் எமக்குள் அடக்கம் என்கின்ற ஒரு சிங்காரப் புன்னகையைப் பார்த்துக் கொண்டே பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் தமது வினைகளைத்தீர்த்துக் கொண்டார்கள். பக்தர்களின் ஆனந்தக் கண்ணீர் மழையை பார்த்து வருணனும் ஒதுங்கிக் கொண்டான். முருகனின் அலங்காரக் கோலத்தை முருகனடியார்கள் தமது நெஞ்சிலே ஏற்றி, தாம் முருகனின் அடியார்கள் என்கின்ற எண்ணத்தில் பெருமைப் பட்ட நாள் முருகன் தேரேறியநாள்.

ச ஆனந்ததியாகர்
செயலாளர் சைவமுன்னேற்றச்சங்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழோசை
THAMIZHOSAI

லண்டனில்

# தேரூர்ந்து வந்த திருமுருகன் வானூர்ந்து வந்த மலர்க்குவியல்

**ப**ல்லாயிரக்கணக்கான முருக பக்தர்களின் 'வேல் முருகா! வேல் முருகா! செந்தில் முருகா! கதிர்காமக் கந்தா! நல்லூர் கந்தா! லண்டன் முருகா! எம்துயர் துடைக்க வராயோ!' என்ற கோஷங்கள் வானைப்பிளக்க, பஜனைக் கோஷ்டிகள் தேர் முன்னும் பின்னுமாக முருகன் அருட்பாட்களை முழங்க, லண்டன் முருகன் வள்ளி தெய்வானை சமேதராய் அடியார்களுக்கு திருவருள் பாலிக்க தேரில் எழுந்தருளி வீதி வலம் வந்த காட்சி



எல்லோர் உள்ளத்தையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்திவிட்டது.

கிழக்கு இலண்டன் ஈஸ்றஹாமில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் செந்தில் முருகன் தேர்த்திருவிழா கடந்த ஞாயிறு அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டு 9வது ஆண்டாக நடைபெறும் இத்தேர்த்திருவிழாவினைக் கண்டு களிக்க பல்லாயிரக்கணக்காக பக்தர்கள் அங்கு குழுமினர். அன்று காலை 9.30 மணிக்கு முருகன் தலத்திலிருந்து புறப்பட்ட தெய்வபவனி, சுமார் மூன்று மைல் தூரத்தைச் சுற்றி அடியார்களுக்கு அருள் பாலித்து, பி.ப.1.30 மணிக்கு ஆலயத்தை வந்தடைந்தது.

ஆடிக்கிருத்தியை மையமாக வைத்து இக்கோவில் கொடியேற்ற விழா கணிக்கப்பட்டு தேர்திருவிழா நிர்ணயிக்கப்படுவதாக கோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ நாகநாத சிவம் குருக்கள் அவர்கள் குறிப்பிட்டார்கள். இத்தேர்த்திருவிழாவைச் சிறப்புடன் நடத்துவதற்கு சில தினங்களுக்கு முன்னர் திருவருள் செயலாக இங்கு வந்திருந்த சென்னை ஸ்ரீ காளியம்பாள் கோவில் பிரதம குரு ரி.எஸ்.சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் அவர்கள் தேர்த்திருவிழா மகிமையைக் குறிப்பிட்டார்கள்.

கொடியேற்றத்துடன் நடைபெறும் திருவிழா ஒவ்வொன்றிற்கும் காரணம் உண்டென்றும், இவற்றுள் தேர்த் திருவிழா மிகமுக்கியமானது என்றும் அவர் கூறினார். 'ஆண்டவன், அடியார்கள் அனைவருக்கும் திருவருளைப் பாலித்து காட்சி கொடுப்பதற்காக தேரில் எழுந்தருளி திருவுலா வருகிறார்' என்றார் சிவாச்சாரியார்.

இதில் உண்மை உண்டு என்பதை உணர்ந்த பக்தர்கள் பல்லாயிரக் கணக்கில் வருகைதந்து அமைதியும் அடக்கமும், தெய்வீக சிந்தனையுமாக தெருத்தெருவாக நின்று கருணாமூர்த்தி முருகனின் திருவருளை வேண்டி நின்று வழிபட்ட காட்சி கண்கொள்ளாக் காட்சி.

ஆங்கில நாட்டில் பிறந்து வளர்ந்த தம் சிறார்களுக்கு இந்த தத்துவத்தை பல தாய், தந்தையர்கள் ஆங்கில மொழியில் விளங்க வைத்த- சமய நெறியைப் புகுத்தும் அவர்களின் ஆர்வத்தை இத்தேர்த் திருவிழாவில் காண முடிந்தது.

தேர்த்திருவிழாவின் போது இங்கு முதன்முறையாக நாதஸ்வர கச்சேரி இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இன்று வானொலியிலும், தொலைக் காட்சியிலும் நாதஸ்வர கச்சேரிகளைக்கண்டு களித்த லண்டன் வாழ் தமிழ் மக்களை- குறிப்பாக இளம் சந்ததியினர்களை மிக கவர்ந்தது. மிக உன்னிப்பாக ரசித்தனர். இந்த நாதஸ்வர வித்வான்கள் பாரிஸ் நாட்டிலிருந்து அழைக்கப்பட்டிருந்தார்கள். தேர்ப் பவனியுடன் பக்தி அலைகளைப் பரப்பி வந்த பெருமை பஜனைக் கோஷ்டிகளுக்குரியதாகும். ஐந்து பிரிவாகி ஆங்காங்கே கோஷ்டி கோஷ்டியாக நின்று பக்திப்பரவசம் நிறை முருக பாடல்களைப்பாட, பக்தர்களும் சேர்ந்து பாட, பக்தி மிகுதியால் பலர் ஆட, வீதியெல்லாம் தமிழ் முழக்கம் முழங்க, அரோகரா என்ற கோஷம் எல்லோர் நாவிலும் ஒலிக்க, தெய்வீக உணர்வை எல்லோரிடையேயும் ஏற்படுத்தின.

ஈழத்திலும், தமிழகத்திலும் இடம்பெறுவது போன்ற காவடி ஆட்டமும் இடம்பெற்றால் நன்றாக இருக்குமென்று பலர் பேசிக் கொண்டனர். நேர்த்திக் கடனை தீர்ப்பதற்காக பல பெண்கள் கற்பூரச் சட்டி ஏந்தி வந்தார்கள்.

எமது நாடுகளிலுள்ள சித்திரத் தேர்போல் இங்கு அமைக்க முடியவில்லையென்றாலும், பல்வகையான புஷ்பங்களினால் லண்டன் முருகன் தேர் அலங்கரிக்கப்பட்டிருந்தது ஒரு தனிச் சிறப்பாக இருந்தது. எப்படி இப்படி குவியல், குவியலாக புஷ்பங்களைப் பெற்றார்கள் என்று கோவில் நிர்வாகி திரு சம்பத்குமார் அவர்களைக் கேட்டபோது "முருகன் பம்பாயில் ஓர் அன்பரை ஏற்படுத்தித்தந்தார்" என்றார். அவர் வேறுயாருமல்ல அங்குள்ள விமான நிலைய பொறுப்பதிகாரி திரு வெங்கட நாராயணன் என்பவர். அவர் ஆண்டு தோறும் லண்டன் முருகனுக்கு குவியல் குவியலாக புஷ்பங்களை சரியான நேரத்தில் கொண்டு வந்து சேர்ப்பாராம். தேர்த்திருவிழாவை கண்டு களித்துக் கொண்டிருந்த திரு வெங்கட நாரயணனை அறிமுகம் செய்து வைத்தார் சைவமுன்னேற்றச்சங்க பிரமுகர் முருகதாஸ். "எப்படி இவ்வளவு புஷ்பங்களை முருகன் கோவிலுக்கு அனுப்புகின்றீர்கள்" என்று அவரிடம் கேட்டபோது "இதெல்லாம் அவன் செயல்" என்றார்.

இப்படி பல திருவருள் செயலுடன் நடைபெற்ற தேர் திருவிழாவை கண்டு களித்துக் கொண்டிருந்த பக்தர்களுக்கு ஒரு சோதனையும் ஏற்பட்டது. தேர்ப்பவனி ஆரம்பமானபோது வழமைபோல் வருணபகவான் தன் வருகையைக் காட்ட முற்பட்டான். தீர்த்தம் தெளிப்பது போல் துளிகள் விழுந்தன; கருமேகங்கள் மழை பொழியும் போல் இருண்டன. ஆனால் பக்தர்கள் "முருகன் மழை பெய்ய விடார்" என்று நம்பிக்கை கொண்டனர். தேர்வீதி வலம் வரும்போது ஏதும் நிகழக்கூடாது என்று முருகனை வேண்டி நின்றனர். தேர்ப்பவனி புறப்பட்டது. நீர் துளிகள் நின்றன. ஆனால் இடையிடையே மழை வந்துவிட்டது போன்று மேலும் பல சோதனைகள். தேர் மீண்டும் ஆலயத்தை வந்தடையும் வரை வருணபகவானின் மிரட்டல் பலிக்கவில்லை. இது முருகனின் திருவருள் செயல் என்று பக்தர்களிடையே நம்பிக்கை வலுஏற்பட்டது. தேர்ப்பவனி வந்த வீதியெல்லாம் தண்ணீர்ப் பந்தல் சேவை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நாட்டின் சூழலுக்கேற்ப, காப்பி, தேநீர், குளிர்பானம், வடை, கடலை, பாயாசம் போன்றன வழங்கி பக்தர்களை உபசரித்த காட்சி மற்றுமோர் சிறப்பு அம்சம். மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து இந்த தண்ணீர்ப் பந்தல் சேவையை ஆற்றிவருகிறது சைவமுன்னேற்றச்சங்கம்.

இத்தேர்த்திருவிழாவிற்கு, ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து பலர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. பிரித்தானிய நாட்டிலும் பல பகுதிகளில் வாழும் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் வந்திருந்தனர்.

"கோணேசர் தேர்த்திருவிழாவைப் பார்த்து பல வருடங்களாகி விட்டன. இன்றைய தேர்த்திருவிழாவைப் பார்த்ததில் அங்கு சென்று வந்தது போன்ற ஒரு திருப்தியைக் கண்டேன்" என்றார் திருமலை அன்பர் ஒருவர்.

"மாமங்கப்பிள்ளையார் ஆடி அமாவாசை தீர்த்த விழாவை கண்டு கழித்து ஐந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இன்று இத்தேர்த் திருவிழாவில் கலந்து கொண்ட பின்னர் இன்னும் மூன்று தினங்களில் வரும் ஆடி அமாவாசை தீர்த்தத்தை நினைவுக்கு கொண்டுவந்தது. ஒரு கணம் மட்டுநகர் சென்று வந்ததாக உணர்கின்றேன்" என்றார் மட்டுநகர் நண்பர் ஒருவர். கொழும்பில் ஆடிவேல் விழாவினை 1983க்கு பின்னர் பார்க்க முடியாத அன்பர் ஒருவர்- இத்தேர்த்திருவிழா ஆடிவேல்விழாவினை பார்த்துக் களித்தது போல் இருந்தது என்றார்.

மூன்று மணித்தியாலங்களாக யாழ்ப்பாணம் நல்லூர் வீதியில் நடமாடி நல்லூர் தேர் திருவிழாவையா கண்டு களித்தோம் என்ற பூரிப்பை பலர் தெரிவிக்கக் கேட்கக் கூடியதாக இருந்தது.

இதேபோன்று மலேசியா, மொறிசியஸ் நாட்டு தமிழ்மக்கள் தங்கள் தங்கள் நாடுகளில் நடைபெறும் விழாக்களில் கலந்து கொண்டது போன்ற ஒரு மன நிறைவைக் கொண்டிருந்தனர். பிரித்தானிய நாட்டில் முற்றிலும் வேறுபட்ட மேற்கத்திய சூழலில் தமிழ் கலை கலாச்சாரமும் சைவ சமய நெறியும் பிரதிபலிக்க தேர்த் திருவிழாவை சிறப்புடன் ஏற்பாடு செய்துவரும் திரு சம்பத்குமார் அவர்களை இவ்வொழுங்குகளைப் பற்றி கேட்டபோது

"இதெல்லாம் யாரோ ஒருவன் நடத்தி வருகின்றான். நாம் ஒரு கருவியாக செயல்படுகிறோம்" என்றார். இவ்வளவு சிறப்பாக தேர் திருவிழா நடைபெற ஏற்பாடுகள் செய்துள்ள நிருவாகிகளின் திறமைகளைப் பாராட்டாமலிருக்க முடியாது. அதுவும் ஆங்கில நாட்டில் சமய ஊர்வலம் நடத்துவது இலகுவான காரியமல்ல. எல்லோரும் இன்புற்று முருகன் அருளைப்பெற இதுபோன்ற தேர்ப் பவனி பெரிதும் பயனுள்ளதாக அமைந்துவிட்டது.

இலண்டன் ஸ்ரீமுருகன் தேர்த்திருவிழா இங்கு வாழும் பன்னாட்டுத் தமிழர்களுக்கும், நிறைவையும், ஆத்மீக ஈடேற்றத்தையும் அளிக்கும் பெருவிழாவாக சிறப்புற்றுள்ளது.

**ஐ.தி.சம்பந்தன்**

படப்பிடிப்பு:- கிருஷ்ணராஜா



# பெருமை சேர்த்த நாள்

லண்டன் ஸ்ரீ முருகனலாய தேர்த்திருவிழா26.7.92 ஞாயிற்றுக்கிழமை மறக்கமுடியாத ஒருநாள். அன்றைய காலைப்பொழுது நெஞ்சைவிட்டகலாத உன்னதப் பொழுது. சிந்தனையைச் சிலிர்க்கச் செய்து கல்நெஞ்சைக் கரைத்துக் கனியாக்கி, கண்களைத் துளிர்க்கச் செய்த ஒரு நிகழ்ச்சி லண்டன் ஸ்ரீ முரகனாலய தேர்த்திருவிழா.

நான்தான் அழகன், ஆயிரம்கோடி மன்மதர்கள் ஒன்றினைந்தாலும் என்னழகிற்கு ஒப்பாகுமா என்று கேட்டது அத்திருக்கோலம். கோடி சூரியப் பிரகாசம் என்வதனத்திலே இருக்கிறது என்று அத்திருமுகம் காட்டியது. முருகனிடம் அணிகலனாய் இருப்பதால் நாம் மிளிர்கின்றோம் என்றன பொன்னாபரணங்கள். எங்கெங்கோ பூத்த மலர்கள் எல்லாம் நறுமணங்கமழும் பூமாலைகளாக, முருகனின் திருத் தோள்களை அலங்கரிக்க நாம் தவம் இருந்து இப்பேறு பெற்றோம் என அவன் மேனியை தழுவித் தவழ்ந்தன. இத்தனைச் சிறப்புகள், இன்னும் ஆயிரம் சிறப்புகளுக்கு மத்தியில், வேலெடுத்தவர்களெல்லாம் வீரர் கள் அல்ல நானெருவன்தான் வேலவன் என்று ஞானவேல் கையில்லேந்தி, சிங்கார மடந்தையர் இருவருடன் முருகன் அன்று தேரில் பவனிவந்தக் காட்சி பக்தர்களின் நெஞ்சைத் தொட்டு நிற்கிறது.

எல்லாம் யாம் அறிவோம், என்னிலிருந்தே சர்வமும் ஆரம்பம், எல்லாம் எமக்குள் அடக்கம் என்கின்ற ஒரு சிங்காரப் புன்னகையைப் பார்த்துக் கொண்டே பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் தமது வினைகளைத்தீர்த்துக் கொண்டார்கள். பக்தர்களின் ஆனந்தக் கண்ணீர் மழையை பார்த்து வருணனும் ஒதுங்கிக் கொண்டான். முருகனின் அலங்காரக் கோலத்தை முருகனடியார்கள் தமது நெஞ்சிலே ஏற்றி, தாம் முருகனின் அடியார்கள் என்கின்ற எண்ணத்தில் பெருமைப் பட்ட நாள் முருகன் தேரேறியநாள்.

**ச ஆனந்தியாகர்**
செயலாளர் சைவமுன்னேற்றச்சங்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்